# ஞானச்சுடர்

## சந்நிதியான் ஆச்சிரமம்.

ஆனி

2013




வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை



# குறள்வழி

**ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்.**

பொருள் : ஒழுக்கம் எல்லார்க்கும் சிறப்பு அளித்தலால் உயிரினும் பார்க்க உயர்வாக அதனைக் காத்தல் வேண்டும்.


(131)

**பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்**
**தேரினும் அஃதே துணை.**

பொருள் : ஒழுக்கத்தைப் பாதுகாத்தல் வேண்டும்; இறுதி வரையில் அதுவே துணையாக நிற்பது.

(132)

---



# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

## முத்தி நல்குமே

### குறள் வெண்செந்துறை

தான தருமங்கள் தவமும் புரியுங்கள்
ஞான வீடு நமக்கெளி தாமே 1


பூவின் மணம்போற் பொருந்திய புருடனை
நாவினால் நமச்சி வாயவென் றுரைமின்! 2

ஆவிக்கு ளாவி யாகிய வமலனைச்
சேவிக்க வல்லார் சிவகதி பெறுவார் 3

பாவிக ளறியார் பரம்பொருள் பதமலர்
கூவி யழைமின் கூற்றுவன் வருமுன் 4

உன்னை முழுவதும் ஒப்புக் கொடுத்தால்
அன்னையைப் போலே யாதரிப் பாரே 5

# ஞானச்சுடர்



வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை





| | | |
|---|---|---|
| அண்ணாமலையின்... | செல்வி செ. ஜடா | 01 -02 |
| போதனையும் சாதனையும் | குமாரசாமி சோமசுந்தரம் | 03 -04 |
| திருவண்டப்பகுதி | சு. அருளம்பலவனார் | 05 -08 |
| சைவக்களஞ்சியம் | – | 09 -10 |
| கந்தரநுபூதி | வாரியார் சுவாமிகள் | 11 -13 |
| பிரமனும் சிறைவாசமும் | நா. நல்லதம்பி | 14 -16 |
| ஸ்ரீ குருவாயூரப்பன் என்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 17 -19 |
| பானமும் ஞானமும்... | க. தெய்வேந்திரம் | -20 |
| உயிருக்கு உருவம் உண்டா? | செல்வி பா. வேலுப்பிள்ளை | 21 -22 |
| ஸ்ரீ ரமண நினைவலைகள் | – | 23 -25 |
| படங்கள் தரும் பதிவுகள் | – | 26 -27 |
| பாரதப்போரில்... | ஆ. இராசரத்தினம் | 28 -31 |
| திருமந்திரக் கதைகள் | கே.வி. குணசேகரம் | 32 -33 |
| ஓம் சிவலிங்காய நம | சிவ. சண்முகவடிவேல் | 34 -36 |
| காளமேகம் பாடல்கள் | – | 37 -40 |
| தொண்டர் நாள்தொறும்... | செ. பாலச்சந்திரன் | 41 -43 |
| நித்திய அன்னப்பணி | – | -44 |
| சைவத் திருக்கோயிற்... | கா. கைலாசநாதக்குருக்கள் | 45 -48 |
| இந்துப் பண்புகள் | இரா. சாந்தன் | 49 -51 |
| சைவ சமய வினாவிடை | ஆறுமுகநாவலர் | 52 -53 |
| சிறுவர் கதைகள் | – | 54 -56 |
| ஈசா வாஸ்ய உபநிஷதம் | பூ. சோதிநாதன் | 57 -58 |
| தமிழகத் திருக்கோயில்... | வல்வையூர் அப்பாண்ணா | 59 -64 |



அன்பளிப்பு: மலர் ஒன்று 30/= ரூபா

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்



# ஞானச்சுடர் வைகாசிமாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

வைகாசிமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையை திரு சி. சிவபாலசிங்கம் (கிராம உத்தியோகத்தர்) அவர்கள் நிகழ்த்தினார்கள். ஆற்றங்கரை வேலவனின் அருட்கடாட்சம் நிறைந்த சந்நிதியான் ஆச்சிரமத்தின் செயற்பாடுகள் யாவும் புனிதம் வாய்ந்தவை. எதுவாயினும் அதிலே ஒரு தூய்மை - நேர்த்தி நிறைந்திருக்கும்.

அடுத்து அவர் தனது உரையில், ஆச்சிரமத்தினால் வெளியிடப்பட்டுவரும் ஞானச்சுடர் மலரானது, ஏதோ ஒரு வகையில் மனிதனது வாழ்க்கைக்குத் தேவையான அம்சங்களை தன்னகத்தே கொண்டு வெளிவருகின்றது என்று சபையோருக்குக் கூறினார்.

தொடர்ந்து கூறுகையில், இனிவரும் காலங்களிலும் ஞானச்சுடர் மலரானது தன்னகத்தே பல்வேறு அம்சங்களைக் கொண்டு எல்லா சைவர்களும் பயன்பெற்று அதன்படி ஒழுகுவதாக அமைய வேண்டும் என்றுகூறி தனது வெளியீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:-

185ஆவது ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையை திரு துரை. கணேசமூர்த்தி (ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி) அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில் 2013 தை முதல் ஞானச்சுடர் மலரானது புதிய அட்டைப்படத்துடன் தோற்றமளிப்பதை நாம் அனைவரும் எமது கண்களுடாகக் காண்கிறோம். அத்தோடு இச்சுடரினுள்ளே பல்வேறு ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளமையையும் காணலாம்.

அடுத்து அவர் தனது உரையில் இச்சுடரில் சிறுவர்களுக்கான ஒரு பகுதி ஒதுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. ஏனென்றால் அவர்களே எதிர்காலத்தின் சிற்பிகள்- அவர்களின் ஆற்றலை வளர்க்கும் முகமாக இச்சுடர் அமைந்துள்ளதாகவும், ஆன்ம ஈடேற்றத்திற்குத் தேவையான விடயங்கள் யாவும் தெளிவான முறையில் இலகுவான சொற்பிரயோகங்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது என்று சபையோருக்கு எடுத்துக் கூறினார்.

மேலும் அவர் கூறுகையில், இச்சுடர் அகில உலகம் முழுவதிலும் எங்கு சைவர்கள் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் சென்று அவர்களுக்கு நல்ல சமயக் கருத்துக்களைப் புகட்டி வருகின்றது என்று கூறினார். இனிவருங் காலங்களிலும் ஞானச்சுடர் மலரானது பல்வேறு அம்சங்களைத் தன்னகத்தே கொண்டு திகழ வேண்டும் என்று கூறித் தனது மதிப்பீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்

பலர் தங்களுடைய செயற்பாடுகளை வேலைத்தளத்திலோ, சமூகத்திலோ மேற் கொண்டு செல்லும்பொழுது பல்வேறு பிரச்சினைகள் சவால்கள் என்பவற்றை எதிர்நோக்கி னாலும் இவற்றுக்கெல்லாம் முகங்கொடுத்து தமது இலக்குகளில் வெற்றியடைய வேண்டும் என்ற பேரவாவோடு செயற்பட்டு வெற்றி காண்பதைக் காண முடிகின்றது. இவர்கள் பல தடைகளையும் தாண்டி பல கஷ்டங்கள் மத்தியில் தமது நோக்கினை அடையும் போது அனைத்துப் பிரிவினரிடமிருந்தும் அவர்களுக்குரிய கௌரவம் வழங்கப்படுகின்றது.

ஆனால் இத்தகைய இயல்பான தன்மைகளுக்கு மாறான ஒரு குழப்பமான தன்மையும் சமூகத்தில் அதிகரித்து வருகின்றது. அதாவது இயல்பாக தனது கடமைகளைச் சிறப்பாகவும் திருப்தியாகவும் செய்வதனால் கிடைக்கும் புகழ், பாராட்டு என்பன கிடைக்க வேண்டும் என்பதற் காகவே கடமை வீரர் போலவும், சமூகத்திற்கு சேவை செய்பவர் போலவும் நடிக்கின்ற தன்மை அதிகரித்து வருகின்றது. அது மட்டுமன்றி இன்னும் சிலர் பதவிகளை வலிந்து பெறமுயற் சிப்பதும் அதற்காக வெளிப்படையாகவே குறுக்கு வழிகளைக் கையாளுகின்ற பல சம்பவங் களும் பல இடங்களிலும் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது.

ஆலயம், வித்தியாலயம், பொது நிறுவனங்கள் போன்ற புனிதமான ஸ்தாபனங்களில் இவ்வாறானவர்கள் செயற்பட முயற்சிக்கும்போது அது சமூக ரீதியான மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பது திண்ணம். ஆகவே இவ்வாறான ஒவ்வாத பண்புள்ளவர்களை நாம் அனுமதிக்கும்போது எமது சமூகம் பல்வேறு பிரச்சினைகளையும் எதிர்நோக்க வேண்டி ஏற்படுகிறது. பொதுவாக இவ் வகையான புகழ், பெருமை, பதவி, அதிகாரம் போன்றவற்றை விரும்புகின்றவர்களை சமூகம் திருத்துவதென்பது கடினமான விடயம். "திருடராய்ப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது" என்பதுபோல இவ்வாறு ஒவ்வாத இயல்புள்ள வர்கள் சமூகத்தின் நலனைக் கருத்திற் கொண்டு தாங்களாகவே திருந்த முயற்சிக்க வேண்டும்.

# சகமெல்லாம் போற்றும் சந்நிதியிற் சண்முகனே

கந்தனே யாற்றங்கரை கலைக்கோயில் விற்றிருக்கும்
எந்தன்சுடர் வடிவேலா இலங்கு தொண்டைமா னாற்றூராய்
சிந்தனைக் கெட்டாத செல்வச்சந் நிதியானே
எந்தனை வாட்டுநோயை ஏகிடவே யருளாயோ

எந்தைவடி வேலிருக்க எனக்கென்ன பயமென்று
அந்த உரிமைகொண்டு அஞ்சாமல் திரியுமென்னை
வந்தே யடிப்பதுபோல் பகலிரவாய் வாட்டாதே
கந்தா கதிர்வடிவேல் கையேந்தும் கற்பகமே

நாளும் உனைப்பணியும் நாயேனைச் சிறியோர்கள்
பாழும்வகை சந்நிதியான் பத்தனிவர் என்றலட்டி
தாளுமுறை கேட்கும் தன்மையிலே வைத்துவிட்டார்
சூழும்நற் சந்நிதிவாழ் சுடர்நெடுவேற் பெருமானே

இன்றளவும் என்வேலை நான்செய் வேன் உன்னருளால்
சென்றநாட்போல் இனிமேலும் செய்யநல்ல பலம்தருவாய்
கன்றழவும் கதறாத பசுவுண்டோ கார்த்தி கேயா
நன்றுறையும் சந்நிதிவாழ் நல்லவுயர் சிவக் கொழுந்தே

ஒன்றாலும் குறைவின்றி உயர்மனிதப் பிறப்பின்பலன்
நன்றாக நான்பெறவே நாடிக்கொடி நாட்டிவிட்டாய்
குன்றாடும் முத்துக் குமாரசுவா மித்தெய்வமே
பொன்றாத புகழ்தந்தாய் போற்றுசெல்வச் சந்நிதியாய்!

போதனைசெய் சைவமுறை போற்றி யுனைப் பணிவேன்
சோதனைகள் செய்தாலும் சோதியுன்றன் கால்பிடித்துச்
சாதனையாய் வெல்லுவேன் சங்கரனின் மகன் நீயென்
வேதனைகள் நீக்கிட்டால் அஃதுமுன் புகழன்றோ

சந்நிதி முருகனைச் சண்முக நாதனை
பொன்னிதி பொருளன்றி பூமிமேல் ஆசைவிட்டு
மன்னியவுன் அன்புடனே அருளையே கேட்டுய்வீர்
நன்னிலம் சேருதற்கு நாடியவன் கால்பிடியீர்.



-முதுபெரும்புலவர் வை.க. சிற்றம்பலம்-

# ஆனிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

அ. பரமநாதன்
(சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்)

Dr க. சிவநேசன்
(நல்லூர், யாழ்ப்பாணம்)

பொ. வியாகேஸ்
(நிர்வாகி, பீக்கன் கல்வி நிறுவனம், உடுப்பிட்டி)

ம. ஸ்ரீகாந்தன்
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)

செல்வி ஞானசரஸ்வதி சின்னத்தம்பி
(மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில்)

த. ஜெகரெத்தினம்
(விஜிதா ரெக்ஸ், யாழ்ப்பாணம்)

கந்தையா ஏகாம்பரம்
(புறூடிலேன், அரியாலை)

சி. நடேசமூர்த்தி J.P
(வங்கி ஊழியர், அச்சுவேலி)

சி. கதிரவேலு
(தொண்டைமானாறு)

ஐ. சிவநாதன்
(மருதம், நெல்லியடி)

செல்வி S. ஜடா
(புலோலி தெற்கு, புலோலி)

அ. கணேசமூர்த்தி
(உரும்பராய் வடக்கு, உரும்பராய்)

வ.சி. கணபதிப்பிள்ளை
(ஆவரங்கால், புத்தூர்)

திருமதி செ. தவமணி
(சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி)

உரிமையாளர்
(புதிய நதியா நகைமாடம், யாழ்ப்பாணம்)

தலைவர் / செயலாளர்
(அளவெட்டி ப.நோ.கூ.சங்கம், ஊழியர் தொழிற்சங்கம்)
**பா. பிரதீபன்**
(கும்பளாவளை, அளவெட்டி)
**ஆ. ஜெயக்குமாரன்**
(கப்பூது, கரவெட்டி)
**உரிமையாளர்**
(அம்பிகா நகைமாளிகை, யாழ்ப்பாணம்)
**கு. சோதிராசா**
(தொல்புரம் மேற்கு, சுழிபுரம்)
**த. கருணாகரன்**
(கரவெட்டி கிழக்கு, கரவெட்டி)
**உரிமையாளர்**
(பேபி போட்டோ, கந்தர்மடம்)
**ப. இராசலிங்கம்**
(செட்டியமடம், வட்டுக்கோட்டை)
**மு. வைகுந்தவாசன்**
(இலங்கை வங்கி, அச்சுவேலி)
**S.விக்னேஸ்வரராசா**
(சுப்ராங் தொலைத்தொடர்பு சேவை, கதிரிப்பாய்)
**சி. இராமகிருஸ்ணா ஆசிரியர்**
(வடமராட்சி கணிதக்கல்வி மூலவள நிலையம், கரணவாய்)
**மு. இராசேந்திரா**
(தும்பளை, பருத்தித்துறை)
**பொ. வெங்கடேஸ்வரன்**
(நகரசபை, பருத்தித்துறை)
**வ. பாலசிங்கம்**
(கிராம சேவையாளர், கரணவாய்)
**ம. ஸ்ரீஸ்கந்தராசா**
(சிறுப்பிட்டி, நீர்வேலி)
**உரிமையாளர்**
(வேலழகன் இரும்புக்களஞ்சியம், சுன்னாகம்)
**இ. சரவணபவன்**
(அராலி மத்தி, வட்டுக்கோட்டை)
**உரிமையாளர்**
(அம்பிகாபதி பான்ஸ்கூட், யாழ்ப்பாணம்)


கோ. யோகலிங்கம்
(கிளை. முகாமையாளர், புத்தூர்)
சி. நவரெத்தினம்
(துவாரகை, கரணவாய்)
திருமதி அ. குணநாயகம்
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)
ப. சிவராசா
(தூதாவளை, கரணவாய்)
திருமதி தங்கராசா ஈஸ்வரி
(கம்பர்மலை, வல்வெட்டித்துறை)
S. குணராசா
(தாளையடிலேன், திருநெல்வேலி)
உ. செந்தூரன்
(பிரதான வீதி, அச்சுவேலி)
வை. கமலநாதன்
(வர்த்தக முகாமையாளர், மானிப்பாய் கோ.ப.ப.நோ.கூ.சங்கம்)
திருமதி கற்பகமலர் இரத்தினசிங்கம்
(ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்)
பொ. பாஸ்கரன் J.P
(சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை)
கு. சிவபாலராஜா
(பொது சுகாதார பரிசோதகர், நல்லூர்)
இ. கதிர்காமநாதன்
(வங்களா ஒழுங்கை, மல்லாகம்)
க. ஆனந்தராசா
(வதிரி, கரவெட்டி)
இரா. அருட்செல்வம்
(A.T.C. ரியூசன் சென்ரர், இணுவில்)
சி. துரைராசா
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)
செ. முருகதாஸ்
(சாந்தை, பண்டத்தரிப்பு)
சு. சிவனேசன்
(கந்தர்மடம், யாழ்ப்பாணம்)
செல்லத்துரை தங்கராசா
(அன்னை இல்லம், உரும்பராய்)

**வே. கணபதிப்பிள்ளை**
(குலானை, கரவெட்டி)
**திருமதி இராசரத்தினம் அருந்ததி**
(போதராமடம், துன்னாலை)
**Dr V. கணேசவேல்**
(சுந்தரவேல் வைத்தியசாலை, அல்வாய்)
**திருமதி T. நடராஜா**
(சந்தனத்தரை, உடுப்பிட்டி)
**திருமதி சிதம்பரநாதன் சரஸ்வதி**
(குமுளடி, அல்வாய்)
**சி. ஆனந்தராசா**
(ஆலடி, பொலிகண்டி)
**சி. சிறீகாந்தன்**
(கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்)
**ஆ. சோமசுந்தரம்**
(சிவகாமி அம்மன் கோவிலடி, இணுவில்)
**நடராசா செவ்வேள்**
(தணிகை, நெல்லியடி)
**க. பூலோகரட்ணம்**
(அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவில்)
**நா. வடிவேஸ்வரன்**
(தும்பளை, பருத்தித்துறை)
**சு. கிருபானந்தன்**
(கே.கே.எஸ் றோட், இணுவில்)
**ஆ. சிவராசா**
(கரணவாய் தெற்கு, கரவெட்டி)
**செ.மகேந்திரவர்ணன்**
(கற்பகப் பிள்ளையார் கோவில்லேன், உரும்பராய்)
**கு. நித்தியானந்தன்**
(பலாலிவீதி, யாழ்ப்பாணம்)
**ச.சிவனேசன்**
(கேணியடி, திருநெல்வேலி)
**திருமதி அ. வினிதா**
(நல்லூர், யாழ்ப்பாணம்)
**S. ராகவன்**
(பிரம்படி, கொக்குவில்)

# அண்ணாமலையின் அற்புதத் தத்துவம்

செல்வி செ. ஜடா அவர்கள்


நினைத்தாலே முத்தி தரும் திருத்தலம் அண்ணாமலை திருத்தலம் என்பதை நாம் அறிவோம். திருமாலும் பிரம்மாவும் தாங்கள்தான் பெரியவர்கள் என்று ஒருவருக்கொருவர் வாதம் செய்தார்கள். அப்போது பிறைசூடிய பெருமானாகிய எம்பெருமான் இத் திருத்தலத்திலேயே ஜோதிவடிவாகத் தோன்றி என்னுடைய அடி முடியை எவர் காண்கின்றார்களோ அவரே பெரியவர் என்று கூறினார். திருமால் வராக அவதாரம் (பன்றி) எடுத்து பூமியைக் குடைந்து கொண்டே சென்றார். பிரம்மா அன்னப் பறவை வடிவம் கொண்டு இறைவனின் முடியினைக் காண்பதற்குப் பறந்து சென்றார். ஆனால் இருவராலும் எம் பெருமானின் அடி முடியினைக் காணமுடியவில்லை.



பூமியைக் குடைந்து சென்று களைப்படைந்த வராகம் தன்னால் பெருமானின் அடியினைக் காண முடியாது என்று தெரிந்து திரும்பியது. அதேபோல பெருமானின் முடியினைக் காணப் பறந்து பறந்து உயரே சென்ற அன்னப்பறவையின் இறகுகள் சோர்ந்து போயின. மேலே பறந்து செல்லச் செல்ல சிவபெருமானின் உருவம் வளர்ந்து கொண்டே சென்றது. தன்னால் சிவபெருமானின் முடியினைக் காணஇயலாது என்பதை பிரம்மதேவரும் அறிந்துகொண்டார். அதே சமயம் பெருமானின் தலைமுடியிலிருந்து நழுவி விழுந்த தாழம்பூ ஒன்று பூமியை நோக்கி வந்து கொண்டிருந்தது.

அப்போது பிரம்மதேவர் தான் சிவனின் முடியினைப் பார்த்ததாகச் சாட்சி சொல்ல வேண்டும் என்று அந்தத் தாழம்பூவிடம் சொல்ல அதுவும் அதற்கு உடன்பட்டது. வராக அவதாரம் எடுத்த திருமால் தன்னால் பெருமானின் அடியினைக் காணமுடியவில்லை என்று உண்மையை ஒப்புக்கொண்டார். பிரம்மதேவர் தான் முடியினைக் கண்டதாகப் பொய்யுரைத்தார். தாழம்பூவும் அதற்குப் பொய்சாட்சி கூறி ஒப்புதல் அளித்தது. பொய்யுரை

புகன்ற பிரம்மதேவருக்கு பூவுலகில் தனியாக ஆலயம் அமையாது என்றும், பொய் சாட்சி கூறிய தாழம்பூ என்னுடைய சந்நிதானத்திலிருந்து விலக்கி வைக்கப்படுகிறது என்றும் சிவபெருமான் ஆணை தந்தார். அதன் பிறகு திருமாலும், பிரம்மாவும் தங்களுக்குள் யார் பெரியவர் என்று வாதம் நிகழ்த்தியதை மன்னித்தருளும்படி வேண்டிக் கொண்டார்கள். அதன் பிறகு நீண்ட தன்னுடைய ஒளிவடிவத்தினை சிவபெருமான் சுருக்கிக் கொண்டார். இதுவே இப்போது "அண்ணா மலையாக" காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது. இந்த அண்ணாமலையானது அற்புதமான தத்துவத்தினை உள்ளடக்கியுள்ளது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். சகல ஐஸ்வரியங்களுக்கும் அதிபதியான மகாலட்சுமியின் கணவர் திருமால். கல்வி மற்றும் சகல கலைகளுக்கும் அதிபதியாக இருக்கக்கூடிய சரஸ்வதியின் கணவர் பிரம்மா. இந்த இருவருமே இறைவனின் அடி முடியினைக் காண முயற்சி செய்து தோல்வி கண்டார்கள். அதாவது செல்வத்தினைக் கொண்டோ அல்லது கல்வியின் மூலமாகவோ இறைவனைக் கண்டுவிடலாம் என்று நினைப்பது இயலாத காரியமாகும். இறைவனே மனது வைத்து தன்னுடைய காட்சியினைக் காட்டினாலன்றி கல்வி செல்வம் ஆகியவற்றால் இறைவனைக் காணமுடியாது என்கிற ஒப்பற்ற தத்துவத்தினை உணர்த்துகின்ற மலையே அண்ணாமலையாகும்.



கணக்கில்லாத செல்வங்களை நாம் வைத்திருக்கின்றோம். அதனால் இறைவனின் காட்சியினை நாம் கண்டுவிடலாம் என்று ஒருவர் நினைப்பது தவறாகும். அதேபோல சகல சாஸ்திரங்களையும் வேதங்களையும், மந்திரங்களையும் கற்று கல்வியில் மேம்பட்ட நிலையில் நாம் இருக்கின்றோம். ஆகையால் கடவுளின் காட்சி நமக்குக் கிட்டிவிடும் என்று நினைப்பதும் தவறாகவே முடியும்.

இதனை நம் அனைவருக்கும் உணர்த்துவதற்காகவே செல்வத்திற்கு அதிபதியின் கணவரும், கல்விக்கு அதிபதியின் கணவரும் இறைவனைக் காணும் முயற்சியில் தோல்வி கண்டார்கள் என்பது அண்ணாமலையின் அற்புதத் தத்துவமாக விளங்குகின்றது. "அன்பெனும் பிடியில் அகப்படும் மலையே" என்று இறைவனைக் குறிப்பிடுவார்கள். உண்மையான அன்பு ஒன்றிற்கே இறைவன் வசப்படக்கூடியவன் என்பதையும் நாம் மனதில் பதியவைத்துக் கொள்ளவேண்டும். இதன் காரணமாகத்தான் இறைவனைப் பற்றிக் குறிப்பிடும்போது அன்பினை இணைத்து "அன்பே சிவம்" என்று குறிப்பிடுகின்றோம்.

# பேதனையும் சாதனையும்

திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

நல்ல எண்ணங்கள், அவற்றின் வெளிப்பாடாக வருகின்ற நல்ல வார்த்தைகள் மற்றையோரை வாழ்விக்கின்றன என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். எனவேதான், எப்பொழுதும் மங்களகரமான வார்த்தைகளையே வீட்டிலும், வெளியிடங்களிலும் பயன்படுத்த வேண்டும் எனப் பெரியோர்கள் கூறியுள்ளனர். பண்பாகப் பேசுதல், இன்சொல் வழங்குதல் எனக்கூறும்போது, இதனையே கருதுகின்றோம்.

ஒரு குழந்தை எப்படிப் பேசக் கற்றுக்கொள்கிறது? மொழியறிவு, மொழியாற்றல் என்பவற்றை எப்படிப் பெற்றுக் கொள்கிறது? இவற்றிற்கு விடை காணப்படும்போது, பல விடயங்கள் புலனாகும். குழந்தை அதனது சமூகச் சூழலிலிருந்துதான் சொற்களைச் சேகரித்து, அவற்றைப் பயன்படுத்திப் பேசுகின்றது. அதாவது எண்ணங்களையும், உணர்வுகளையும் வெளிப்படுத்துகின்றது. தாய் தந்தை, சகோதரர், உறவினர், சுற்றத்தவர் என்பவர்களே சமூகச் சூழலில் இடம்பெறுகின்றனர். குழந்தைகள் உள்ள வீடுகளில், அக்குழந்தையோடு ஊடாடுபவர்கள், நல்ல வார்த்தைகளை, மங்களகரமான சொற்களை, பண்பான வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டியது அவசியம் ஆகும். குழந்தைகளுக்கு நல்ல சூழல் அமைய வேண்டும் என்று சொல்வது இதற்காகத்தான். அத்தகைய நல்ல குடும்பச் சூழலில் வளர்ந்து வருகின்ற குழந்தைகள், பண்பாகவும், அன்பாகவுமே பேசுவர்; பேச்சில் மங்களகரமான வார்த்தைகளையே உபயோகிப்பர் என்பது உறுதி. சாத்வீக குணமும், கோபம் கொள்ளாமையும் அவர்களிடம் காணப்படும் நல்லியல்புகளாகும்.

குழந்தை, பிள்ளைப் பருவத்தை எய்திப் பாடசாலைக்குச் செல்கின்றது. பாடசாலை பிள்ளைக்கு ஒரு புதிய சூழல். ஆசிரியர்கள், தம்மை ஒத்த மாணவர்கள், உயர் வகுப்பு மாணவர்கள் ஆகியோர் அங்கு உள்ளனர். அறிவு வளர்ச்சி பெறுவதற்குத்தான் பிள்ளை பாடசாலை செல்கின்றது என்று பலர் கருதுகிறார்கள். வெறுமனே அறிவு பெற்றுவிட்டால் மாத்திரம் கல்வி கற்றுவிட்டதாக எண்ணிவிடக்கூடாது. அறிவோடு, பண்புகளும், நல்லொழுக்கமும் வளர வேண்டும். மனப்பண்பு, பேச்சுப்பண்பு, நடைமுறைச் செயற்பண்பு ஆகிய மனிதப் பண்புகளைப் பிள்ளைகளில் வளர்ப்பதற்கு பாடசாலை ஆவன செய்ய

வேண்டும். இவ்வாறு அறிவு வளர்ச்சியும், பண்பு வளர்ச்சியும் ஒருங்கே நிகழும்போதுதான், கல்வி அர்த்தமுள்ளதாக அமைகின்றது. மனிதப் பண்புகள் எவை என்பதைப் பிள்ளைகள் அறிந்து கொள்ள வேண்டும். காலைப் பிரார்த்தனைக் கூட்டம் நடைபெறும்போது அவற்றைப் பற்றிய கருத்துரைகளை வழங்கலாம். வகுப்புகளில் பாடங்களைக் கற்பிக்கும் வேளையில் இடையிடையே சந்தர்ப்பங்கள் வரும்போது படிப்பனைகளையும்; செய்யத் தகுந்தன, செய்யத் தகாதன பற்றியும் எடுத்துக்கூறலாம். விளையாட்டு மைதானம், இலக்கிய மன்றம், சுற்றுலா போன்ற சந்தர்ப்பங்களை எல்லாம் பயன்படுத்தலாம். இயற்கை எவ்வளவோ பாடங்களைக் கற்றுத் தருகின்றது. அவற்றை எடுத்துக் கூறலாம். இந்த வகையில் பிள்ளைகளின் பண்பு பற்றிய அறிவு வளர்ச்சிக்கு வழிவகுக்கலாம். ஆனால் அத்தோடு நிறுத்தி விட்டால், பெற்ற அறிவு பயனுள்ளதாக அமைந்து விடாது. ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது. அறிவுக்குப் பயன், கற்றவற்றை வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகுதல்.

பிள்ளையின் அறிவு வளர்ச்சியைப் பரீட்சைமூலம் அளந்து அறிந்துகொள்ள முடியும். பிள்ளையின் பண்பு வளர்ச்சியை, அதன் நடத்தையைக் கொண்டுதான் மதிப்பீடு செய்ய முடிகின்றது. எனவே போதனையாளர்கள், வாழ்க்கையில் சாதனையாளர்களாகவும் விளங்கவேண்டும். ஆசிரியர்கள் மற்றும் வளர்ந்தவர்கள் முன்மாதிரியாக நடந்து காட்டும்போதுதான், அவர்களைப் பார்த்துப் பிள்ளைகளும் நல்லமாதிரி ஒழுகுவர். விஞ்ஞானம் கற்றுக்கொள்வதற்குக் கோட்பாட்டு அறிவும், செய்முறையும் அவசியம்போல, மனிதப் பண்புகளைக் கற்றுக்கொள்வதற்கும் நூலறிவும், செய்முறையும் முக்கியம் ஆகின்றன. ஆசிரியர்களுடன், வீட்டில் பெற்றோர்களும் சொல்லுக்கும் நடத்தைக்கும் இடையே முரண்பாடு தோன்றாதவாறு பார்த்துக் கொள்ளல் வேண்டும். அப்படி அவர்கள் நடந்தும் காட்டவேண்டும்.

ஒருவர் புகைத்தல் கூடாது என்று சொல்லிவிட்டுத் தாம் புகைத்தால்; மது அருந்துதல் ஆகாது என்று கூறிவிட்டுத் தாம் மது அருந்தினால், பார்த்துக்கொண்டிருக்கின்ற பிள்ளைகளிடம் முரண்பாட்டுணர்வு தோன்றுவது இயல்பு. கொலை, களவு என்பவை பாவச் செயல்கள் என்று கற்பிக்கிறார் ஆசிரியர். மரத்தை வெட்டுவது, காட்டை அழிப்பது பிழையென்றும் சொல்லிக்கொடுக்கிறார். பின்னர் கற்பித்தலின்போது, கள்ளக் கந்தன் வெள்ளைப் பூனையை வெட்டிக் கொன்றான் என்றும் மரத்தை வெட்டினான், காட்டை அழித்தான் என்றும் உதாரணங்கள் தரப்படுகின்றன. இதுவும் ஒருவகை முரண்பாடுதான். பூனையை அன்போடு வளர்த்தான், மரத்தை நாட்டினான் போன்ற நல்ல மங்களகரமான ஆக்கபூர்வமான உதாரணங்களைக் கூறுவதன்மூலம் முரண்பாடுகளைத் தவிர்க்கலாம்.

இவ்வாறு நன்கு சிந்தித்துப் பெற்றோர்களும் ஆசிரியர்களும் செயற்படுவதன்மூலம் நல்லதொரு சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்பதை உணர்வோமாக.

சிவபெருமானின் குடியிருப்பு சுடுகாடு. அதனை யார் விலைக்கு வாங்குவார்கள். அவருடைய அணிகலன் பாம்பு. உண்ணும் பாத்திரம் மண்டைஓடு. உண்ணுவது நஞ்சு. பூசுவது சுடலைப்பொடி. உடுப்பது தோல் இவை எதையும் யாரும் விரும்பி விலை தந்து பெறமாட்டார்கள். அவரும் அம்மலத்துடன் இருப்பவர். அதனால் அவரும் ஒன்றையும் வாங்கமாட்டார்.



(தொடர்ச்சி...



# திருவண்டப்பகுதி

## சிவனது தூலசூக்குமத்தை வியந்தது

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

## இணைக்குறளாசிரியப்பா

மறைந்த
சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்
(யாழ்ப்பாணம் - காரைநகர்)



கரும்பணக் கச்சைக் கடவுள் வாழ்க
அருந்தவர்க் கருளு மாதி வாழ்க
அச்சந் தவிர்த்த சேவகன் வாழ்க
நிச்சலு மீர்த்தாட் கொள்வோன் வாழ்க
சூழிருந் துன்பந் துடைப்போன் வாழ்க
எய்தினர்க் காரமு தளிப்போன் வாழ்க
கூரிருட் கூத்தொடு குனிப்போன் வாழ்க
பேரமைத் தோளி காதலன் வாழ்க
ஏதிலர்க் கேதிலெம் மிறைவன் வாழ்க
காதலர்க் கெய்ப்பினில் வைப்பு வாழ்க

**பதவுரை:-**

கரும் பணம் கச்சை கடவுள் வாழ்க- பெரிய படத்தினையுடைய பாம்பை அரைக்கச்சாக அணிந்த கடவுள் வாழ்க; அரும் தவர்க்கு அருளும் ஆதி வாழ்க- அரிய தவத்தினையுடையவர்களுக்கு அருள் செய்யும் முதல்வன் வாழ்க; அச்சம் தவிர்த்த சேவகன் வாழ்க- பக்குவான்மாக்களுக்குப் பிறவிப் பிணியால் வரும் அச்சத்தை நீக்கிய வீரன் வாழ்க; நிச்சலும் ஈர்த்து ஆட்கொள்வோன் வாழ்க- எப்போதும் மாற்சார சம்பந்தமாக வலிய வந்து இழுத்து அடிமைகொள்வோன் வாழ்க; சூழ் இரும்துன்பம் துடைப்போன் வாழ்க- உயிர்களை வந்து சூழ்கின்ற பெரிய வினைகளின் துன்பத்தை பற்றறக்கெடுப்பவன் வாழ்க; எய்தினர்க்கு ஆர் அமுது அளிப்போன் வாழ்க- தன்னை வந்து அடைந்தார்க்கு அரிய அமுதம் போன்ற திருவடிப்பேரின்பத்தைக் கொடுப்பவன் வாழ்க; கூர் இருள் கூத்தொடு குனிப்போன் வாழ்க- மிக்க இருளையுடைய பேருழிக்காலத்து இயற்றும் ஒடுக்கக் கூத்தொடு அதன் முடிவில் ஆடும் தோற்றக்கூத்தினை ஆடுவோன் வாழ்க; பேர் அமை தோளி காதலன் வாழ்க பெரிய மூங்கில் போலும் தோளினையுடைய உமையம்மையின் கணவன் வாழ்க; ஏதிலர்க்கு ஏது இல் எம் இறைவன் வாழ்க- அன்பினால் இயைபில்லாதவர்களுக்குத்

தானும் இயைபு இல்லாதவனாகும் எம் இறைவன் வாழ்க; காதலர்க்கு எய்ப்பினில் வைப்பு வாழ்க- அன்பராயினார்க்கு எய்ப்படைந்த காலத்திற் எதிர்பாராது கிடைத்த புதைபொருள் போன்றவன் வாழ்க.

கரும்பணக் கச்சைக் கடவுள் என்றது பாம்பை அரைக்கச்சாக அணிந்த இறைவனை, "வரியரவக் கச்சானை" "படவரவமொன்று கொண்டரையிலார்த்த பராபரனை" (நாவு 233:4; 234:3) எனத் தேவாரத்து வருவனவுங் காண்க. கரும்பணம்- பெரிய பணம். கருமை- பெருமையென்னும் பொருட்டாதல் "கருவலித் தடக்கை" (சீவக 2269) என்புழிக் "கருவலி- பெரியவலி" என நச்சினார்க்கினியர் உரைத்தமையானும் அறியப்படும். "கருமை கதழ்வு கயவுமூரி பெருமை பாடு மண்ணலுமதற்கே" எனத் திவாகரத்து (பண்பு) வருதலுங் காண்க. பணம் - படம். அ∴து ஈண்டுச் சினையாகுபெயராய்ப் பாம்பினை உணர்த்தியது. கச்சை- அரையிற் கட்டும் பட்டிகை. இறைவன் உலகங்களைத் தோற்றுவித்தற் பொருட்டுச் சுத்தமாயையைக் கலக்க அதனிடத்துப் பாம்பு மண்டலித்தாற் போலும் ஓரியக்க முண்டாகும். இறைவனையே பற்றுக்கோடாகக் கொண்ட அவ்வியக்கம் குண்டலினி சக்தியெனப்படும். அது நுண்ணுலகுக்கும் பருவுலகுக்கும் ஏதுவாகலின் அவ்விருவுலகினும் வியாபகமுடைய இறைவனுக்கு அரைக்கச்சுப் போல்வதாயிற்று.

அருந்தவர்- உயிர் உய்தி கூடுதற்குரிய அரிய தவத்தினையுடையவர். ஆதி- முதல்வன். அச்சம் தவிர்த்த என்றது பிறப்பிறப்பிற்குக் காரணமாகிய அறம்பாவம் என்னும் இரண்டின் பயத்தை நீக்கிய என்றவாறு. "ஒருகாத லடியார்தம் அடியனாக்கி அச்சந்தீர்த்தாட்கொண்டான்" (சக 28) "அளித்து வந்தெனக் காவவென் றருளியச்சந்தீர்த்த நின்" (செத் 10) என வருவன காண்க. சேவகன் என்றார் பிறரால் நீக்குதற்கரிய அச்சத்தை நீக்கியமைபற்றி.

நிச்சலும்- எப்பொழுதும். "நிச்சநிரப்புக் கொன்றாங்கு" (குறள்) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. ஈர்த்தாட் கொள்ளல்- அன்பராயினாரைத் தகுதியறிந்து வந்து வலிந்திழுத்து ஆட்கொள்ளுதல். "ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே" என்றார் சிவபுராணத்தும் (74). "வளர்கின்ற நின் கருணைக் கையில் வாங்கவும்" (நீத் 4) "இரும்பு தரு மனத்தேனை ஈர்த்தீர்த்தென் என்புருக்கி" (ஏசறவு 1) என்பனவும் ஈண்டைக்கேற்ப அறியற்பாலன. இது மாற்சாரசம்பந்தம் எனப்படும். இங்ஙனம் ஆட்கொள்ளுதல் எக்காலத்துமாம் என்பார் "நிச்சலும்" என்றார்.

சூழிருந் துன்பம் என்றது இறைவன் ஆணையால் வந்து சூழும் துன்பம் என்றவாறு. முற்பிறவிகளிற் செய்த தீவினையின் பயன் துன்பவுருவில் வந்து உயிர்களைச் சூழ்ந்து வருத்துதலின், அதனை நீக்கும் இறைவனைச் "சூழிருந் துன்பந் துடைப்போன்" என்று அருளிச்செய்தார். "தொழுதகை துன்பம் துடைப்பாய் போற்றி" (போற் 131) என வருதலுங் காண்க.

"பல்லாவு ளுய்த்து விடினுங் குழக்கன்று
வல்லதாந் தாய்நாடிக் கோடலைத் - தொல்லைப்
பழவினையு மன்ன தகைத்தேதற் செய்த
கிழவனை நாடிக் கொளற்கு" (பழவினை 1)

என நாலடியாரிற் கூறியபடி வினை, தானே தன்னைச் செய்தவனைத் துன்பவுருவில்

வந்து வருத்துமென்றல் சமணர்க்கு உடன்பாடாயினும் சித்தாந்த சைவர்க்கு அஃது உடன்பாடின்மையால் இறைவனாணையால் வந்து சூழும்" என உரைக்கப்பட்டது.

செய்து ளோர்பெறும் வினைப்பய னொருவர்
சேர்க்க வேண்டுவ தில்லெனி னிதுமே
லெய்து மேலிது நுகர்வதென் றறிவ
தில்லை நீவினை யெனிற் சடமறியா"

(திருவாத. திருப்பெருந் 65)

எனக் கடவுண்மாமுனிவர் அருளிச் செய்தமையால், வினைப் பயனை அனுபவிக்கும்போது உயிர்கள் அவற்றினை முறைப்படி யறியா; வினைதானே ஊட்டுமெனில் அது சடமாகலின் அறியாது. ஆகவே உயிர்களையும் உயிர்களின் வினைப்பயன்களையும் அறிந்து இறைவன் ஊட்டுவிப்பான் என அறிக.

எய்தினர்- தன்னை வந்து அடைந்தவர். ஆரமுது- அரிய அமுது அருமை என்னும் பண்புப் பெயர் ஆர் எனத் திரிந்தது. "ஆரஞர்" (கலி 120:15) என்புழிப்போல. ஆரமுது என்றது திருவடிப்பேரின்பத்தை.

உயிர்கள் தம் அறிவு இச்சை செயல்களில் ஒடுங்கிக் கேவல நிலையில் ஆணவ வல்லிருளில் அழுந்திக் கிடக்கும் காலத்தும் இறைவன் அவ்வுயிர்கள் பொருட்டுச் செய்யும் ஐந்தொழிற்கூத்தை ஓவாது இயற்றுதலின் "கூரிருட் கூத்தொடு" என்றார். நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதனே" (சிவபுராண 89) என அடிகள் பிறிதோரிடத்து அருளியமையுங் காண்க. குனிப்பு- கூத்து. "குனிப்புடையானுக்கே சென்றூதாய் கோத்தும்பி" (கோத்3) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. குனிப்பு என்றது இறைவன் பேரூழியின்பின் நடிக்கும் பெருங்கூத்தினை, அது உயிர்களின் உடலிலுள்ள நாததத்துவத்தின் மேலுள்ள அருள்வெளிக்கண்ணும் பிரம்மாண்டத்தில் தில்லைத் திருச்சிற்றம்பலத்தின் கண்ணும் நடைபெறுவது.

கேவலத்தில் இறைவன் இயற்றுங் கூத்தினை ஆண்டு உடனிருந்து காண்பாள் உமையம்மையாகலின் "கூரிருட் கூத்தினைக் குனிப்போன்" என்பதனை அடுத்துப் "பேரமைத் தோளி காதலன்" என்று அருளிச் செய்தார்.

"பாலொத்தனைய மொழியாள் காண ஆடும் பரமனார்"

(ஞான 70:2)

"அஞ்சொலாள் காணநின்று அழகநீ யாடுமாறே"

(நாவு 23:9)

"கொடியிடை யுமையவள் காண ஆடிய அழகா"

(சுந் 69:2)

எனத் தேவாரத்து வருவன காண்க.

"பாணியுந் தூக்குஞ் சீரு மென்றிவை
மாணிழை யரிவை காப்ப
வாணமில் பொருளெமக் கமர்ந்தனை யாடி"

(கடவுள் 15:7)

எனக் கலித்தொகையில் வருதலும் ஈண்டு அறியற்பாலது,

அமை- மூங்கில். இது உமையம்மையின் தோளுக்கு உவமம். “அமையார் திரடோட் குரவார் குழலாள்” (ஞான 153:2) “வேய்கொள் தோளுமை” (சுந் 56:8) எனத் தேவாரத்து வருவனவுங் காண்க.

ஏதிலர்- இயைபில்லாதவர். ஏது இயைபு. அன்பினால் இயைபில்லாதவர்களுக்கு தானும் இயைபில்லாதவனாய் இறைவன் நிற்றலின் “ஏதிலர்க்கு ஏதில் இறைவன்” என்றார். இயைபில்லாதவனாய் நிற்றல்- ஏதிலார்பாற் புலப்படாது நிற்றல்.

காதலர்- அன்பர். எய்ப்பு- இளைப்பு. “எய்ப்பிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்” பிடித்தபத்து 5. வைப்பு- புதைபொருள். இறைவன் அன்பராயினர்க்கு எய்ப்பினில் வைப்புப் போன்றன் என்பதை,

“தொழும்பாள ரெய்ப்பினில் வைப்பனே” சதகம் 98.
“எனக் கெய்ப்பினில் வைப்பே” நீத் 39

எனப் பிறாண்டும் அடிகள் அருளியவாற்றானுமறிக.

“நல்லடியார் மனத்து எய்ப்பினில் வைப்பை” (67:2)

எனச் சுந்தரர் தேவாரத்து வருதலுங் காண்க.

(தொடரும்...



# சைவக்களஞ்சியம்



சிறியதும், பெரியதுமாக அறுபதுக்கும் மேற்பட்ட கோவில்களைக் கொண்டிருக்கும் காரைநகரில் வியாவில் ஐயனார் தேவஸ்தானம் பிரசித்தமானது. குளக்கோட்டு மன்னனால் கட்டி முடிக்கப்பட்டு 1603இல் முதற் கும்பாபிஷேகம் நிகழ்ந்திருக்கின்றது. பின்னர் ஒல்லாந்தர் காலத்தில் முற்றாக இடித்து அழிக்கப்பட்ட இக்கோயில், மீண்டும் புனரமைக்கப்பட்டு 1972இலும், அதன் பின்னர் 1989, 1999, 2008 ஆகிய ஆண்டுகளில் மகாகும்பாபிஷேகங்கள் முறைப்படி நடைபெற்றுள்ளன.




1989இல் நடந்த கும்பாபிஷேகத்தினை முன்னிட்டு ஒரு "கும்பாபிஷேக மலர்" வெளியிடப்பட வேண்டுமென்ற எண்ணம் தோன்ற, ஈழத்து அறிஞர் பெருமக்களிடமிருந்தும், தமிழகத்து பேரறிஞர்களிடமிருந்தும் ஆக்கங்கள் கோரப்பட்டு, ஆரம்ப வேலைகள் நடைபெற்றும்கூட ஒரு விசேட மலர் வெளியாகவேயில்லை. பின்னர் நடந்தேறிய கும்பாபிஷேக வேளைகளிலும் மலரினை வெளிக்கொணருவதற்கான முயற்சி மேற்கொண்டும் அம்முயற்சி வெற்றிபெறவில்லை. ஆனாலும், அந்நாளில் பலரும் அனுப்பிய பெறுமதிமிக்க ஆக்கங்கள் அப்படியே ஆலயத்தில் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டே வந்தது.

அந்நாளில் கட்டுரைகள், கவிதைகள் என ஆக்கங்கள் வழங்கிய பலரும் இறைவனடி சேர்ந்துவிட்ட போதும், இந்நாளில் சைவத்தையும் - தமிழையும் வளர்க்கும் பணியில் அதீத ஈடுபாடு காட்டிவரும் பல அறிஞர் பெருமக்களிடமிருந்தும் ஆக்கங்கள் கோரப்பட்டு, "சைவக்களஞ்சியம்" எனும் பெயர் கொண்ட மிகப் பெறுமதியான இந்நூல் வியாவில் ஐயனார் தேவஸ்தான வெளியீடாக வெளிவந்துள்ளது. இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த சுவாமிகளின் "அருளாசிச் செய்தி", மூதறிஞர் பிரம்மஸ்ரீ சி. சிவசரவணபவன் (சிற்பி) அவர்களின் "ஆசிச்செய்தி", சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, கனடா சைவ சித்தாந்த மன்றத்தின் தலைவர் தி. விசுவலிங்கம் ஆகியோரது "வாழ்த்துரைகள்", திரு வே. குமாரசாமி, கவிஞர் சி. பொன்னம்பலம் ஆகியோரின் "வாழ்த்துப்பா", புலவர்மணி வை.க. சிற்றம்பலம் அவர்களின் "வாழ்த்துப் பாமாலை" ஆகியவற்றுடன் சைவக் களஞ்சியத்தின் பக்கங்கள் விரிகின்றன. அழகிய ஆர்ட் பேப்பரில் 267 பக்கங்களுடன் 57 தனிக் கட்டுரைகளைத் தாங்கி சைவக்களஞ்சியம் வெளிவந்துள்ளது.

தமிழகத்தின் கற்றறிந்த விற்பன்னர்களான முனைவர் இரா. செல்வகணபதி, திரு கி.வா. ஜெகந்நாதன், டாக்டர் மு. வரதராசனார், சிவத்திரு க. சுவாமிநாத குருக்கள் போன்றோரின் கருத்தாழம் மிக்க சமயக் கட்டுரைகளுடன், ஈழத்து அறிஞர் பெருமக்களான

கலாநிதி மு. கந்தையா, பேராதனைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைப் பேராசிரியர் வ. மகேஸ்வரன், கலாநிதி நாகேஸ்வரன், கலாநிதி ஆறு திருமுருகன், சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம், செஞ்சொற் செல்வர் இரா செல்வவடிவேல், கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை, வாழ்நாட் பேராசிரியர் வி. சிவசாமி, கோப்பாய் சிவம், புலவர் சொ. சிங்காரவேலன், சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலம் ஆகியோரதும் அற்புதப் படைப்புக்கள் நூலிற்குச் சிறப்புச் சேர்க்கின்றன.

சிறப்பானதும், சிந்திக்க வைப்பதுமான அம்சம் யாதெனின் காரைநகரையும், அதை அண்டிய பகுதிகளையும் சேர்ந்த பண்டிதர்கள், கலாநிதிகள், சைவப்புலவர்கள் என ஒருவரையேனும் தவறவிடாது அவர்களின் அற்புதத் திறமைக்குச் சான்றான கட்டுரைகளை இணைத்திருப்பது புத்தகத்திற்குப் பெரும் புகழ் சேர்த்திருக்கிறது. இந்த அவசியமான நடைமுறையினை அந்தந்த ஊர்களிலும் வெளியாகும் வெளியீடுகளிலும் பின்பற்றினால் பலரும் சமுதாயத்தினால் அறியப்பட நிறைய வாய்ப்பிருக்கின்றது.

கட்டுரைகள் மட்டுமல்லாமல் ஐயனார் திருப்பள்ளியெழுச்சி, ஐயனார் திருப்பொன்னூஞ்சல் முதலான பாடற்பகுதிகளுடன், 46 பக்கங்களில் ஐயனார் தேவஸ்தானம் சம்பந்தமான அழகிய கலர் புகைப்படங்களும் இணைக்கப்பட்டு இம்மலரானது எக்காலத்தும்-எவரும் படித்துப் பயன்பெற வேண்டிய சைவக்களஞ்சியமாக வெளியாகியுள்ளது.

வியாவில் ஐயனார் தேவஸ்தானம் சார்பாக ஆற்றப்பட்டுவரும் அறப்பணிகள் பலப்பல. அறங்காவலர் பணியுடன் அறப்பணிகளையும் கச்சிதமாக மேற்கொண்டுவரும் அறங்காவலர் க. சோமசேகரம் அவர்களும், அவரோடு இணைந்து கோயிற் பணியிலும் - அறப்பணிகளிலும் ஈடுபாடு காட்டி வரும் செயற்குழுவினரையும் எப்படிப் பாராட்டுவது என்று புரியவில்லை. அவர்கள் அனைவரதும் பணி தொடர வேண்டும்.

அறங்காவலர் மகாராணி க. சோமசேகரம் அவர்களின் அயராத உழைப்பும், பண்டிதர்-கலாநிதி க. வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்களின் தொகுப்புமாக "சைவக்களஞ்சியம்" பிரகாசிக்கிறது. அவர்கள் அனைவரதும் இம்முயற்சியினை சந்நிதியான் ஆச்சிரமமும், அதனோடு இணைந்த சைவ கலை பண்பாட்டுப் பேரவையும் போற்றி நிற்கின்றது. வாழ்த்தி நிற்கின்றது. வளர்க அவர்கள் சைவப் பணி!

## சைவத்தின் இரு கண்கள்

இருகண் களாக இலங்கும் புராணம்
இரண்டே யாகும் சைவசம யத்தில்
பெரிய புராணமும் கந்த புராணமும்
பெரிதும் போற்றத் தக்கவை யாகும்
அரிய அன்பை அள்ளி வழங்கும்
அன்னை போன்றது பெரிய புராணம்
உரிய அறிவை உவந்து ஊட்டும்
உன்னத மானது கந்த புராணம்.

~கவிஞர் வ. யோகானந்தசிவம்~

# அருணகிரிநாதர் அருளிய கந்தரநுபூதி

(தொடர்ச்சி...

–வாரியார் சுவாமிகள்–



28. ஆனா அமுதே! அயில்வேல் அரசே
ஞான கரனே! நவிலத் தகுமோ!
யானாகிய என்னை விழுங்கி வெறும்
தானாய் நிலை நின்றது தற்பரமே.

## பதவுரை

ஆனா அமுதே- கெடுதலில்லாத அமுதம் போன்ற இனியவரே! அயில் வேல் அரசே- கூரிய வேலை ஏந்திய அரசே! ஞான ஆகரனே- ஞானத்துக்கு இருப்பிடமானவரே! யான் ஆகிய என்னை விழுங்கி- யான் என்னும் ஆணவ முனைப்பில் அழுந்தியிருக்கும் உயிராகிய என்னை, எனது சீவபோதத்தைப் போக்கி, சிவபோதத்துள் அடக்கிக்கொண்டு, வெறும் தானாய்- வேறு ஒன்றும் இல்லாது எல்லாம் தானேயாய், நிலை நின்றது- நிலைத்திருப்பதான, தற்பரமே- மேலான நிலையை (அநுபவித்து அநுபவத்தில் காண்பதேயன்றிப் பிறருக்கு இத்தன்மையதென்று) நவிலத் தகுமோ- சொல்லத் தக்கதோ? (சொல்லமுடியாது)

## பொழிப்புரை

கெடுதல் இல்லாத அமுதம் போன்ற இனியவரே! கூரிய வேலேந்திய அரசே! ஞானத்துக்கு இருப்பிடம் ஆனவரே! யான் என்னும் ஆணவ முனைப்பில் அழுந்தியிருக்கும் உயிராகிய எனது சீவ போதத்தைப் போக்கி, சிவபோதத்தில் அடக்கிக்கொண்டு, வேறு ஒன்றும் இன்றி எல்லாம் தானேயாய் நிலை நின்றது. அந்த அநுபவத்தை இத் தன்மைத்து என்று சொல்ல முடியாது.

## விரிவுரை

**ஆனா அமுதே:-**

ஆனா- கெடுதல் இல்லாத, அமுதம்- மரணத்தைத் தவிர்ப்பது.

அமுதத்தை அமரர்களும், அசுரர்களும் சேர்ந்து கடைந்து பெற்றார்கள். அமுதம் அசுரர்கட்குக் கிடைக்காமல் அமரர்கட்கு மட்டும் கிடைத்தது.

இறைவன் நல்லோர்க்கும் பொல்லார்க்கும் அருள் புரிகின்றவன். ஆதலில், கெடுதல் இல்லாத அமுதம் என்றார்.

ஆனா- கெடுதல் இல்லாத. இந்தப் பொருளில் "ஆனாத ஞான புத்தியைக் கொடுத்ததும்" என்று திருப்புகழிலும் வருமாறு காண்க. ஆனா அமுதம்- இது சத்து.

**அயில்வேலரசே:-**

கூரிய வேலரசன். இது சித்து.

**ஞானாகரன்:-**

ஞானம் இன்பத்தைத் தருவது. அஞ்ஞானம் துன்பத்தைத் தருவது. இது ஆனந்தம்.

"அறிவை யறிபவ ரறியும் இன்பம்தனை"

-(அகரமுதல்) திருப்புகழ்.

அமுதே! வேலரசே! ஞானாகரனே! இந்த மூன்று சொற்களால் முருகனுடைய சத்து, சித்து, ஆனந்தம் என்ற தன்மைகளைக் குறிப்பிட்டார்.

**யானாகிய என்னை விழுங்கி:-**

யான் என்பது ஆணவ மலத்தின் தன்மை

என்னை விழுங்கி என்பது, ஜீவபோதத்தை விழுங்கி சிவபோதத்துள் அடங்கும் நிலையைத் தெரிவிக்கின்றது.

அட்டாங்க யோகமும் ஆதார மாறும் அவற்றை ஐந்தும்
விட்டேறிப் போன வெளிதனிலே வியப்பொன்று கண்டேன்
மட்டாகிச் செம்மதிப் பாலூறலுண்டு மகிழ்ந்திருக்க
எட்டாத பேரின்பம் என்னை விழுங்கி இருக்கின்றதே.

இதனையே முன் "எல்லாமற என்னை இழந்த நலம்" என்று கூறியருளினார்.

**வெறுந்தானாய் நிலை நின்றது தற்பரமே:-**

யான் போன இடத்தில் எல்லாம் தானாய் காட்சி அளிக்கும்.

அது தற்பரமே. அது என்ற சொல் தத்வமஸி என்ற சாமவேத வாக்கியத்தில் வரும் தத் என்ற பதமாகும். தத்- அது; த்வம்- நீ; அஸி- ஆகின்றாய். அது நீ ஆகின்றாய். இது ஆசாரியன் சீடனுக்கு உபதேசிப்பது. ஆகின்றாய் என்பதனால் சீவன் வேறு, சிவன் வேறு. அநுபவத்தில் ஒன்றுபடுகின்றது. இது சிவாத்வைதம்.

**நவிலத்தகுமோ:-**

இவ்வாறு சீவன் சிவத்துடன் அத்துவிதமாகி நின்றபோது விளையும் பேரின்பத்தைப் பேச முடியாது.

வாரிக் கொண்டெனை வாய்மடுத் தின்பமாய்
பாரிற் கண்ட யாவும் பருகினை
ஓரிற் கண்ட ஊமன் கனவென
ஆருக்குஞ் சொல வாயில்லை ஐயனே. -தாயுமானார்.

ஊமன் அதிசயமான கனாக் கண்டால் எப்படிக் கூறுவான்?


பற்றிய பற்றற உள்ளே - தன்னைப்
பற்றச் சொன்னான் பற்றிப் பார்த்த இடத்தே
பெற்றதை ஏதென்று சொல்வேன் - சற்றும்
பேசாத காரியம் பேசினான் தோழி,
உள்ளதும் இல்லது மாய்முன் - உற்ற
உணர்வது வாய்உன் உளங்கண்ட தெல்லாம்
தள்ளெனச் சொல்லி என்ஐயன் - என்னைத்
தானாக்கிக் கொண்ட சமர்த்தைப்பார் தோழி.

-தாயுமானார்.

கருத்துரை

வேல் முருகா! என்னை இழந்து அது அதுவாய் நின்ற சுகானந்தத்தை எவ்வாறு கூறுவேன்? அது சொல்லுக் கடங்காது.

(தொடரும்...

# பிரமனும் சிறைவாசமும்

திரு நா. நல்லதம்பி அவர்கள்

மனித வாழ்க்கையின் தொடக்கம் பிறப்பு; முடிவு இறப்பு. ஆக, பிறப்பும் இறப்பும் வாழ்வின் எல்லைகள். பிறப்பும் இறப்பும் உடம்போடு சேர்ந்தவை. உயிரைச் சேர்ந்தவை. இன்பமும் துன்பமும் உயிரைச் சேர்ந்த நோய்கள்.



பிறப்பு உள்ளவரை இறப்பும் உண்டு. இது நியதி.

பிறப்பு உள்ளவர்கள் மீளவும் பிறக்கலாம். அவ்வாறு மீண்டும் பிறவாமல் இருக்கும் நிலையை அடைவதுதான் "முத்தி" என்பது.

முத்திநிலையில் உயிர் உடம்போடு தொடர்பில்லாத நிலையில் இருக்கும்.

## ஆன்மா பெறும் மூவகை உடம்புகள்

பிறப்பினால் வருவது ஊனுடம்பு. இறப்புக்கும் அடுத்துவரும் பிறப்புக்கும் இடையில் வருவது சூக்கும உடம்பு. முத்திநிலையில் உயிர் நிற்பது இறைவனுடன்.

சூக்கும சரீரத்தோடு ஆன்மா நிற்கும்போது வரும் இன்பமும் துன்பமும் முறையே சுவர்க்கம், நரகம் ஆகும்.

இந்தப் பிறப்பையும் இறப்பையும் நீக்கவேண்டுமானால் இறைவன் அருளால் மெய்ஞ்ஞானம் பெறவேண்டும்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார் (திருக்குறள்)

பிறப்பு இறப்புத் தொழில்களை நடாத்துகின்றவன் ஐந்தொழில் புரியும் இறைவன். இந்த ஐந்தொழிலையும் ஐந்து அதிகாரிகள்மூலம் இறைவன் நிகழ்த்துகின்றான். ஐந்தொழில்களில் மிகவும் முக்கியமான படைத்தலைச் செய்கின்றவன் பிரமன். பிரமனைப் பற்றியதாகவே இக்கட்டுரை அமைகின்றது.

படைப்புத் தொழிலைச் செய்வதற்குக் கலைகளின் அறிவு தேவை. அதனால், அறிவுத் தெய்வமாக நாம் வணங்கும் கலைமகள், பிரமனது சக்தியாக விளங்குகிறாள். அவள் பிரமனின் நாவில் உறைவதாகப் புராணம் கூறுகின்றது.

இந்துமத வேதம் இறைவாக்கு; வேதவாக்கு. இறைவன் மெய்ஞ்ஞானிகளுக்கு உணர்த்தியருளிய வேதமந்திரங்கள் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பரம்பரை பரம்பரையாக மெய்ஞ்ஞானிகளால் செவிவழியாக ஓதப்பெற்று வந்தவை; எழுதா மறையாக வந்தவை. எண்ணும் எழுத்தும் தோன்ற முன், ஞாபக சக்தியே மூலதனமாக செவிவழி

வந்த எழுதாமறை அதன் சுருதி மாறாமல் ஓதப்பெற்றதே பெரிய ஆச்சரியமல்லவா!

"கற்றலிற் கேட்டலே நன்று" என்ற பழமொழியும்,

செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்

செல்வத்துள் எல்லாம் தலை எனத் திருக்குறள் கூறுவதும் நம் சிந்தனைக்குரியதே.

இவ்வாறு எழுதாமறையாகச் செவிவழிவந்த வேத மந்திரத்தை வியாசமுனிவர் இருக்கு, யசுர், சாமம், அதர்வனம் என நான்காக வகுத்து, அவற்றை அந்தணர்களிடம் ஒப்படைத்தார் என்று பெரியோர் கூறுகின்றனர். (வியாசர்- வகுத்தவர். வியாசம்- கட்டுரை)

இந்த வேதமந்திரங்களின்படி ஆன்மாக்களின் பிறப்பு இறப்புகளை அவர்களின் தலையில் பிரமன் எழுதுகிறான். விதியைத் "தலையெழுத்து" என்று சொல்லுகிறோம்.

ஆனால், அந்தப் பிரமனின் தலையெழுத்து சிவபெருமானின் கையில் இருக்கிறது.

".....தலையாலே பலி தேருந் தலைவனைத் தலையே நீ வணங்காய்" என்கிறார் அப்பரடிகள். (பிரமனின் கபாலத்தை ஏந்தி இறைவனின் பலி தேருகின்றார்) பரமனை மதித்திடாப் பங்கையாசனன் ஒருதலை கிள்ளியே... இறைவன் வைத்திருக்கிறான்.

இனி, இந்த சிவபெருமானும் முருகனும் ஒருவரே; வேறு அல்லர் என்பது சைவசமய முடிபு. சிவனுக்குரிய இயல்புகள் முருகனுக்கும் உண்டு.

ஆகவே பிறப்பு, இறப்புத் துன்பங்களைப் போக்குகின்றவன் முருகன் என்று கூறலாம்.

மார்க்கண்டேயரது உயிரைக் கவர வந்த இயமனைப் பாதத்தால் உதைத்தவர் இறைவன்/ முருகன்.

மற்று, ஒரு பிறப்பில் ஆன்மா செய்யும் கர்ம வினைகளை அடுத்த பிறப்புக்குக் கொண்டு செல்லும் சக்தியாகவே பிரமன் விளங்குகிறான். அவரவர் செய்த பாவ புண்ணியங்களை மனதிற்கொண்டு அடுத்த பிறவியை விதிப்பவன் பிரமன். அதனால் பிரமனுக்கு "விதி" என்றும் பெயர் உண்டு. தவிர வகுத்தான் என்றும், உலகியற்றியான் என்றும் அழைக்கப்பெறுகிறான் பிரமன்.

வகுத்தான் வகுத்தவகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது (குறள்) என்றும்
இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான் (குறள்) என்றும் கூறப்பெற்றுள்ளமை காண்க.

படைத்தல் தொழிலைச் செய்யும் பிரமனுக்கு நடுநிலையும் திறமையும் அறிவும் இருக்க வேண்டும் என்பதைக் கருத்திலிருத்தியே பிரமனுக்கு "நான்முகன்" (திசைகள் எட்டையும் இலகுவில் பார்க்கக் கூடியதாக எட்டுக் கண்களோடு கூடிய நான்குமுகம்) என்ற பெயரும் வந்திருக்கலாம்.

எப்படியாயினும் பிரமன் (ஒரு அதிகாரி) தவறு செய்தால் சிவன் முருகன் அவனுக்குத் தண்டனை வழங்குவார்.

## கந்தபுராணக் கதை

முருகப்பெருமான் திருவிளையாடல் செய்து நிற்கையில் அவ்வழியால் வந்த பிரமன், முருகனைக் கனம் பண்ணாமல் போய்விடுகிறான். எட்டுக் கண்களிருந்தும், "நான் கவனிக்கவில்லை" என்று பிரமன் சொல்ல முடியாது! இதனாற் கோபங்கொண்ட முருகன், பிரமனை, "நீ யார்? என்று கேட்கிறார். "நான் படைக்கும் தொழில் புரியும் நான்முகன்"

என்று பெருமையாகப் பதில் கூறுகின்றான். “அப்படியானால் உனக்கு வேதம் தெரியுமா? இது முருகப்பெருமானது அடுத்த வினா. அதற்கு “ஓம்” என்று பிரமனிடமிருந்து பதில் வரவே, “ஓம்” என்பதன் பொருள் தெரியுமா” என்று முருகப்பெருமான் கேட்டதும் அதற்கு விடைதெரியாமல் பிரமன் விழித்தான்.

“வேதப்பொருள் தெரியாத நீ எப்படிப் படைத்தல் தொழிலைச் செய்யலாம்” என்றுகூறி அவன் தலையில் குட்டி, பிரமனைச் சிறையில் வைக்கிறார் முருகன்.

பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணி அல்ல மற்றுப் பிற (குறள்)

ஒரு அறிவாளிக்கு இருக்க வேண்டிய பணிவுடைமை, இன்சொல், செருக்கிலாத்தன்மை என்பன போன்ற முக்கிய பண்புகள் பிரமனிடத்து இல்லை என்பதனை உலகம் உணரவேண்டும் என்பதற்காகவே பிரமன் சிறையில் வைக்கப்படுகிறான்.

பிரமனது அகந்தையை அழித்து அருள்வழங்கிய முருகப்பெருமான் முன்போலப் படைத்தலைச் செய்யப் பணித்தருளுகின்றார் என்பது புராணம். சிறந்த முருகபக்தரான அருணகிரிநாதர், இந்தக் கதையை நினைவு கூர்ந்து பார்க்கிறார்.

தனது பிறவிக் கடலை நீந்த முருகப்பெருமானது பாதப் புணைகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருப்பவர். இதையும் மீறிப் பிரமன் தனக்குப் பிறவியைத் தரமுயன்றால், நிச்சயமாக அவன் இன்னொரு முறை சிறைசெல்ல வேண்டி வரும்; முருகப்பெருமான் எனக்குத்துணை நிற்கிறார் எனத் துணிந்தார்.

பங்கேருகன் எனைப் பட்டோலையில் இடப், பண்டுதளை
தன்காலில் இட்டது அறிந்திலனோ? தனிவேல் எடுத்துப்
பொங்கோதம் வாய்விடப் பொன்னஞ்சிலம்பு புலம்ப வரும்
எங்கோன் அறியின், இனி நான்முகனுக்கு இரு விலங்கே.

(கந்தர் அலங்காரம்- 89)

(பங்கேருகன்- தாமரையில் இருக்கும் பிரமன்)

## வெளிவேஷத்தை நம்பாதே!

**பலாப்பழம் பார்ப்பதற்கு முள்ளுமுள்ளாகத் தோன்றும். உள்ளுக்குள் நல்ல சுவையான சுளைகள் இருக்கும். வீணை கோணலாகக் காட்சியளிக்கும். ஆனால், இனிய இசையை உண்டாக்கும். எட்டிப்பழம் மேலே பளபள என்றிருக்கும். ஆனால் தொட்டாலே கசக்கும். நாவற்பழம் கருமை, ஆனால் இனிக்கும். பளபள என்று காட்சியளிக்கும் பாம்புக்குட்டி கொடிய விஷத்தைக் கொண்டது. நேராக இருக்கும் அம்போ உயிரையே வாங்கும் அளவிற்குக் கொடியது. ஆகவே வெளிவேஷத்தைக் கண்டு எதையும் எடைபோடக் கூடாது.**

-அறநெறிச் சிந்தனைகள்-

# ஸ்ரீ குருவாயூரப்பன் என் அப்பன்

(தொடர்ச்சி.....

திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள்

குருவாயூரப்பனின் ரூப செளந்தர்யம், திவ்யவடிவம்பற்றி "நாராயணீயம்" என்னும் நூலில் கூறப்பட்டிருக்கிறது. சூரியனுக்கு நிகரான கிரீடத்தை உடையதும், திலகத்தால் மிகவும் பிரகாசிக்கின்ற நெற்றியையுடையதும், கருணை நிறைந்த கண்களையுடையதும், கனிந்த புன்னகையோடு விளங்குவதும், அழகான மூக்கை உடையதும், பிரகாசிக்கின்ற இரண்டு மகர குண்டலங்களையுடையதும், கழுத்திலே சோபிக்கின்ற கௌஸ்துப மணியை உடையதும், வனமாலை முத்துமாலைகள் ஸ்ரீவத்ஸம் ஆகியவற்றோடு விளங்குவதுமான தங்களது ரூபத்தை தரிசிக்கிறேன்.



பகவானின் கரத்திலுள்ள சக்கரம் காலச் சக்கரத்தைக் குறிப்பதாகவும், புவனம் எங்கும் நீதியையும், தர்மத்தையும் நிலைநிறுத்தும் தர்மச் சக்கரம், சுதர்சனம் என்று புகழப்பெறுகிறது. பகவானின் கரத்திலுள்ள பாஞ்சஜன்யம் என்ற சங்கானது இருளையும், மௌனத்தையும் நீக்கக் கூடியது. கையிலுள்ள வாளானது துஷ்டநிக்ரக சிஷ்ட பரிபாலனத்திற்குப் பயன்படுவது. மற்றொரு கையிலுள்ள பதுமம் பூமியையும் படைப்புச் சக்கரச் சுழற்சியையும், விஷ்ணுலகத்தின் தூய்மையையும், அழகையும் குறிப்பது.

நாராயண பட்டத்திரி அந்த விக்கிரகத்தின் அழகையெல்லாம் வர்ணிக்கிறார். என் முன்பு திவ்ய மங்களஸ்வருபத்துடன் விளங்கும் தங்களைச் சூழ்ந்துள்ள பிரகாசமானது; கலய மலர்களைப் பூச்செண்டாக தொடுத்துத் தொகுத்ததாகத் தோன்றுகிறது. அந்த அமிர்ததாரையில் மூழ்கியவனாக நான் இருக்கிறேன். அதன் மையத்திலே தெய்வீகத் திருவுருவத்துடன் கூடிய தெய்வீகக் குழந்தையாக கவர்ச்சியான வடிவிலும், நாரதரும் மற்ற முனிவர்களும் தங்களது திவ்வியஸ்வருப காட்சியின் ஆனந்தப் பரவசத்தில் ரோமாஞ்சலியுடையவராகவும், உபநிடத்துக்கள் எல்லாம் அழகிய கவர்ச்சி மிக்க மங்கையர்களைப்போல தம்மைச் சுற்றிலுமிருப்பதைப் பார்த்து மகிழ்ச்சியுடன் தரிசித்துக் கொண்டிருக்கிறேன்.

தங்களுடைய கடல்நீல நிறமும் மென்மையான செந்தாமரை இதழைப் போன்ற அழகிய கருணை விழிகள் இரண்டும் உதவியற்ற என்மீது அருளையும், கிருபா கடாட்சத்தையும் அருள் செய்யட்டும்!

கொவ்வைக்கனி இதழ்கள் செந்நிற வர்ணத்தோடு ஒளிவிட்டுப் பிரகாசிப்பதோடு, என்றும் அன்புமழை பொழியும் மெல்லிய புன்னகையுடன் துலங்கும் அழகிய திவ்விய திருமுக தரிசனம் துலங்க வேண்டும்!

புல்லாங்குழலை அரவிந்தம் போன்ற திருமுகத்தில் வைத்துக்கொண்டு இனிய தேவ இசையை முழங்கச் செய்ய வேண்டும்!

ஹே! நாதா! ஹே! குருவாயுபுரத்துக்கு அதிபதியே! கருணைக்கடலே! ஹே! கிருஸ்ணா! யோகீஸ்வரர்களுக்கு தங்கள் அவயவங்களுக்குள் மிகமிக மதுரமானதும், மோகத்தையடைந்தவர்களுக்கு வாசஸ்தலமானதும், பக்தர்களுக்கு அவர்களுடைய விருப்பத்தை வருஷிப்பதில் கற்பக விருட்சத்தின் தளிர் போன்றதுமான தங்களுடைய பாதமூலமானது எப்போதும் எனது சித்தத்திலே இருந்துகொண்டு சமஸ்தமான தாபங்களையும் போக்கடித்து மோட்ஷ லட்சுமியைக் கொடுக்க வேண்டும்.

ஹே! ஜகந்நாதா! ஆயிரம் ஸ்லோகங்களுக்கு மேலான ஸ்ரீ நாராயண கவியால் சொல்லப்பட்ட இந்த ஸ்தோத்திரம் இவ்வுலகிலுள்ளவர்களுக்கு ஆயுளையும், ஆரோக்கியத்தையும், சௌக்கியத்தையும் அருளட்டும்! நாராயணீயத்தின் அடிப்படைக் குறிக்கோளே பிறவியின் பிணிகள் நீங்கப்பெற்று மோட்ச சாதனத்தை அடைவதேயாகும். ஸ்ரீ குருவாயூரப்பனையே நேரில் அழைத்துப் பேசுவதைப்போல் அமைந்துள்ளது. பகவானின் ஒப்புதலைப் பெற்றது நாராயணீயம். குருவாயூரப்பனின் ஞான பொக்கிஷம் நாராயணீயம். பக்தர்களுக்குத் துன்பம் நேரும்போதெல்லாம் பகவான் தனது திருவருளைத் தந்து அனாதரட்சகனாகவும், ஆபத்பாந்தவனாகவும் பாதுகாக்கிறார். பகவான் ஹரியை நினைவில் வைத்திருப்பவர்கள் எத்தகைய அபாயத்திலிருந்தும் காப்பாற்றப்படுவார்கள்.

கண்ணா! தங்களது கருணை நிரம்பிய பார்வையாலேயே என்னைக் கடாக்ஷித்து ரக்ஷிக்க வேண்டும்! மந்தகாசத்தால் மிக்க அழகாக இருக்கும் தங்களது முகம் எனக்குத் தோன்றட்டும்! தாங்கள் புல்லாங்குழல் வாசிக்க அதைக் கேட்டு நான் களிக்க வேண்டும்! கற்பக விருட்சத்தின் தளிர்போன்ற தங்கள் பாத கமலமானது என் இதயத்தில் இருக்கட்டும்! ஏ கிருஸ்ணா! அந்த பாதமானது என் எல்லாத் தாபங்களையும் போக்கி பிரமானந்த பிரவாகத்தின் சோபையை (மோட்ச லட்சுமியை) அளிக்கட்டும்! உலகிற்கு நாதனான குருவாயூரப்பா! இந்த ஸ்தோத்திரத்தைப் படிப்பவர்கள், கேட்பவர்கள் ஆயுள், ஆரோக்கியம், ஷேமம் ஏற்பட வேண்டுமென நம்பூதிரி அவர்கள் வேண்ட ஸ்ரீ அப்பனும் தலையசைத்து அங்கீகரித்தார். அன்பர்கள் ஸ்தோத்திரம் செய்து பயனடைய வேண்டும்.

கண்ணா! கலியுகக் கருணைத் தெய்வமே! எங்கள் குருவாயூரப்பா! காலங்களைக் கடந்த காவல் நாயகா! இருளையும், பகலையும் கடந்த ஏக ஜோதியே! நீ உன்னைச் சரணடைந்த பக்தர்களுக்குக் காட்டும் கருணையில்த்தான் எத்தனை லீலாவிநோதங்கள்! அருள் விளையாட்டுக்கள்!

திருமகள் உறையும் உன் கருணா இதயவாசலின் திருக்கதவங்கள் ஏழையராம் எங்கள் அடைக்கலத்திற்காகத் திறந்திருக்கட்டுமே!

உன் கமலத் திருப்பாதங்கள் எங்களுக்குக் காவலாகட்டுமே!

உங்கள் பாஞ்சசன்யம் (சங்கு) எங்கள் அவல அச்சங்களைத் தீர்க்க முழங்கட்டுமே!

உன் சுதர்சனம் (சக்கரம்) எங்கள் தீவினைகளை அறுத்தெறியட்டுமே!

உன் புன்னகைச் சாரலில் நாங்கள் இளைப்பாற உன் கருணைக் கண்கள் அருள் புரியட்டுமே! உலகளந்த மாயவனே, உன்னிக்கிருஸ்ணா! சரணாகதரட்சகா! சங்குசக்கரதாரி! கருடன்மீதமர்ந்து காட்சி தந்தருள்வாய். லட்சுமி நாராயணா! எனக்கு எல்லாமும் நீயே!

குருவாயூரில் சிரிக்கும் குழந்தையே! மாலே! மணிவண்ணா! உனைக் காணுமாறு அருள்புரிவாய்!

மதியிலா ஏழை உனைப் பிரிந்திருக்கிறேனே!

நீலமேனி ஐயனே! உன்னையே எண்ணுமாறு, உன்னையே பாடுமாறு, உன் நாமத்தை ஓதுமாறு அருள்வாயாக!

கீதை அருளிய கிருஸ்ணபரமாத்மாவே! நான் ஒன்றுமறியேன்!

பிரபுவே! சக்தியற்ற என்மீது கருணை கூர்ந்து திருவுள்ளம் இரங்கவும்!

என் மாதவனே! எழில் மன்னவனே! என் சித்தத்தில் தித்திக்கும் தேவனே!

திருத்துழாய் முடியாய்! திருமகள் கொழுநனே! ஸ்ரீ கிருஸ்ணா! உன் திவ்விய மோகன தரிசனத்தை தந்தருளவும்!

குருவாயூரப்பனே! நந்த நந்தனா! என் குரல் கேட்கவில்லையா?


ஓங்கி உலகளந்த உத்தமனே! கைகூப்பி வணங்குகின்றேன்!

பூலோக வைகுண்ட நாதனே! நாராயணா!

குருவாயூர் அப்பனே! என் அப்பனே! நின் சேவடி சரணம்! சரணம்!

(முற்றும்)

# சந்நிதியான் புகழ் மாலை



எந்நிதியும் தரும் சந்நிதியானே
எங்கள் குறை தீர்ப்பாய் குமரா
எந்நிதியும் தரும் உன் சந்நிதியில்
எம் அடியார் தம் வினை தீர்க்க
எடுத்து வரும் காவடிகள் காண்பாய்
எட்டுத்திக்கும் பரந்திருக்கும் உன் விழி கண்டு
எக்காலமும் வாழ்வேன் ஐயா
என்னைக் காத்தருள்வாய் சந்நிதியானே

ஏழைபடும் துன்பமெல்லாம்
ஏன் என கேட்பாரில்லை
ஏறு மயில் ஏறிவரும் முருகா
ஏற்றமுற வேண்டும் வாழ்வு
ஏணியாய் நீ இருப்பாய் என்று
ஏந்தி வந்தோம் பூக்கள்
ஏற்றிவைப்பாய் குன்றின் விளக்காய்

-ச. வாகீசன்-

# பானமும் ஞானமும் பகிர்வுகொள் ஆச்சிரம தானமும் சந்நிதியானே

திரு க. தெய்வேந்திரம் அவர்கள்

பதியரன் சந்நிதிதன்னில் பட்டுழல் பாவமெல்லாம் பனியாகத்தீரு மெல்லை
விதியொடு மறைகள் கூறும் மெய்ப்பதந் தெளியத்தானே வந்திடும் வேல்!
இனிது கண்டுரைப் பாயாகில் வெவ்வினைக்கிலேச மாய்ந்திட வருளேவீசும்
ஓங்குயர் மலர்களால ருச்சித்தேத்தும் பேரருள்ப் புனிதம் காண்டி!

ஆதலால் எங்கள் முருகனே பரம்பொருளெல்லாமாகி தொண்டையூற் பிரமமாகி
ஏதிலா எவ்வெவ்வுயிர்க்கும் பாபிலாயாகுமாகி பண்டுற்றுநிற்கும் வேலோன்
காதலாலுரைத்தோ மென்று கரமுயர்த்தி காவுகொள்ளும் வாய்மையே கூறக்காண்டி
வேதமே முதலாகிய கலையெலாம் விழுமிக்காட்டும் சங்கரன் மைந்தன் வேலே யாகும்!

விதிமுதலுரைக்கநின்ற வியனுயிர்த்தொகை கட்கெல்லாம் அஞ்சுகமான தெய்வம்
–சந்நிதியே
பதியெனவருளுந் தொன்மைப் பதமலர் தானுமன்னோர் களிக்கவைகும்
கதிகளென் றெவருந்தேற வாங்கவர்துஞ்ச வெந்நாளார்த்த மாறன்
பொலிதரும் மயிலும் பூவை நிருசிம்பருத்திராட்சமும் யோபநிடதமுமென்றும் காண்டி!

காண்பவர்க் கருளுந்திறமும் காட்டும் வேலவன்
மாண்புடைச் சேனாதிபதியாய் சூரனைக்கழந்து தேவரைக்காத்தவேல்
பூண்பதியாறு திருமுகமொன்றாய் நயம்புணர்க்கட் சிறந்தது திருக்கைவேல்
சேண் பொலியிரு மடங்கும் கன்னியர் திருநடஞ் செயலைச் சேர்த்திடும் வீரவேல்!

கருவியுருமாறும் மெய்ப்புலன் காட்டுவான் தினமும் காண்பவர்க் காட்சியாய்!
பொருளெனப் படுபாவவினை நான்மையும் ஐவகைப் பொறிவையும்
மிருதிமீளா மறத்தியல் வினைகூறும் காலமும் மிடறினுந் தாழாதுய்த்து
மனுமரபின் முற்றுறப் பயனுமாய் மகிழ்கரங்காட்டிச் சேர்க்கும் வள்ளல் சந்நிதியெம்
–பரனே!

# உயிருக்கு உருவம் உண்டா?

செல்வி பா. வேலுப்பிள்ளை அவர்கள்

ஆம் இது ஒரு நல்ல கேள்வி. ஆராய வேண்டியது. பலருக்கும் பல சந்தேகங்கள். இந்த உயிர் எங்கே இருக்கிறது? யாரும் கண்டார்களா? கண்ணுக்குப் புலப்படக்கூடியதா? இல்லையா? உயிர் உடம்பினுள்தான் இருக்கும் என்ற எண்ணம் மக்களிடம். ஆனால் யாரும் அந்த உயிரைக் கண்டதில்லை. உயிர் உண்டேல் உருவமும் வேண்டும். உயிர் இருக்கும் இடம் உடம்பு. (அது ஒரு சிறை.) இந்த உடம்பை இயக்க ஏதோ ஒன்று தேவை. அதுதான் உயிர். உயிர் தேவையில்லையென விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். ஆனால் மெஞ்ஞானிகள், நமது உடம்பு இயங்கவேண்டுமாயின் உயிர் வேண்டும். ஆகவே உடம்பை நாம் பேண வேண்டும் என்கிறார்கள்.

"உடம்பினை முன்னம் இழுக்கு என்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே"

-திருமூலர் கூறுகிறார்.

நாம் உடம்பைப் பேணுகிறோம். ஆனால் அதனுள்ளிருக்கும் உயிரைப்பற்றி சிந்திப்பதில்லை. நான் நான் என்று பேசுகிறோம். நான் என்ன உடம்பா? உயிரா? ஒரு நோயாளி சொல்கிறான், "என்னை நோய் பிடித்துவிட்டது. உடம்பு இயங்காதாம். உயிர் போகப்போகிறது. நான் சாகப்போகிறேன்" மரணம் வரும்போதுதான் உடம்புள்ளே உயிர் இருப்பதை உணர்கிறான்.

மாங்காய் சொல்லும், நான் காயாக இருக்கும்போது குழம்பாக- கறியாக- சம்பலாக பயன்படுவேன். நாளாக நாளாக எனது புளித்தன்மை குறைந்து இனிய கனியாவேன். காய்- ஆணவம். நான் என்ற எண்ணம் புளிப்பு இருக்கும்வரை. ஆணவம் குறைந்ததும் (புளிப்பு நீங்கியதும்) இனியகனி. இனிமை தெய்வீகக் குணத்தைக் குறிக்கும். மாங்காய் தெரிகிறது. ஆனால் அதன் சுவையை கண்ணால் பார்க்க முடியாது. சுவையைத்தான் உணரமுடிகிறது.

சரி, இனி உயிர் உண்டென்றால் அதன் உருவம் என்ன? நம் கண்ணுக்கு உலகில் உள்ள யாவும் உருவமாகத் தெரிகிறது. யானைக்குப் பெரிய உயிர் பூனைக்குச் சிறிய உயிரா? யானையோ, பூனையோ, சுண்டெலியோ ஏன் ஊர்ந்து திரியும் எறும்பு, நுள்ளான், தெள்ளு, பேன் இவற்றுள்ளும் அதேயளவு உயிர்தான் உண்டு. உடம்பு அசைய வேண்டுமாயின் இயக்க சக்தி வேண்டும். அது உயிர். உயிரும் தானாக அசையாது. அது இயங்க உயிருக்கும் ஒரு உயிர் வேண்டும். அந்த உயிர்தான் உயிர்க்குயிராகிய இறைவன்.

"ஆட்டுவித்தால் ஆர் ஒருவர் ஆடாதார்?"
"அவன் அசைந்தால் அசையும் உலகம்"

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை பாடம் நடத்தும்பொழுது ஒரு உதாரணம் விளக்குவார்கள். பாட்டுப் பெட்டியை பாடு பாடு என்றால் பாடாது. பெட்டி சடம். அசையாது. பாடவேண்டுமாயின் பாட்டு எழுதப்பட்ட தட்டை அதில் வைத்து அது இயங்க அங்கு பெட்டியோடு இணைந்திருக்கும் ஊசியை பாட்டெழுதிய தட்டில் இணைத்தாற்றான் பாடும்.

பாட்டுப்பெட்டி - சடப்பொருள் - உடம்பு
பாடல்தட்டு - பாடல் - உயிர்
ஊசி - இயக்கும் சக்தி - உயிருக்குயிர் (இறைவன்)

ஊசியும் தட்டும்தான் பெட்டியை இயக்குவது. ஊசியை எடுத்தால் பெட்டி இயங்காது. இதிலிருந்து நாம் அறிந்துகொள்ள வேண்டியது,

பாட்டுப் பெட்டி - நமது உடம்பு
பாடல் எழுதிய தட்டு - நமது உடம்பினுள்ளேயுள்ள உயிர்
விசை (ஊசி) - உயிரை உயிர்ப்பிக்கும் இறைவன்.

ஆகவே எமது உடம்பு என்று சொல்லும்போது உடம்பு, உயிர், உயிரை இயக்கும் இறைவன் யாவும் இணைந்ததே நாம். இதை உணராது நாம், நான் நான் என்று பேசுகிறோம். உடம்பையும் பேணுகிறோம். எப்படி? சத்தான உணவு, உடற்பயிற்சி, ஓய்வு, மருந்து மாத்திரை ஆகிய இவை உடம்பைப் பேணுமே தவிர உள்நின்று உயிரை இயக்கும் உயிர்க்குயிராய இறைவனை நினைப்பதில்லை. காரணம் உடம்பு உருவமாகத் தெரிகிறது. உயிரின் உருவம் தெரிவதில்லை. உள்ளிருக்கும் சோதியை உணர ஆராய சுத்த அறிவு நம்மிடம் இல்லை.

"ஓடி ஓடி ஓடி ஓடி உள்ளிருக்கும் சோதியை
நாடி நாடி நாடி நாடி நாட்களும் கழிந்தன"

ஞானிகள்தான் தேடுகிறார்கள், ஆராய்கிறார்கள். உண்மைப்பொருள் இதுவென உணர்கிறார்கள். இறைவன் உள்ளத்துள்ளே இருக்கிறான். ஆனால் அடையாளம் காணமுடிவதில்லை.

"உள்ளமும் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உருவறியாதே"

இது நமக்கு விளங்குவதில்லை. காரணம் உயிர் உடம்பினுள் இருக்கும்போது அது தன்னைப் பிரித்துப் பார்ப்பதில்லை. தன்னை உடம்பாகவே கருதுகிறது. ஆன்மா தானாக எதையும் அறியாது. இறைவன் அறிவித்தால்த்தான் அறியும். இறைவன் திருவருள் கூடும்போது உயிரின் சொரூபம் தெரியும். உயிர்தான் உடம்பு அல்லவென உணரும். அப்படியாயின் உயிரின் வடிவம் என்ன? திருமூலர் சொல்கிறார். நம் கண்முன்னே காணும் உருவங்கள் கண்ணுக்குமட்டும் தெரியும். அதுபற்றி ஆராயும் அறிவு உடம்புக்கு இல்லை. அது சடம். எங்கு அறிவாற்றல் உண்டோ அங்கே உயிர் உண்டு என்பது தெளிவாகிறது. அறிவே உயிரின் வடிவம். உயிருக்கு வேறு உருவம் இல்லை.


"அறிவு வடிவு என்றறியாத என்னை
அறிவு வடிவு என்றருள் செய்தான் நந்தி
அறிவு வடிவு என்றருளால் அறிந்தே
அறிவு வடிவு என்றறிந் திருந்தேனே" -திருமூலர்.

(தொடர்ச்சி...)

# ஸ்ரீ ரமண நினைவலைகள்

## 9. விமலன் ரமணன்

குஞ்சு சுவாமியும் நானும் காட்டிற்குள் உலாவப் போனபோது பலராம ரெட்டியாரும், ஜோன், மாத்யூ கிரீன்பிலாட்டும் எங்களுடன் சேர்ந்துகொண்டார்கள். வழி நெடுக இரு பழம்பெரும் பக்தர்களும் அமிர்தவர்ஷம் போல் பகவான் விஷயமாகப் பேசிக்கொண்டே வந்தார்கள். சாதாரணமாக இளைஞர்களான நாங்கள்தான் அவர்களைக் கேள்விகள் கேட்போம். ஆனால் அன்று பலராம் ரெட்டியார் குஞ்சு சுவாமியிடம், நாராயணகுரு நம் பகவானை கந்தாச்ரமத்தில் வந்து பார்த்த விஷயத்தை விவரமாகச் சொல்லும்படி கேட்டுக்கொண்டார். அவரும் உற்சாகமாகச் சொல்ல ஆரம்பித்தார்.



"நாராயணகுரு கேரளத்தில் 1929ஆம் ஆண்டுவரை வசித்த உயர்ந்த ஞானி. மிக உயர்ந்த ஞானி என்பதைவிட, அவர் சமூக சீர்திருத்தவாதி என்றுதான் புகழ் பெற்றிருந்தார். மகாத்மா காந்தி, ரவீந்திரநாத் தாகூர், ஆன்ட்ருஸ் முதலிய மிகப்பெரியவர்கள் கேரளத்துக்கு விஜயம் செய்தபோதெல்லாம் அவரைப் போய்ப் பார்த்தார்கள் என்பதிலிருந்தே அவருடைய பெருமை ஓரளவிற்கு விளங்கும். சமஸ்கிருதத்தில் சில உயர்ந்த தத்துவ நூல்கள் எழுதியிருக்கிறார். வெளியூர்களுக்குப் பயணம் செய்யும்போதெல்லாம் தன்னுடைய கிளை மடங்களிலேயே தங்குவது அவருடைய வழக்கம். காஞ்சிபுரத்திலும் நாராயண சேவா சமிதி என்று அவர்களுடைய ஒரு ஸ்தாபனம் இருக்கிறது. இது கோவிந்தானந்த கிரியின் மேற்பார்வையில் இருந்தது. அவர் அடிக்கடி பகவானிடம் வந்து தங்கிப்போவார். நாராயணகுருவின் அனேக சிஷ்யர்கள், போதானந்தா, வித்தியானந்தா, அச்யுதானந்தா, ஆத்மானந்தா முதலானோர் பகவானிடம் பெருமதிப்புக் கொண்டவர்கள். பகவான் மலைமேல் வசித்து வந்த சமயம் காவ்ய காண்ட கணபதி முனிவரிடம் பிரம்ம சூத்திரத்தை பயிலும் வாய்ப்புப் பெற்றவர் வித்யானந்தா. காஞ்சிக்கு ஒரு சமயம் நாராயணகுரு வந்திருந்தபோது, அருணாசலத்திற்குப் போய் பகவானைப் பார்க்க வேண்டுமென்று அவரைப் போதானந்தகிரி வினயமாகக் கேட்டுக்கொண்டார். அவரும் அதிசயமாக ஒப்புக்கொண்டார்.

"தன் சிஷ்ய குழாத்துடன் அருணாசலம் வந்து, அவர் சாதுக்கள் சத்திரத்தில் தங்கினார். சத்திரத்தின் அன்றைய நிர்வாகி ஒரு கேரள பக்தர். அவர் சாதுக்கள் சத்திரத்திலிருந்து பகவானுக்கு உணவு அனுப்பிக்கொண்டிருந்த காலம் அது. பழனிஸ்வாமி தினமும் வந்து அதை எடுத்துப் போவார். மலையாளியான பழினிஸ்வாமியை நாராயணகுருவுக்கு அறிமுகம் செய்து வைத்தனர். அங்கிருந்தவர்களால் தூண்டப்பட்டு பழனிஸ்வாமி, நாராயணகுருவை கந்தாச்ரமம் வந்து பகவானைத் தரிசிக்கும்படி அழைத்தார். அவரும் அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டார்.

மறுநாள் காலை சுமார் பத்து மணிக்கு நாராயணகுருவும், சிஷ்யர்களும் மலைமேலுள்ள கந்தாச்ரமம் அடைந்தனர். பகவான் உள் திண்ணையில் வீற்றிருந்தார். நாராயணகுரு வெளியில் நின்றுகொண்டு பகவானைக் கூர்ந்து பார்த்துக்கொண்டிருக்க, சிஷ்யர்கள் உள்ளே சென்று பகவானை நமஸ்கரித்தனர். பகவானையும் அவரைச் சுற்றி நிகழ்ந்து கொண்டிருந்த நடவடிக்கைகளையும் வெளியில் இருந்தபடியே கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தார். சிறியவரும், பெரியவரும், ஆணும் பெண்ணுமாக பலதரப்பட்ட மக்கள் வருவதும் போவதுமாக இருந்தனர். சிலர் நமஸ்கரித்துவிட்டு அங்கேயே அமர்ந்தனர். பகவான் மௌனமாக சாந்த ஸ்வரூபியாக வீற்றிருந்தது. யாரையும் தனியாகக் கவனிக்கவில்லை. பூரண சாந்தி ததும்ப பகவான் அமர்ந்திருக்க மகிழ்வலைகள் மெல்ல அனைவரையும் அணைத்துச் சூழ்ந்தன. ஆனந்தம் நிலவியது. எல்லாவற்றையும் கவனித்தவாறு நின்றிருந்த நாராயண குருவின் மனதில் பகவானிடம் பெருமதிப்புப் பிறந்தது. சற்றுப் பொறுத்து அவர் மாமரத்தடியில் சென்று நின்று கொண்டார். அவர் தனியேதான் சாத்வீக உணவு சாப்பிடுவது வழக்கம். அவருடைய உள்ளூர் அன்பர்கள் அவருக்காக ஆகாரம் கொண்டு வந்திருந்தனர். அவர் மலைமேல் போயிருப்பதறிந்து அதை மேலே கந்தாச்ரமத்துக்கு எடுத்து வந்தனர். போஜனவேளை வந்ததும் பகவான், நாராயண குருவின் சிஷ்யர்களிடம் அவரைக் கூப்பிடும்படி குறிப்பிட்டது. பகவானே அவரைக் கூப்பிட வேண்டுமென்று சிஷ்யர்கள் இறைஞ்சினர். பகவானும் இணங்கி வெளியே வந்து தென்னை மரத்தின்கீழ் நின்றுகொண்டிருந்த நாராயணகுரு இருந்த இடத்தை ஏறிட்டு "எந்தா! எங்கள்டெ கூடெ ஊணு கழிச்சூடெ" என்று கூப்பிட, அவரும் "ஆகா! மகரிஷி பிரசாதம் சாப்பிடலாம்" என்று கீழிறங்கி வந்து பகவானுக்கருகில் உட்கார்ந்து கொண்டார். "காரமானதை நீக்கிவிட்டு உங்களுக்கு ஏற்றதை சாப்பிடலாம்" என்று சொன்ன பகவான், அவருக்காக தனி உணவு வந்திருப்பதைக் கவனித்ததும், "உங்களுக்குத் தனி உணவு வந்திருக்கிறது. இனி எல்லோரும் சாப்பிடலாம்" என்றது. சாப்பாட்டுக்குப்பின் பகவான் வழக்கம்போல் மலைமேல் உலவச் சென்றது. நாராயணகுருவும் அவருடைய மாமர நிழலுக்குத் திரும்பினார். அருகில் வந்த ஒரு சிஷ்யரிடம் "காழ்ச்ச வெக்கணும் தன்னெ?" (காணிக்கை வைக்க வேண்டாமா?) என்று கேட்டார். அந்த சிஷ்யரோ, எங்கிருந்து இப்போது பழமோ வேறேதாவதோ கொண்டு வந்து வைப்பது என்று திகைத்தார். அவரைக் காகிதமும், பேனாவும் கொண்டு வரச்சொல்லி "நிவ்ருத்திபஞ்சகம்" என்ற தலைப்பில் சமஸ்கிருதத்தில் ஐந்து செய்யுள்கள் எழுதினார் நாராயணகுரு. பகவான் திரும்பி வந்ததும் அதனருகில் அமர்ந்து, அந்தக் காகிதத்தை அதன் இருக்கையின்முன் வைத்துவிட்டு "ஈசான்ய மடத்திற்கு என்னை அழைத்துப்போக வந்திருக்கிறார்கள். போக வேண்டும்" என்றார். பகவானும் 'சரி' என்று தலையசைத்தது.

பின் நாராயணகுரு எழுந்து நின்று ஓரிரு நிமிடம் பகவான் கண்களையே உற்றுநோக்கி "அங்ஙனே ஆவட்டெ" என்றார் பரவசமாக. (நானும் அந்த சகஜ நிஷ்டநிலை அடைவேனாக என்று அர்த்தம்) அதன்பின் சிஷ்யர்களுடன் அவர் மலை இறங்கிச் சென்றார். ஊருக்குள் போனதும் நாராயணகுரு சிஷ்யர்களிடம் "மகரிஷி ராஜசர்ப்பம். ஒரே நோக்கினால் ஒருவனை உய்வித்து கதிசேர்க்க வல்ல பெரும் ஆன்மசக்தி அவருடையது. குடத்திலிட்ட விளக்குப் போல் இன்று அவர் உலகம் அறியாமல் இருக்கிறார். உலகத்தார் மேன்மேலும் குவிந்து, இந்த ஆன்ம பொக்கிஷத்தைக் கவர்ந்து அனுபவித்து உய்யும்வண்ணம், உலகுக்கு அவரைத் தெரியச் செய்ய வேண்டும். போதானந்தா, நீ இங்கு வந்து ஆறுமாதம் தங்கியிருந்து யாத்திரீகர்களுக்கு உண்ண உணவும், தங்க இடமும் அளிக்க ஏற்பாடு செய். அதனால் ஆயிரக்கணக்கான பேர்கள் மகரிஷியை அடுத்து, ஆன்மலாபம் பெறக்கூடும். தற்போது அவரைச் சுற்றி இருக்கும் சிலரும் வெறும் அன்னக் காவடிகள். பெரிய வித்வான்களும் சாதகர்களும் பெருமளவில் மகரிஷியை அடைய வேண்டும் என்றார்.

அங்கு இருந்து இதையெல்லாம் கேட்க நேர்ந்த பழனிஸ்வாமியை, நாராயணகுருவின் "அன்னக்காவடி" என்ற சொல் மிகவும் புண்படுத்திவிட்டது. அவர் பகவானிடம் எல்லாவற்றையும் விவரமாகத் தெரிவித்து. "அன்னக் காவடி" என்று நாராயணகுரு குறிப்பிட்டது தன்னை மிகவும் புண்படுத்தி விட்டது என்பதையும் சொன்னார். அந்தக் காயத்துக்கு மருந்தென வந்தது பகவானின் இதமான சொல்: "அவர் 'அன்னக்காவடி' என்றதற்கு நீ ஏன் பேசாமல் இருந்தாய்? 'மேல் போர்வை (காவடி)யைப் பார்ப்பானேன்? உள் நுழைந்து 'சத்' தைப் பாருங்கள்' என்று சொல்வதற்கென்ன?"

நாராயணகுரு தன்னிடம் வருபவர்களிடம், உங்கள் பெயரென்ன? எங்கிருந்து வருகின்றீர்கள்? என்ன வேண்டும்? எப்பொழுது போகப் போகிறீர்கள்? என்றெல்லாம் கேட்பதுண்டு. பகவானைப் பார்த்தபின் இந்த வழக்கத்தை அறவே விட்டுவிட்டார். (தன் நிவிருத்தி பஞ்சகத்தில் குறிப்பிட்டபடி, தன்னைச்சுற்றி நிகழும் எதனாலும் பாதிக்கப்படாத, குறைவற்ற நடுநிலைமை பகவானுடையது.) தமிழ் நாட்டிலிருந்து யாராவது தன்னிடம் வந்தால் "கைக்கெட்டும் தூரத்தில் மகரிஷி இருக்க, இங்கு எதற்கு வந்தீர்கள் முதலில் அவரை தரிசித்துவிட்டு வாருங்கள்" என்பார். வர்க்கலையிலிருந்த தன் ஆச்ரமத்துக்குத் திரும்பியதும், "முனிசர்ய பஞ்சகம்" என்று மற்றொரு ஐந்து பாக்கள் எழுதி பகவானுக்கு அனுப்பினார். பகவானும் அதைப் படித்து சிலாகித்தது.


(தொடரும்...


## சிந்திக்க யாருளர்?

காலம் கனிந்துள்ளது.
கடவுளும் கனிந்துள்ளார்.
கோலம் மலர்ந்துள்ளது.
கோவிலும் வளர்ந்துள்ளது.
ஞாலம் வளர்ந்துள்ளது.
நாளும் வளர்ந்துள்ளது.
சீலம் நிறைந்துள்ளது.
சிந்திக்க யாருளர்?

-கே.எஸ். சிவஞானராஜா-

# படங்கள் தரும் பதிவுகள்






வைகாசிமாத "ஞானச்சுடர்"
சிறப்புப்பிரதி வழங்கல்.



வைகாசிமாத - சிறப்புப்பிரதி பெற்ற சிலர்.




பிறருக்கு இன்பம் உண்டாகும்படி பேசு.

# பாரதப்போரில் ஸ்ரீ ஆஞ்சநேயரின் பாத்திரம்

திரு ஆ. இராசரத்தினம் அவர்கள்

அஞ்சிலே ஒன்றுபெற்றான் அஞ்சிலே ஒன்றைத்தாவி
அஞ்சிலே ஒன்றாறாக ஆரியர்க்காக ஏகி .
அஞ்சிலே ஒன்றுபெற்ற அணங்கைக்கண்டயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவன் நம்மை அளித்துக்காப்பான்

என்பது இராமாயணத்தில் கவிச்சக்கரவர்த்தி கம்பன் அருளிய ஆஞ்சநேயர் துதி. அதன் விளக்கமாவது,



பஞ்சபூதங்களில் ஒன்றாகிய வாயுதேவனின் புதல்வன், பஞ்சபூதங்களில் ஒன்றாகிய (நீர் நிறைந்த) கடலைத் தாவி, ஆரிய னாகிய இராமனுக்காக பஞ்சபூதங்களில் ஒன்றாகிய வாயு மண்டல வழியாகச் சென்று பஞ்ச பூதங்களில் ஒன்றாகிய பூமாதேவி பெற்ற நங்கை சீதா பிராட்டியை அயல்நாட்டவரின் ஊராகிய இலங்கையில் கண்டபின் பஞ்சபூதங்களில் ஒன்றாகிய தீயை வைத்த அவன் (சகல நன்மைகளையும்) அளித்து நம்மைக் காப்பானாக.

ஆஞ்சநேயர், வாயுபகவானுக்கும். அஞ்சனாதேவிக்கும் மகனாகப் பிறந்தவர். வாயுதேவனுக்கும் குந்திதேவிக்கும் மைந்தனாகப் பிறந்தவன் பீமன். இராமாயண காலத்தில் ஆஞ்சநேயர் சிறப்புப் பெற்றவர். மஹாபாரத காலத்தில் பீமன் சிறப்புப் பெற்றவன்.

சமீப காலமாக ஆஞ்சநேய வழிபாடு மிகப் பிரசித்திபெற்று வருகிறது. ஏனெனில் சனித்தோஷத்தால் சங்கடம் நேருமோ எனக் கலங்குவோரும், செவ்வாய் தோஷத்தால் திருமணம் தடைப்பட்டு வருந்துவோரும் ஸ்ரீ மஹாவீர ஆஞ்சநேயர் சந்நிதிக்கு வந்து வழிபட்டால் சங்கடங்கள் அனைத்தும் விலகும், சந்தோஷம் பெருகும் என்பது ஒரு நம்பிக்கை. இது சம்பந்தமாக ஒரு புராணக்கதையும் உண்டு.

வருடந்தோறும் மார்கழிமாத மூலநட்சத்திர நாளில் ஸ்ரீ ஹனும ஜெயந்தி மிகக் கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது. அன்றும், பிரதி சனிக்கிழமை, செவ்வாய்க் கிழமைகளிலும் ஸ்ரீ ஹனுமனுக்குப் பால், தயிர், தேன், இளநீர், நெய் ஆகியவற்றால் அபிஷேகமும், வடைமாலை, வெற்றிலைமாலை, எலுமிச்சம்பழ மாலை இவை சாத்தி வழிபடுவது வழக்கம்.

உடல்நலம் குன்றியவர்கள், பில்லிசூனியம் மற்றும் ஏவல் இவைகளினால் பாதிக்கப்பட்டவர்கள் நல்லெண்ணெய் விட்டு (ஒன்பது அகல்விளக்குகளில்) எள் தீபமேற்றி ஸ்ரீ ஹனுமனை வணங்கினால் தீராதநோயும் தீரும். எதிரிகள் தொல்லை, தீய சக்திகளின் தொல்லை போன்றவைகள் அணுகாது. எங்கெல்லாம் ராம நாமம் ஒலிக்கின்றதோ, அங்கெல்லாம் பக்திப்பரவசத்துடன் கண்களில் நீர்மல்க எவன் காணப்படுகிறானோ அவனே மாருதி என்னும் வாயுபுத்திரன் என்ற ஹனுமான். ராமசேவை ஒன்றையே தன் லட்சியமாகக் கொண்டு ராம நாமத்தையே யுகம் யுகமாக ஜெபித்துக்கொண்டு இருப்பவன் சிரஞ்சீவியான ஸ்ரீஹனுமன்.

இந்தியா தமிழ்நாட்டிலே பல இடங்களில் ஸ்ரீ ஹனுமான் கோயில்கள் இருக்கின்றன. மேலும் சமீபகாலத்தில் காஞ்சிப்பெரியவரின் ஆசியோடு நங்க நல்லூரில் 32அடி உயர ஆஞ்சநேயர் சிலையோடு கூடிய ஆலயம் ஒன்று பெரியவரின் அன்பரான எஸ். ரமணி என்பவர் நிர்மாணித்துள்ளார்.

மேலும் திண்டிவனம்- புதுச்சேரிக்கிடையேயுள்ள பஞ்சவடியில் 36 அடி உயரமான பஞ்சமுக ஆஞ்சநேயர் சிலையுடன் கூடிய ஆலயம் ஒன்றையும் நிறுவியுள்ளார்.

இளையவரும் இதர வானர வீரர்களும் இறுதி மூச்சை விடப்போகிறவர்களாக மூர்ச்சையடைந்து கிடப்பதைக் கண்ட இராமர் தவிப்புமேலிட்டு ஹனுமனை நோக்க ஜாம்பவான் மெதுவாகச் சுதாகரித்து எழுந்து சஞ்சீவி மலையில் உள்ள அமிர்த சஞ்சீவி மூலிகையைக் கொண்டு வந்தால் அனைவரும் பிழைத்துக் கொள்வார்கள் என்று உபாயம்கூற, உடனே ஹனுமான் இராமரை வணங்கிப் புறப்பட்டார். மூலிகையை அடையாளம் காண அவகாசம் இல்லாமையினால் சஞ்சீவி மலையை அப்படியே பெயர்த்தெடுத்துத் தூக்கி ஆகாய வழியாக வருகையில் வங்காளக்கடல் ஓரத்தில் மாலை மயங்கும் வேளையில் சந்தியா வந்தனம் எனப்படும் நித்திய கர்மத்தைச் செய்வதற்காக ஹனுமான் இறங்கிய இடம்தான் புதுப்பாக்கம்.

இராமாயண காலத்தில் ஹனுமான் இங்கு வந்ததால் வியாச மகரிஷி ஹனுமானுக்கு அங்கு கோயில் எழுப்பினார் என்பது ஐதீகம். 108 படிகளைக் கொண்ட இக்கோயில் கஜகிரி எனும் குன்றின் உச்சியில் உள்ளது. அங்கே வீர ஆஞ்சநேயர் காட்சி தருகிறார். தாம்பரம்- கேலம்பாக்கம் மார்க்கத்தில் வண்டலூரில் இருந்து 12 கி.மீ தூரத்தில் இவ்விடம் உள்ளது.

இலங்கையில் கண்டியில் உள்ள "றம்பொடை" என்ற இடத்திலே சின்மயானந்த மிஷனால் கட்டப்பட்டுள்ளது ஒரு ஹனுமான் ஆலயம். மிகவும் விஷேசமானது. யாழ்ப்பாணம் மருதனார் மடத்தில் துர்க்காதேவி தேவஸ்தானத்தின் முன்னால் பிரதமகுரு அவர்களால்

ஒரு ஹனுமான் கோயில் கட்டப்பட்டுள்ளது. அங்கு சனீஸ்வரனும் மஹாகணபதியும் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளதால் அநேக பக்தர்கள் சனிக்கிழமைதோறும் நேர்த்திக்கடன் செய்கிறார்கள். கொழும்பில்கூட தெஹிவல என்னுமிடத்தில் ஒரு பிரசித்தி பெற்ற ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலயம் உண்டு. அங்கும் பக்தர்கள் தினமும் வழிபாடு செய்து தங்கள் கவலைகளைத் தீர்த்துக் கொள்கிறார்கள்.

இராமாயண காலத்தில் ஹனுமான் ஒரு மிகச்சிறந்த பாத்திரத்தை ஏற்றுள்ளார். அதாவது இராம - லட்சுமணரையும் சுக்கிரீவன் முதலியோரையும் அறிமுகம் செய்து வைத்தார். பின்னர் இராமரின் மனைவி சீதாபிராட்டி எங்குள்ளார் என்பதை அறிந்து வந்து இராமரிடம் அறிவித்தார். இவைகளினால் அவரது கல்வி, ஞானம், அறிவு, சொல்வன்மை இவைகளை மெச்சி “சொல்லின் செல்வன்” என்ற புகழையும் பெற்றார். இலங்கையில் தீ மூட்டியதையும் யாரும் மறந்திருக்க மாட்டார்கள்.

மேலும் இராமாயணக் காதையில் ஸ்ரீ ஹனுமான் பின்வருவோரைக் காப்பாற்றியுள்ளார்.

1) சீதாப்பிராட்டி தன்னை மீட்கச் ஸ்ரீ இராமன் வருவாரா வரமாட்டாரா என்ற ஐயத்தில் உயிர் நீக்க முயற்சித்த வேளையில் அவர்முன்தோன்றி ஸ்ரீ ராமஜெயம் கூறிச் சீதாப்பிராட்டியைக் காப்பாற்றினார்.

2) உரிய நேரத்தில் சிரஞ்சீவி மலையைக் கொண்டுவந்து இலட்சுமணனையும் வானர வீரர்களையும் காப்பாற்றியுள்ளார்.

3) இராமபிரான் திரும்பி வருவதில் தாமதமேற்பட்டதால் தீயை மூட்டி அதில் வீழ்ந்து மடியப்போன பரதனை விண்ணிலே ஸ்ரீ ராம மந்திரத்தைக் கூறிக் குரல் கொடுத்து அவரைக் காப்பாற்றினார்.

ஆகவே பாரதப்போரில் ஆஞ்சநேயர் இவ்வாறு பெருமையடையக்கூடிய யாதேனும் புரிந்திருக்கிறாரா என்று பார்ப்போம்.

மஹாபாரதப்போரிலே ஸ்ரீ கிருஷ்ணன் தேரோட்ட அர்ச்சுனன் துரியோதனனின் படைகளைத் துவம்சம் செய்துகொண்டிருந்த அந்தத் தருணத்தில் அவனின் தேரின் மேலே ஒரு கொடி கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தது. அந்தக் கம்பீரத்துக்கான காரணம் அதில் காவலனாக வீற்றிருந்த ஸ்ரீ வீர ஆஞ்சநேயரே.

குருஷேத்திர யுத்தம் முடிவுக்கு வந்தது. அர்ச்சுனன் மனதுக்குள் அவன் பெற்ற வெற்றி உற்சாகத்தைத் தர அடுத்தகணம் அதுவே கர்வமாக உருவெடுத்தது. எத்தனை பாணங்கள் எய்தோம். எத்தனை எதிரிகளை வென்றோம். இதோ இன்று தன்நிகரில்லாத வீரனாக நிற்கிறேன் என்ற ஒரு கர்வம்.

எந்தச் செயலையும் தன்னால் செய்ய முடியும் என்பது தன்னம்பிக்கை. தன்னால் மட்டுமே செய்ய முடியும் என நினைப்பது கர்வம், தலைக்கனம். தனது திறமையை அல்லது பெருமையைத் தானே உயர்வாக நினைப்பதும் கர்வம் என்பார்கள். தனது அழகு, செல்வம், உத்தியோகம், அதிகாரம், திறமை, உடல்வளம் ஆகியவற்றால் கர்வம் கொள்பவர்களும் உண்டு. தன்னை அறிவாளியாக நினைப்பதில் தவறில்லை. ஆனால் மற்றவர்கள் எல்லோரும் முட்டாள்கள் என நினைப்பதுதான் கர்வத்தின் வெளிப்பாடு.

பூபாரம் குறைக்க வந்தவன் மாயக் கிருஷ்ணன். பாரதப்போரில் பாண்டவர்களின் வெற்றிக்காக, முக்கியமாகக் கர்னனிடமிருந்து கவச குண்டலத்தை இந்திரன் மூலம் பெற்றவர் யார்? குந்திமூலம் கர்னனிடம் நாகாஸ்திரத்தை இரண்டாவது தடவை பிரயோகிக்கக் கூடாது எனச் சத்தியவாக்குப் பெற்றது யார்? இவைகளை விட மரணத்தறுவாயிலே கர்னனிடமிருந்து அவன் பெற்றிருந்த தர்ம பலன்களை அவனிடமிருந்தே யாசித்துப் பெற்றது யார்? இவ்வாறு மாய லீலைகளைச் செய்த கண்ணன் அர்ச்சுனனின் மனதில் தோன்றிய கர்வத்தை அறியாமல் இருப்பானா? மனதுக்குள் சிரித்துக்கொண்டான்.

தேரில் இருந்து இறங்க முனைந்தான் அர்ச்சுனன். தேரில் இருந்து இறங்குபவருக்கு சாரதி கைகொடுத்து உதவவேண்டும் என்பது மரபு. "தேரை விட்டு இறங்கவேண்டும், கிருஷ்ணா கொஞ்சம் கைகொடேன்" அர்ச்சுனன் கேட்டான். "இத்தனை காலமும் தேரைச் செலுத்திக் களைப்பாகி விட்டேன். நீயே இறங்கிக்கொள்ளேன்" என்றார் கிருஷ்ணர். அர்ச்சுனனும் சம்மதித்தான். ஆனாலும் அவனுடைய கர்வம் மட்டும் இறங்கியபாடில்லை. வெற்றி மமதையுடன் கீழே இறங்க அவனையடுத்து ஸ்ரீ கிருஷ்ணரும் கீழே இறங்கினார். அவ்வளவுதான் தேர் குபீரென்று தீப்பிடித்து முற்றாக எரிந்து சாம்பலாயிற்று. அதிர்ந்துபோனான் அர்ச்சுனன். மெல்லப் புன்னகைத்த மாயக் கிருஷ்ணர் பின்வருமாறு கூறினார்.

"அர்ச்சுனா உனக்கு ஞாபகமிருக்கிறதா? போரில் உன்மீது கர்னன் நாகாஸ்திரத்தைப் பிரயோகித்தபோது உடனே நான் தேரைக் கீழே அழுத்தினேன். உன் தலை தப்பியது. ஆனால் அப்பாணத்தின் பாதிப்பை கொடியில் இருந்த ஹனுமான் இதுவரை ஏற்றிருந்தான். இப்போது தேரைவிட்டு நான் இறங்கியதும் ஹனுமானும் இறங்கிவிட்டான். நாகாஸ்திரமும் தன் வேலையைக் காட்டிவிட்டது. இதோ பார்த்தாயா தேர் எரிந்து சாம்பலாகி விட்டது" என்றார். தேர் மட்டுமா சாம்பலானது? அர்ச்சுனனின் கர்வமும்தான். ஸ்ரீ கிருஷ்ணரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டான்.

இராமாயண காதையில் ஸ்ரீ ஹனுமான், மேலே குறிப்பிட்ட மூன்று சந்தர்ப்பங் களின்போதும் ஸ்ரீ இராமனுடைய, சகோதரர்களான பரதன், இலட்சுமணனுடன் வானர வீரர்கள், அவரின் பாரியாரான சீதாப்பிராட்டியாரையும் காப்பாற்றியிருக்கிறார். இலங்கையில் தீயை மூட்டினார். பாரத காவியத்தில் நாகாஸ்திரத்தினால் அர்ச்சுனனையும் மற்றெவரும் எரிந்து போகாமல் காப்பாற்றினார்.

தேர்க்கொடியில் இருந்து யுத்தத்தில் தனக்கு மகத்தான வெற்றியைத் தேடித் தந்தவரும் நாகாஸ்திரத்தில் இருந்து தன்னைக் காப்பாற்றியவருமான ஆஞ்சநேயருக்கு நன்றிதெரிவிக்க விரும்பினான் அர்ச்சுனன். இது குறித்து ஸ்ரீ கிருஷ்ணருடன் ஆலோசித்தான். "நன்றி காட்டுவது உத்தமமான குணம்தான். நான் காட்டும் இடத்தில் ஸ்ரீ வீர ஆஞ்சநேயரின் விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்து வழிபடுவாயாக" என்று கூறி அருளினார்.

அதன்படியே ஸ்ரீ ஹனுமனின் விக்கிரகத்தைக் கர்நாடக மாநிலம் கோலார் மாவட்டம் முல்பாகலில் பிரதிஷ்டை செய்து வழிபட்டான். இதை இன்றைக்கும் தரிசிக்கலாம். முல்பாகல் என்ற இடம் பெங்களூரிலிருந்து சுமார் 100 கி.மீ தொலைவிலும் கோலார் நகரிலிருந்து சுமார் 30 கி.மீ தொலைவிலுமுள்ளது.

# திருமந்திரக் கதைகள் (தொடர்ச்சி...)

திரு கே.வீ. குணசேகரம் அவர்கள்

## 8. சொல்லாமல் வரும்

"மன்றத்தே நம்பி மாடம் எடுத்தது
மன்றத்தே நம்பி சிவிகைபெற் றேறினான்
மன்றத்தே நம்பி முக்கோடி வழங்கினான்
சென்று, 'அத்தா' என்ன, திரிந்திலன் தானே"

அலங்கார மண்டபம் அமைத்து ஊர்மக்கள் அனைவரையும் அழைத்து பெருஞ்செலவில் திருமணம் செய்து, திருமணத்திற்கு வந்தவர்களுக்கு உணவும் உடையும் அளித்து, ஏழைகள் கற்க நிதியும் கொடுத்தான். ஊருக்குதவி செய்தவர் திடீரென்று மரணமானார். ஊரவர்கள் எல்லோரும் ஒன்றுகூடி அவரது தான தர்மங்களைப் பற்றிப் பெரிதாகப்பேசி அழுது குழறி, துக்கம் தாங்க முடியாது மயங்கி விழுந்தனர். பின் பாடைகட்டி அவரது பிரேதத்தைத் தூக்கி வைத்துச் சுடலைக்குக் கொண்டு சென்றனர்.

திருமந்திரம் வாழ்க்கை நிலையாமையைப் பற்றிக்கூறும் பாடல் இது. எந்தப் பெரிய தனவந்தனாக இருந்தாலும் அவன் தானதர்மங்களை அளவுக்கதிகமாகச் செய்தாலும் அவனுக்கு மரணம் உண்டாகும் என்பதைக் கூறுவது இப்பாடல்.

அவன் பெருந் தனவந்தன். ஊரிலுள்ள ஏழை எளியவர்களுக்குத் தன்னாலான உதவிகளைச் செய்வான். பாடசாலைக்குச் செல்லாத ஏழைப் பிள்ளைகளைத் தானே பாடசாலைக்குக் கூட்டிச் சென்று அவர்களுக்குத் தேவையான கற்றல் உபகரணங்களை வாங்கிக் கொடுத்து உடையும் உணவும் கொடுத்துக் கற்பிப்பான். ஏழைப் பெண்களுக்குச் சீர்வரிசை கொடுத்துத் திருமணம் செய்து வைப்பான். பிள்ளைகளால் கவனிக்கப்படாத பெற்றோருக்கு உடையும் உணவும் கொடுப்பான். அவர்கள் மகிழ்ச்சியுடன் தங்கியிருக்கச் சகல வசதிகளும் கொண்ட காப்பகம் அமைத்துக் கொடுத்தான்.

ஒருநாள் அவன் கோயிலுக்குச் சென்றபோது ஓர் அழகான பெண்ணைக் கண்டு காதலுற்றான். அவள் பரம ஏழை. அன்று கோயிலுக்கு வந்தபோது பழைய ஒரு சேலையையே அணிந்திருந்தாள். அந்தப் பழைய சேலையை மீறிய ஓர் அழகு அவளது முகத்தில் பிரகாசித்தது. சாத்வீகத் தன்மை வாய்ந்த அந்த ஒளி பொருந்திய முகத்தை அவனால் மறக்கமுடியவில்லை. தனது இனத்தவரைஅழைத்து அவள் யாரென்று அறிந்துவரும்படி கூறினான்.

அவள் மிகவும் ஏழைக்குடும்பத்தில் பிறந்தவள். தகப்பன் பெருங்குடிகாரன். அவள் உள்ளூரில் உள்ள வயல்களில் கூலிவேலை செய்து வந்தாள். இருப்பினும் அவளை மறக்க அவனால் முடியவில்லை. பெற்றோரை அவளின் வீட்டுக்கு அனுப்பிப் பெண் கேட்டான்.

ஒரு சில நாட்களில் திருமணம் நடைபெற்றது. திருமண நாளன்று ஊர் தேவலோகம்போல அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஊர்க்கோயில்களிலெல்லாம் பூசைகள் நடைபெற்றன. பாடசாலை மாணவர்களுக்கு உணவும் உடையும் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. ஊர்ப் பிள்ளையார் கோயில் வடக்கு வீதியில் அந்த ஊர் மக்கள் அனைவரும் சகல வசதிகளுடனும் தங்கியிருந்து திருமணத்தைப் பார்க்கக்கூடிய வசதி செய்யப்பட்டது. ஊரவர்களும் அயலவர்களும் அங்கு திரண்டிருந்தனர். திருமணம் முடிய எல்லோருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது. ஏழைகளுக்கு உடுபுடைவைகள் வழங்கப்பட்டன.

அவனது குணத்தை திருமணத்திற்கு வந்தவர்களெல்லோரும் பாராட்டினர். அவன் திருமணம் செய்த பெண் பெரும் அதிஷ்டம் செய்தவள் என்றும் தர்மம் செய்தவள் என்றும் ஒவ்வொருவரும் பேசிக் கொண்டனர்.

திருமணம் முடிந்தபின் ஒருமாதம் அந்தத் திருமண நிகழ்வு கொண்டாடப்பட்டது. கொண்டாடப்பட்ட முப்பது நாட்களும் ஏழைகளுக்கு உணவு வழங்கப்பட்டது.

முப்பத்தோராவது நாள் திடீரென்று அவன் மரணமானான். அவன் ஏன் இறந்தானென வைத்தியர்களாற் கூறமுடியவில்லை. ஊரவர்கள் பெருங்குரலெடுத்து அழுதார்கள். பலர் மயக்கமடைந்தனர்.

"ஐயோ அந்தப் புண்ணியவானைக் கவர்ந்து செல்ல எப்படிக் கண்கெட்ட யமனுக்கு மனம் வந்தது. ஊரவர்கள் அனைவருக்கும் தந்தையாக இருந்து அனைவரினதும் தேவைகளை அவர்கள் கூறாமலே அறிந்து உதவிகள் பலவும் செய்யும் அந்த உத்தமனை விட்டு விட்டு என்னைக் கொண்டு சென்றிருக்கலாம்" என்று ஒரு பெரியவர் பெருங்குரலெடுத்து அழுதழுது சொல்லிக் கொண்டிருந்தார்.

அந்த இழப்பை ஊரவர்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அதனால் அவனது உடலைப் பதப்படுத்திச் சில நாட்கள் வைத்திருந்துவிட்டுப் பாடை கட்டி அதிலே அவனது உடலைத் தூக்கி வைத்து ஊரவர்கள் சுமந்து கொண்டு சுடலைக்குச் சென்றார்கள்.

பெரும் தனவந்தனாக இருந்தாலென்ன, தர்மவானாக இருந்தாலென்ன மரணம் என்பது சொல்லாமல் கொள்ளாமல் வரும். அதனால் மரணம் வருமுன் மக்கள் தர்மமான நற்செயல்களைச் செய்வதோடு சிவனைத் தொழுது மரண பயத்தை அகற்ற வேண்டும்.

(தொடரும்...

வள்ளலே திருக்குமரா வடிவேலா
வரம்தந்து நலமருள வருவாயே
கள்ளம் நீக்கிக் கபடம் நீக்கி எமைக்காத்து
கடுகளவு துயர் வரினும் களைவாயே
தெள்ளுதமிழ் பாடல் ஓத அருள்வோனே
செய்யும் தொழில் நலமாக அருள்வாயே
உள்ளமதில் உறையும் நற் பெரியோனே முருகா
உவகை பொங்க தினம்நின்று அருள்வாயே


- சின்னப்பு தனபாலசிங்கம் -

# ஓம் சிவலிங்காய நம

திரு சிவ. சண்முகவடிவேல் அவர்கள்

திருமூல நாயனாரின் திருமந்திரம் என்னும் நூலில் லிங்க சிந்தனையில் எழுந்த மந்திரங்களில் ஒன்று இது.

மலர்ந்த அயன்மால் உருத்திரன் மகேசன்
பலந்தரும் ஐம்முகன் பரவிந்து நாதம்
நலந் தருஞ் சத்தி சிவன்வடி வாகிப்
பலந் தரு லிங்கம் பராநந்தி யாமே. (1776)



நாயனார் மேலும், அண்டலிங்கம், பிண்ட லிங்கம், சதாசிவ லிங்கம், ஆத்மலிங்கம், ஞான லிங்கம், சிவலிங்கம் என்று லிங்க வேறுபாடுகளைப் பகுத்துத் திருமந்திரங்களாகச் செப்பத் துணிவார்.

சிவபெருமான் உலகு எல்லாம் உணர்ந்து ஓதுதற்கு அரியவர். நிலா உலவிய நீர்மலி வேணியர். அலகு இல்லாத சோதியார். அம்பலத்தில் ஆடுவார். அவருடைய மலர் போன்ற சிலம்பணிந்த திருவடிகளை வாழ்த்துவதும் வணங்குவதும் எமது கடமையாகும் என்று பெரியபுராணத்தில் அருந்துதி பாடி மாக்கதையை எடுப்பார் சேக்கிழார் பெருமான்.

சிவபெருமான் அநாதி முத்த சித்துருவானவர். முப்பத்தாறு தத்துவங்களுக்கு அப்பாற்பட்டவர்.

அப்பாலைக் கப்பாலைக் கப்பாலானவர் என்று திருத்தாண்டகம் எடுத்துப் பாடும்.

அந்தோ அந்தோ அந்தோவே! என்று திருவாசகத்தில் மணிவாசகனார் அணிக்கு மேல் அணியாக அடுக்குவார்.

சிவபெருமான் தந்தையாரொடு தாயிலாதவர். ஆயினும் அனைத்து ஆன்மாக்களுக்கும் தந்தையும் தாயுமானவர்.

"அப்பன் நீ அம்மை நீ ஐயன் நீ அன்புடைய மாமனும் மாமியும் நீ....." என்று உறவுகொண்டாடும் தேவாரம். ஆனால் வாக்கிற்கும் மனத்திற்கும் எட்டாதவர்.

பசு பாச ஞானங்களால் பகர ஒண்ணாதவர். அதி சூக்குமப் பொருள் சிவபெருமான்.

"கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுர்வே"
"உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே..."

என்றெல்லாம் சிவபிரானுடைய அதிசூக்குமத்தை வெளிக்கொணரத் திருமுறைகள் ஒலிக்கும்.

சீவர்களுடைய பாசத்தை நீக்கி நேசத்தை ஆக்கும் பொருட்டுச் சிவபெருமான் முத்திறத் திருமேனி கொள்வர்.

அவை, அருவம், உருவம், அருவுருவம் என்பனவாம். அருவத் திருமேனி சிவம் சத்தி நாதம் விந்து என நான்காகும். அருவுருவத் திருமேனி சதாசிவம் என்று அழைக்கப்படும். உருவத் திருமேனி, மகேஸ்வரன், உருத்திரன், மால் அயன் என நான்காகும். அவை ஒன்பதும் நவந்தரு பேதம் என்று சைவசித்தாந்த ஞானிகள் நவில்வர்.

இம்மூவகைத் திருமேனிகளையும் முறையே நிஷ்களம், சகள நிஷ்களம், சகளம் என்றும் சாற்றுவர்.

அருவுருவத் திருமேனியாகிய சாதாக்கியம் ஐவகைப்படும். அவையாவன சிவசாதாக்கியம், அமூர்த்தி சாதாக்கியம், மூர்த்தி சாதாக்கியம், கர்க்கிரு சாதாக்கியம், கன்ம சாதாக்கியம் என்பன.

கன்ம சாதாக்கியம் ஐந்தொழில் இயற்றுவது. லிங்கமும் பீடமும் கூடியது. உலகத் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் உரித்து உடையது.

சிவலிங்கம் கேடில்லாத போகப்பேற்றிற்கும் வருத்தும் பந்த பாசத்தை நீக்கும் வீடுபேற்றிற்கும் சாதனமாகும். இன்னும் உலகத் தோற்றம் நிலைபெறுதல் ஒடுக்கல் ஆகியவை நிகழ்வதற்கு இடமாகும்.

பிரமனாகிப் படைத்தல் திருமாலாகிக் காத்தல் உருத்திரராகிச் சங்கார மூர்த்திகளுக்குத் தலைமைத் தாகியும் ஆதியும் அந்தமும் அரிதற்கரிய அரும்பெரும் சுயம்பிரகாச சோதியுமாகி விளங்குவது, அகண்ட பரிபூரணம் நிறைந்த சிவமாகிய சிவலிங்கம்.

சிவலிங்கத் திருமேனியின் அடிப்பாகம் ஆன்ம தத்துவம். அது பிரமபாகம் எனப்படும். திருமால் பாகமாகிய நடுப்பாகம் வித்தியா தத்துவம் என்று அழைக்கப்படும். மேற்பகுதி உருத்திர பாகமாகிய சிவதத்துவம்.

மூன்று தத்துவங்களிலிருந்து முறைப்படி அளவிறந்த ஏனைய எல்லாத் தத்துவங்களும் தோற்றும்.

ஆன்ம தத்துவம் 24. அவையாவன- பூதம் 5, தன்மாத்திரை 5, ஞானேந்திரியம் 5, கன்மேந்திரியம் 5 அந்தக்கரணம் 4.

வித்தியா தத்துவம் 7. அவையாவன- காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை

சிவதத்துவம் 5. அவை- சுத்தவித்தை, ஈச்சுரம், சாதாக்கியம், சக்தி, சிவம் என்பனவாம்.

"வித்தையோ டீசர் சாதாக்கியஞ் சத்தி சிவங்களைந்தும், சுத்தத் துவஞ்சி வன்றன் சுதந்தர வடிவமாகும்" என்றருளும் சிவஞான சித்தியார்.

பிரணவம் என்பது, அகர உகர மகரம். விந்து நாதமாகத் தோன்றும் பிரணவத்தில் காயத்திரி தோற்றும். காயத்திரி சமட்டி வியட்டி என இருவகைப்படும்.

சிந்தனைக்கு எட்டாத சிவலிங்கப் பெருமான் விரும்புவது பூசனை என்பதற்குப் பிரமாணம் பெரியபுராணம்.

"எண்ணி லாகம மியம்பிய விறைவர் தாம் விரும்பும்
உண்மை யாவது பூசனை யெனவுரைத் தருள...."

இந்தப் பூமியைப் படைத்த பிரமதேவர், திருமால், உமாதேவியார் செய்கின்ற பூசையை ஏற்றருளும் மகாதேவர் மானுட பூசைக்கும் மகிழ்ந்தருள்வர் என்பது கந்தபுராணக் கடைசி மூன்று பாடல்களுக்கு முன்னுள்ள பாடல்.

"…..இப்பார், செய்யுற் றவன்மா லுமை
பூசைகொ டேவ தேவன், வையத் தவர்செய் வழிபாடு
மகிழு மன்றே…."

பார்வதி தேவியாருடைய பூசையின் பரிமளிப்பை "மலை வல்லி, மாறி லாவகை மலர்ந்தபே ரன்பாற், சிரம்ப ணிந்தெழு பூசைநா டோறும், திருவுளங்கொளப் பெருகிய தன்றே…." என்னும் பெரியபுராணச் செய்யுளாலும்

விநாயகப்பெருமான் விரும்பிய பூசையினை,

"……தாண்டவம் புரியுந் தாதை தன்னுருத் தாபித்
தேத்திப், பூண்டபே ரன்பிற் பூசை புரிந்தனன்"

என்னும் கந்தபுராணப் பாடலாலும், பன்னிரு கரத்தோன் பண்ணிய பூசையை,

"முழுதொருங் குணர்ந்திடு முருகன் யாவருந்
தொழுந்தகு மிறைவனூற் றொடர்பு நாடியே
விழுமிய கண்ணுதல் விமலன் றாண்மலர்
வழிபடல் புரிந்தனன் மனங்கொள் காதலால்"

என்னும் கந்தபுராணக் கவியாலும்,

நான்முகன் நாராயணன் இயற்று பூசையை,

"இருவருமச் சிவனுருவை யியன்முறையாற் றாபித்து
விரைமலர்மஞ் சனஞ்சாந்தம் விளக்கழலா தியவமைத்துப்
பொருவருபூ சனைபுரிந்து போற்றிசெய்து வணங்குதனு
மெரிகெழுசோ திக்கணித்தா வெந்தையவன் வந்தனனே,

என்ற கந்தபுராணப் பாடலினாலும்,

துர்க்காதேவியின் பூசையை,

"வென்றிடுங் கன்னி மேதிச்
சென்னி விக்கிரமன் றன்னைக்
கொன்றதன் பாவந் தீரக்
குறித்திட வருள்வாய் போற்றி"

என்று திருவாதவூரடிகள் புராணச் செய்யுளாலும் அறியலாகும். இவ்வளவுதானா சிவலிங்க பூசை? ராமர், சண்டேசுர நாயனார், மார்க்கண்டேயர், அகத்தியர், இந்திரன் முதலாம் தேவர்கள் முனிவர்கள் மானுடர்கள் முதலாம் தொடக்கத்தவர்கள் ஆற்றிய சிவபூசைக்கு முடிவு ஏது.

**சந்நிதியான் பிரசாதம்**

**சந்நிதியான் திருவருளால் தழைத்தனவாம் பணிகளுள்ளே
செந்நெறியில் நடாத்திவரும் சிவஞானச் சுடரொளியே
இன்னலெனு மிருள்நீக்கி இதயமெலாம் மலர்விக்கும்
உன்னரிய பிரசாதம் உவந்தேற்றுப் பயன்கொள்க.**

**-மு. தியாகராசா-**

# "காளமேகம்" பாடல்கள் (தொடர்ச்சி...)



## புலி போகுமோ:

தில்லை நடராஜப் பெருமானைப் போற்றிப்பாட நினைக்கிறார் காளமேகம். பெருமானின் திருநடனத்தைக் கண்டு எப்பொழுதும் அகலாதிருக்கும் புலிக்கால் முனிவரும் பெருமானின் நடனமும் அவரை ஒரே சமயத்தில் ஆட்கொள்ளுகின்றன. கவிஞர் பாடுகின்றார்.

நாட்டுக்கு ளாட்டுக்கு நாலுகா லையாநின்
ஆட்டுக்கு இரண்டுகா லானாலும் - நாட்டமுள்ள
சீர்மேவு தில்லைச் சிவனேயிவ் வாட்டைவிட்டுப்
போமோசொல் லாயப் புலி.

சீர்மேவும் தில்லைச் சிவனே!- புகழ் விளங்கும் தில்லை நகரத்தே கோயில் கொண்டிருக்கும் சிவபெருமானே, ஐயா- ஐயனே, நாட்டுக்குள் ஆட்டுக்கு நாலு கால்- நாட்டிலே ஆடுகளுக்கு நான்கு கால்களே, நின் ஆட்டுக்கு இரண்டு கால்- உன்னுடைய நடனத்திற்கோ இரண்டுகால்கள் தான், ஆனாலும், நாட்டமுள்ள இவ்வாட்டை விட்டு- விருப்பமுள்ள இந்த ஆட்டை விட்டுவிட்டு, போமோ சொல்லாய் அப்புலி- அந்தப் புலியாகிய வியாக்கிர பாதரும் நீங்கிப் போவாரோ! நீயே சொல்வாயாக.

வியாக்கிரபாதர் புலிக்கால் முனிவர்; இவரைப் புலி எனவும், பெருமானின் நடனத்தை ஆடு எனவும் குறிக்கின்றார் கவிஞர். அவர் எப்பொழுதும் நடராஜனின் திருநடனத்தைக் கண்டு தொழுதிருப்பவர் என்பதும் குறிக்கத்தக்கது. புலி ஆட்டை விட்டுப்போகாது என்பது உலகியல் உண்மை. அதனை நயமுற அமைத்துப் பாடிய திறத்தைப் போற்ற வேண்டும்.

## நீ ஏழையானால்?

சிவபெருமான் அடியவர்க்கு மிகமிக எளியவன். அந்த ஏழைமையாளனாகிய அவன் உள்ளத்தை வைத்து நிந்தாஸ் துதியாகப் பெருமானைப் பாட நினைக்கிறார் கவிஞர். தில்லைப் பெருமானைப் போற்றிய அத்தகைய சுவையுள்ள பாடல் இது.

தாண்டி ஒருத்தி தலையின்மேல் ஏறாளோ
பூண்டசெருப் பாலொருவன் போடானோ - மீண்டொருவன்
வையானோ வின்முறிய மாட்டானோ தென்புலியூர்
ஐயாநீ யேழையா னால்.

தென்புலியூர் ஐயா- அழகிய புலியூராகிய சிதம்பரத்திலே வீற்றிருக்கும் பெருமானே! நீ ஏழையானால்- நீ எளியவனானால், தாண்டி ஒருத்தி தலையின் மேல் ஏறாளோ- ஒருத்தி (கங்கை) குதித்து வந்து நின் தலைமீதும் ஏறிக்கொள்ள மாட்டாளோ?, பூண்ட செருப்பால் ஒருவன் போடானோ- தன் காலிலே போட்டிருக்கும் செருப்பால் (கண்ணப்பனாகிய) ஒருவன் நின்னை அடிக்கவும் மாட்டானோ?, மீண்டொருவன் வையானோ- மற்றும் ஒருவன் (பார்த்தன்) உம்மை வையமாட்டானோ?, வில் முறிய மாட்டானோ- வில் முறியும்படி அடிக்கவும் செய்யானோ? (மாட்டுதல்- அடித்துத் துன்புறுத்தல்)

பெருமானை எளியவன் என்று கருதியே இப்படி அவர்கள் துன்புறுத்தினார்கள் என்கிறார். இதனால் அடியார்க்கு எளியனான நீ கங்கை, கண்ணப்பன், பார்த்தன் ஆகியோரின் அச்செயல்களைப் பொறுத்து அவர்களையும் ஆட்கொண்ட பெருமானாவாய் என வியந்து போற்றியதுமாம்.

## எந்த உபாயம்?

சிதம்பரம் சபாநாயகரின் ஆட்டத்தை வியந்து காளமேகம் பாடுகிறார். "கோவிந்தக் கோனார் இருக்கின்றார்; அண்டர் பலர் காத்திருக்கிறார்கள்; இருந்தும் கையிலே ஓடெடுத்த நீ தில்லையுள்ளே புகுந்து ஆடும் எடுத்தனையோ? அது எந்த உபாயத்தினால் எடுத்தனை அப்பனே" என்கிறார். "ஆடு திருடியவன்" என்று நிந்திப்பதுபோலத் தோற்றும் நிந்தாஸ்துதி இது. "பிச்சைக்காரன் எதற்காக ஆடு திருடும் கள்ளனாக ஆயினாய்" என்று வியப்பது போலவும் செய்யுள் அமைந்துள்ளது.

கொங்குலவும் தென்றில்லைக் கோவிந்தக் கோனிக்கக்
கங்குல்பக லண்டர்பலர் காத்திருக்கச் - செங்கையிலே
ஓடெடுத்த அம்பலவ ஓங்குதில்லை உட்புகுந்தே
ஆடெடுத்த தெந்த உபாயம்.

கொங்கு உலவும் தென்தில்லைக் கோவிந்தக் கோன் இருக்க- நறுமணம் கமழும் அழகிய தில்லைக் கோவிந்தராகிய கோனார் அங்கே இருக்கவும், கங்குல் பகல் அண்டர் பலர் காத்திருக்க, இரவும் பகலுமாக இடையர்கள் (தேவர்கள்) பலரும் கூடிக் காவல் காத்திருக்கவும், செங்கையிலே ஓடு எடுத்த அம்பலவா- சிவந்த நின் கையிலே திருவோட்டை ஏந்தியுள்ள அம்பலவனே, ஓங்கு தில்லையுட் புகுந்து ஆடு எடுத்தது எந்த உபாயம்?- புகழ் ஓங்கிய சிதம்பரம் கோயிலினுள்ளே புகுந்து ஆட்டினை எடுத்ததுதான் எந்தத் தந்திரத்தினாலோ? நீ ஆட்டத்தினைத் தொடங்கியது எதனாலோ? எதற்காகவோ?

ஆடு- ஆடும்; ஆட்டமும் ஆம், கொங்கு- மகரந்தம்; அதிலிருந்து எழும் மணத்தைக் குறிப்பது, உபாயம்- தந்திரம், ஆடு எடுத்தல்- ஆட்டைத் தூக்கிப் போதல்; நடனத்தைத் தொடங்குதல், கோவிந்தக் கோனாரும் பிறரும் காவல் காத்திருக்கவும்- பிழைக்க வழியற்றுப் பிச்சைக்கு ஓடேந்திய நீ, எவ்வாறு அவர்கள் அறியாமலே புகுந்து ஆட்டத்தை ஆரம்பித்தனையோ! இப்படிக் கேட்கிறார் கவிஞர்.

## மான் கன்றின் செயல்:

தில்லை மூவாயிரவர்கள், "தில்லை வாழ் அந்தணர்கள்" எனுஞ் சிறப்பினை உடையவர்கள். ஒரு சமயம் காளமேகம் தில்லைக் கூத்தனைத் தரிசிக்கச் சென்று கூத்தப்பெருமானின் முன் இறைவனைத் துதித்தபடி நின்றிருந்தார். அப்பொழுது, "பெருமான் கையிலிருக்கும் மான்மறி முகத்தையும் முன்னங்கால்களையும் மேலே தூக்கியவாறு நிற்பதன் காரணம் யாதோ?" என்று சிலர் கேட்கக் கவிஞர் இப்படிக் கூறுகிறார்.

பொன்னஞ் சடையறுகம் புல்லுக்கும் பூம்புனற்கும்
நன்னெஞ் சுவகையுறத் தாவுமே - அன்னங்கள்
செய்க்கமலத் துற்றுலவும் தில்லை நடராசன்
கைக்கமலத் துற்றமான் கன்று.

"அன்னப்பறவைகள் வயல்களிடத்தேயுள்ள தாமரை மலர்களிடத்தே உலவிக் கொண்டிருக்கின்ற வளத்தினையுடைய சிதம்பரத்து நடராஜப் பெருமானின் கையாகிய கமலத்தே பொருந்தியிருக்கின்ற மான் கன்றானது, பொன்னிறத்துச் சடாமுடியிலே அன்பர்கள் சார்த்தியிருக்கும் அறுகம் புல்லிடத்தும், கங்கையின் சிறந்த நீரிடத்தும் தன் நெஞ்சமானது விருப்பங்கொள்ள, அவற்றை அடைதலை விரும்பி அப்படித் தாவிக் கொண்டிருக்கிறது.

மானின் நிலைக்கு விளக்கம் கேட்க முனைந்தவர்கட்கு வேடிக்கையாக விளக்கங் கூறி அவர்களை மகிழச் செய்கிறார் கவிஞர்.

## ஆட்டுக்கு இசைந்தவர்:

சிதம்பரத்திலே கோவிந்தராஜர் சந்நிதியும் இருக்கிறது. சிலர், சபாநாதர் நடனமிடும் இடம் நோக்கிக் கோவிந்தராஜர் கால்நீட்டிப் பள்ளிகொண்டிருப்பதனைக் காட்டிக் குறும்பாகப் பேசினர். அதனைக் கேட்டுக் காளமேகம் பாடியது இது.

ஆட்டுக்கு கிசைந்தவ ரம்பலவாண ரவர்க்கெதிரே
நீட்டிற்று மால்வட பாலினிற் காலென நீநினையேல்
சூட்டுற்ற முப்புரஞ் செற்றவர் தம்மைச் சுமந்தலுத்த
மாட்டுக்கென் னோவிடங் கானீட்டல் சொல்ல வழக்கில்லையே.

"ஆடலுக்கு உரியவர் அம்பலவாணர்தாம். அவருக்கு எதிரே வடதிசையிலே திருமால் தம் காலை நீட்டியுள்ளனரே" என்று நீ தவறாக எதையும் நினையாதே. தீப்பற்றி அழிந்த திரிபுரக் கோட்டைகளை அப்படியழியச் செற்றவரான சிவபெருமானைச் சுமந்து சுமந்து அலுத்துப்போன மாடாகிய அத் திருமாலுக்குக் கால் நீட்டுவதற்கு உரிய இடம் எது? நீட்டக்கூடாத இடம் எது என்று தெரியுமோ? தெரியாததனால் அதனைக் குற்றம் சொல்லுதலும் நமக்கு ஒரு மரபில்லை என்றறிவாயாக.

"திரிபுர தகன காலத்தே, திருமால் விடையாகிப் பெருமானைச் சுமந்து சென்றனன். அதனைச் சுட்டிப் பேசுகிறார் கவிஞர். மாட்டுக்கு எது மரபு? எது மரபில்லை? என்று உணர முடியுமோ? மேலும், அது சுமை சுமந்து அலுத்துக்கிடக்கும் மாடு. அதனைக் குறித்து நாம் கவலைப்படலாமோ.... விட்டுத் தள்ளும்" என்கிறார்.

## எளியவன் அவன்:

அம்பலவாணர் அடியார்க்கு எளியவராயிருப்பவர். வேடனாகி வந்த காலத்திலே அர்ச்சுனன் வில்லால் அடித்து நின்றான். கண்ணப்பர் ஒரு கண்ணைத் தோண்டி அப்பிவிட்டுப் பெருமானின் மற்றொரு கண்ணினும் குருதி வழியக்கண்டு, இடம் அறிவதற்குத் தம் செருப்புக் காலினாலே மிதித்துக்கொண்டு மற்றொரு கண்ணையும் அப்பினார். சாக்கியரோ கல்லையே மலராகப் பாவித்து எறிந்தனர். மதுரை மன்னனோ பிட்டுக்கு மண் சுமந்த காலத்தே பெருமானைப் பிரம்பாலே அடித்தான். எனினும், அவர்கட்கும் அருள்செய்த தயாளன் அவன். இதனைக் குறித்தும், அவன் பிறப்பிலியாகிய தன்மையைப் போற்றியும் இச்செய்யுளைப் பாடுகிறார் காளமேகம்.

வில்லா லடிக்கச் செருப்பாலுதைக்க வெகுண்டொருவன்
கல்லா லெறியப் பிரம்பா லடிக்கவிக் காசினியில்
அல்லார் பொழிற்றில்லை யம்பல வாணற்கோ ரன்னைபிதா
இல்லாத தாழ்வல்ல வோவிங்ங னேயெளி தானதுவே!

"மரச் செறிவினாலே இருள் நிறைந்திருக்கும் சோலைகளையுடைய சிதம்பரத்தே, அம்பலத்தில் நடனமிடும் பெருமானுக்கு, இந்த உலகத்திலே ஓர் அன்னை பிதா இல்லாத தாழ்ச்சியினால் அல்லவோ, ஒருவன் வில்லால் அடிக்கவும், ஒருவன் கல்லால் எறியவும் இவ்வாறான தாழ்ச்சிகள் எல்லாம் எளிதாகிப் போயின. அன்னை பிதா இருந்திருந்தால் இப்படி நடக்கப் பார்த்திருப்பார்களோ?" என்பது கருத்து.

இதனால் தாய் தந்தையரின் சிறப்புக் கூறப்பெற்றதுடன், பெருமானின் கருணைப் பெருக்கமும் காட்டப்பெற்றது. செயலைக் கருதாது, செய்பவரின் பக்திமையைக் கருதி உவப்பவன் சிவன் என்பது இதனால் விளங்கும்.

## மேளமேன்? ராஜாங்கமேன்?

தில்லையிலே, சபாநாயகர் பிச்சாடன வடிவுடனேயே திருவீதி வலம் வருகிறார். அவருக்கு முன் எக்காளம் முழங்குகிறது. யானை அணிபுனைந்து செல்லுகின்றது. மேள வாத்தியங்களின் ஒலியும் இடியொலிபோன்று எழுகின்றது. குடை கொடி முதலிய ராஜாங்க விருதுகளும் முன் செல்லுகின்றன.

"பிச்சாடன மூர்த்தியே! பிச்சை எடுக்கத் தெருவீதி வழியே புறப்படுகின்றவர் தாமே நீர். உமக்கு ஏன் ஐயா இத்தனை ஆர்ப்பாட்டங்கள்" என்று கேட்பவர் போலக் கவிஞர் அந்த ஊர்வலக் காட்சியினை வியந்து போற்றுகின்றார்.

நச்சவரம் பூண்ட தில்லை நாதரே! தேவரீர்
பிச்சை எடுத்துண்ணப் புறப்பட்டும் - உச்சிதமாம்
காளமேன் குஞ்சரமேன் கார்கடல்போற் றான்முழங்கும்
மேளமேன் ராஜாங்க மேன்?

நச்சரவம் பூண்ட தில்லைநாதரே!- நஞ்சினைக் கொண்ட பாம்பினை அணியாகப் பூண்டிருக்கும் தில்லை நகருக்கு உரிய தலைவரான எம்பிரானே! தேவரீர் பிச்சை எடுத்துண்ணும் பொருட்டாகவே திருவீதியிலே எழுந்தருளியும், உச்சிதமாம்- சிறப்புடையதான, காளம் ஏன்- எக்காளம் எதற்காகவோ?, குஞ்சரம் ஏன்- யானையும் எதற்காகவோ?, கார்கடல்போல் முழங்கும் மேளம் ஏன்?- கருமையான கடலின் ஒலிபோல முழக்கமிடுகின்ற மேள வாத்தியங்கள் எதற்கோ?, ராஜாங்கம் ஏன்- மற்றும் அரசு விருதுகளும் எதற்காகவோ?

"பிச்சைக்குப் போகிலேயும் உமக்கு இவ்வளவு தடபுடல்கள் எதற்கப்பனே?" என்கிறார் கவிஞர்.

(தொடரும்...

**ஆன்மீகச் சிந்தனைகள்**

* இறைவன் நம்மிடம் செய்யச்சொன்னது என்ன? அந்தப் பணி- மகிழ்ச்சி தரக்கூடியதுதான். அவனது திருமேனியை, திருக்குணங்களை, உண்மை இயல்பைத் தியானிப்பது ஆகும். இதை நாம் செய்தால் நமக்கு வேறு எந்தவொரு கடமையும் கிடையாது. மற்றவற்றை இறைவனே பார்த்துக் கொள்கிறான்.

* ஞானத்தில் நிலைபெற்ற அநுபூதிமான்களது வாழ்வை லட்சியமாகக் கொண்டு, அந்த லட்சியத்தை உங்களது வாழ்க்கையிலும் கொண்டுவருவீர்களானால் அந்த ஞானத்தை நீங்களும் பெறுவீர்கள். அந்த நிலையை அடைந்தால் எது கடமை, எது செய்ய வேண்டும் என்ற சந்தேகங்கள் தோன்றாது.

# தொண்டர் நாள்தொறும் துதிசெய்ய அருள் செய்யும் கேதீச்சரம்

திரு செ. பாலச்சந்திரன் அவர்கள்




சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர்கள் சித்தர்கள். அவர்களுள் முதன்மைச் சித்தர் திருமந்திரத்தை அருளிச் செய்த திருமூல நாயனார். அவர் தம் திருவாயால் "சிவபூமி" எனக் கூறிய எமது ஈழத் திருநாட்டிலே தேவாரப் பாடல்பெற்ற திருத்தலங்கள் இரண்டு உள. ஒன்று கேதுவால் பூசித்து வழிபடப்பெற்ற திருக்கேதீஸ்வரம். மற்றயது இராவணேஸ் வரனால் வழிபடப்பெற்ற திருக்கோணேஸ்வரம்.

வட இந்தியாவில் திருக்கைலாயத்துக்குச் சமீபமாக உள்ள திருக்கேதாரம் என்ற திருத்தலத்துக்கு ஒப்பான திருத்தலம் திருக்கேதீஸ்வரம். திருக்கேதாரத்தில் கேதார நாதருடன் உடன் உறைபவர் கௌரி அம்பாள். அதுபோலவே திருக்கேதீஸ்வரநாதருடன் உடன் உறைபவர் கௌரி அம்பாள். நாவலர் பெருமான் "தேன் பொந்து" என்று சிறப்பித்த திருத்தலமும் திருக்கேதீச்சரமே. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், சுந்தர மூர்த்தி நாயனார் ஆகியோர் தம் அகக்காட்சியினால் கண்டு இன்புற்றுப் பதிகம் பாடிய பெருமைக்குரிய திருத்தலமும் திருக்கேதீஸ்வரமே. அப்படியான திருத்தலத்துக்கு நம் வாழ்நாளில் ஒரு முறையேனும் சென்று வழிபட்டு எமது கன்மவினைகளை நாம் போக்க வேண்டும். இதனைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பதிகம் வாயிலாக நாம் காணலாம்.

"பாவம் வினையறுப்பார் பயில் பாலாவியின் கரைமேல்
தேவன் எனையாள்வான் திருக்கேதீச்சரத்தானே"

(திருக்கேதீச்சரப் பதிகம்- 9ஆம் பாடல்- 7ஆம் திருமுறை)

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் எம்பெருமானையும் அவர் வீற்றிருக்கும் திருச்சூழலையும் தம் அகக்கண்களால் கண்டு, இன்புற்று வாரப்பாட்டுடன் பாடிமகிழ்ந்த தேவாரப் பதிகம் இரண்டாம் திருமுறையில் இடம்பெற்றுள்ளது. தம் பதிகத்தின் முத்திரைக் கவியில் திருக்கேதீச்சரப் பதிகம் பத்தையும் ஓதியுணர்பவர்கள் பரகதி பெறலாம் எனக் குறிப்பிட்டுள்ளார். அப்பாடல் வருமாறு.

மாடெலாமண முரசெனக்கடலின தொலிகவர் மாதோட்டத்
தாடலேறுடை யண்ணல் கேதீச்சரத்த டிகளையணி காழி
நாடுளார்க்கிறை ஞானசம்பந்தன் சொனவின்றெமு பாமாலைப்
பாடலாயின பாடுமின் பத்தர்கள் பரகதி பெறலாமே.

மேலும் ஞானக்குழந்தையின் இத்திருப்பதிகத்தின் முதல் ஐந்து பாடல்களிலும் நாம் செய்த வினைதீர என்ன செய்ய வேண்டும் என்ற நல்லதொரு வழியைக் காண்பிக்கின்றார். விருது குன்றமா.... என்ற முதற் பாடலின் இறுதி அடியில் "....கைதொழக் கடுவினையடையாவே" எனக் கூறியுள்ளார். அப்பாடல் வருமாறு.

விருதுகுன்றமா மேருவினாணர வாவனலெரியம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்றுறைபதி யெந்நாளும்
கருதுகின்றவூர் கனைகடற் கடிகமழ் பொழிலணி மாதோட்டம்
கருதநின்றகே தீச்சரங் கைதொழக் கடுவினையடையாவே.

இரண்டாம் பாடலின் இறுதியடியில் ".....தொழுதுஎழக் கெடுமிடர் வினைதானே" எனக் குறிப்பிட்டுள்ளார். அத்திருப்பாடல் வருமாறு:-

பாடல்வீணையர் பலபலசரிதையரெருது கைத் - தருநட்டம்
ஆடல்பேணுவ ரமர்கள் வேண்ட நஞ்சுண்டிருள் கண்டத்தர்
ஈடமாவது விருங்கடற்கரையினி லெழிறிகழ் மாதோட்டம்
கேடிலாதகே தீச்சரந்தொழுதெழக் கெடுமிடர் வினைதானே.

திருக்கேதீச்சர நாதரை மனத்தினாலும், வாக்கினாலும் உடலினாலும் தொழுவது மாத்திரமன்றி, அத்திருத்தலத்தில் எமது கால்பதித்தாலே போதும். எமது அருவினையெல்லாம் அகன்று விடும் எனத் தமது மூன்றாம் பாடலில் இவ்வாறு பாடியுள்ளார்.

பெண்ணொர்பாகத்தர் பிறைதவழ்சடையின ரறைகழல்சிலம்பார்க்கச்
சுண்ணமாதரித் தாடுவர்பாடுவ ரகந்தொறுமிடுபிச்சைக்
குண்ணலாவதோ ரிச்சையினுழல்பவ ருயர்தரு மாதோட்டத்
தண்ணனண்ணுகே தீச்சரமடையவர்க் கருவினையடையாவே.

முற்பிறவிப் பயனால் திருக்கேதீஸ்வரத்தை அடைந்து வழிபடுபவர்கள் அன்புறு சிந்தையராய் எம்பெருமான் திருவடிகளை எப்படி வணங்க வேண்டும்? எனத் தம் நாலாம் பாடலில் குறிப்பிட்டுள்ளார். இப்பாடல் அப்பர் பெருமானின் "தலையே நீ வணங்காய்..." என்ற தேவாரத்தையும் "மனிதரும், தேவரும், மாயாமுனிவரும் வந்துன் குனிதரும் சேவடி...." என்ற அபிராமியந்தாதித் தோத்திரத்தையும் ஞாபகமூட்டுவதாக அமைந்துள்ளது. அப்பாடல் வருமாறு:-

பொடிகொண்மேனியர் புலியதளரையினர் விரிதருகரத்தேந்தும்
வடிகொண் மூவிலை வேலினர் நூலினர் மறிகடன் மாதோட்டத்

தடிகளாதரித் திருந்த கேதீச்சரம் பரிந்தசிந்தையராகி
முடிகள் சாய்த்தடி பேணவல்லார்தம்மேன் மொய்த்தெழும் வினைபோமே"

எவ்வாறு வினையை வேரறுக்க முடியும் என்பது தெரிந்தும் நாம் வாழா இருந்தால் அதுவும் எம் தொல்வினையே. எனவேதான் மணிவாசகப் பெருமான் சிவபுராணத்தில் ".....சிவனவனென் சிந்தையுள் நின்றவதனால் அவனருளாலே அவன்தாள் வணங்கி..." எனப் போற்றியுள்ளார் போலும். எனவே "சந்ததம் பந்தத் தொடராலே சஞ்சலமுற்றுத் திரியாமே" சிவநாமத்தைச் சந்ததம் உச்சரித்து வாழ்வோமாயின் அவன் அருள் கிட்டும். இப்படியான பாடல் பெற்ற தலங்களைத் தரிசிக்கும் பாக்கியம் கிட்டும்.

இன்றும்கூட, திருக்கேதீச்சரச் சூழலை நாம் பார்க்கும்போது கி.பி. 7ஆம் நூற்றாண்டில் திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் பாடிய பதிகம் நிதர்சனமான உண்மைக் காட்சியாக இருப்பதை உணரலாம். மயில்கள் கூட்டம் கூட்டமாக அங்குள்ள வேம்பு, கொன்றை, வில்வ விருட்சங்களில் அமர்ந்து அகவுவது அவர்தம் பாடல்வரிகள் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

"...வண்டு பண்செய்யும் மாமலர்ப் பொழின் மஞ்ஞை நடமிடு மாதோட்டம்..." அத்திருப்பாடலை நாம் முழுமையாகப் பார்ப்போம்.

பண்டு நால்வருக்கறமுரைத்தருளிப் பல்லுலகினி லுயிர்வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிடங்கைதொழக் காதலித்துறை கோயில்
வண்டு பண்செயு மாமலர்ப்பொழின் மஞ்ஞை நடமிடுமாதோட்டம்
தொண்டர் நாடொறுந் துதிசெயவருள்செய் கேதீச்சரமதுதானே.

கி.பி 8ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் சுந்தரமூர்த்தி நாயனார். அவரும் அவர்தம் பாடலில் எம்பெருமான் திடமாயுறையும் கோயில் திருக்கேதீச்சரம் என்று குறிப்பிட்டதைக் கண்டுகொள்ளக் கூடியதாக உள்ளது. அப்பாடல் வருமாறு:-

சுடுவார் பொடி நீறுந்நல்ல துண்டப் பிறை கீழும்
கடமார்களி யானையுரி யணிந்த கறைக்கண்டன்
படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமாயுறை கின்றான் திருக்கேதீச்சரத்தானே.

மூர்த்திச் சிறப்பு. தீர்த்தச் சிறப்பு, தலச்சிறப்பு, விருட்சச் சிறப்பு எனப் பல சிறப்புக்களையும் உடைய திருக்கேதாரத்துக்கு ஒப்பான திருத்தலம் எமது திருக்கேதீச்சரத் திருத்தலம். கேது வழிபட்டு அருள் பெற்ற தலம், மாதுவட்டா, மண்டோதரி, அர்ச்சுனன், ராஜராஜசோழன் போன்றவர்கள் எல்லோரும் வணங்கி அருள்பெற்ற தலம். நாமும் ஒருமுறையேனும் இத்திருத்தலத்துக்குச் சென்று, தொழுது எமது கடுவினையைப் போக்குவோம்.

தாயுமானவர் சுவாமிகள்,

"மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

எனப் பராபரக்கண்ணி என்ற பாடல் வாயிலாகக் கூறிவைத்துள்ளார். குருவருள் இன்றித் திருவருள் இல்லை. எனவே நாம் குருவருள் பெற்றுத் திருவருளை அடைய கௌரி அம்பாள் சமேத திருக்கேதீஸ்வர நாதரைப் பாடுவோம்; பரவுவோம்; பணிவோம்.

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

(தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| சுவாமி சித்ரூபானந்தா சாரதா சேவாச்சிரமம் | பருத்தித்துறை | 2மூடை அரிசி |
| ஆறுதிருமுருகன் மூலம் திருமதி M. பீதாம்பரம் | அவுஸ்திரேலியா | 100 டொலர் |
| திரு இளங்கோவன் குடும்பத்தினர் | கல்வியங்காடு | 15000. 00 |
| திருமதி குகதாசன் மூலம் நிஷாயினி நிதர்சன் | கோண்டாவில் | 5000. 00 |
| K.V. துரைசாமி நினைவு | மயிலிட்டி | 1000. 00 |
| வெற்றிவேல் பிரபாநந்தன் உசன் | மிருசுவில் | 10000. 00 |
| சேனாதிராசா பற்குணராசா | பண்டத்தரிப்பு | 10000. 00 |
| சி. செந்தூரன் | சங்கானை | 5000. 00 |
| அமரர் பண்டிதர் சரவணமுத்து (நினைவு) உசன் | அமெரிக்கா | 10000. 00 |
| ச. செந்தில்நாதன் | வேலணை மேற்கு | 2000. 00 |
| பா. மயூரன் | பருத்தித்துறை | 2000. 00 |
| சி. பிரபாகரன் | அச்சுவேலி | 1000. 00 |
| சி. சிவரூபன் (இலங்கை வங்கி) | மன்னார் | 14000. 00 |
| மனோகரி தியாகராசா சூராவத்தை | சுன்னாகம் | 1000. 00 |
| ஸ்ரீரங்கன் ஆஸ்பத்திரி வீதி | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி 1புட்டி பருப்பு |
| முரளீதரன் யசோ குடும்பத்தினர் | வட்டுக்கோட்டை | 10000. 00 |
| மு. சிவனேசன் (நீரஜா ஞாபகார்த்தம்) | வியாபாரிமூலை | 10000. 00 |
| N. ஜெயக்குமார் | லண்டன் | 10000. 00 |
| ஜெயரட்ணராசா கருணாகரன் | நோர்வே | 10000. 00 |
| திருமதி புனிதவதி சண்முகலிங்கம் | கரவெட்டி | 3000. 00 |
| மனோகரி தியாகராசா | சுன்னாகம் | 1000. 00 |
| அ. குலேந்திரன் | கனடா | 5000. 00 |
| அபிஷாயினி குகராஜன் | சுன்னாகம் | 600. 00 |
| K. சுதாகரக்குருக்கள் ஸ்ரேசன்றோட் | சுன்னாகம் | 2000. 00 |
| Bright Way Construction | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| சாவித்திரி அருணாசலம் | பருத்தித்துறை | 5000. 00 |
| சந்திரப்பிரகாசம் யதுகுலன் குடும்பம் ஆத்தியடி | பருத்தித்துறை | 4000. 00 |
| N. கமல்ராஜ் | கனடா | 5000. 00 |
| வ. தயாபரன் | இடைக்காடு | 6000. 00 |
| S. சக்திதரன் செட்டித்தெரு | கொழும்பு | 3000. 00 |
| சுகிர்தா நவரட்ணராசா | காங்கேசன்துறை | 2000. 00 |
| லதா தயாளதேவன் | காங்கேசன்துறை | 1000. 00 |

(தொடரும்...

(தொடர்ச்சி...

# சைவத் திருக்கோயிற் கிரியைநெறி

உயர்திரு கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள்

இதுவரை கூறப்பட்ட இலக்கணங்களுக்கு அமைய உருவான நடராஜர் திருவுருவங்களே பெரும்பாலான தென்னிந்தியக் கோவில்களில் நிறுவப்பட்டுள்ளன. சிவன் கோவில்கள் எல்லாவற்றிலும் நடராஜருக்குத் தனி மண்டபமுண்டு. இது **நிருத்த மண்டபம்** எனப்படும். இதற்குப் பிரசித்தமான பெயர் **சபை**. இது நடனசபை, சபா மண்டபம் எனப் பலவாறு பெயர் பெற்றுள்ளது. சபைகளுள் முக்கியமாகக் கருதப்படும் சபை சிதம்பரத்திலுள்ளது. இது பொன்னால் வேயப்பட்டது. இதற்குச் சுவர்ணசபை, கனகசபை என்னும் காரணப்பெயர்களும் உண்டாகின. மதுரையில் விளங்குவது வெள்ளியம்பலம். இதை ரஜதசபை என்றும் வளங்குவர். மேலும் திருவாலங்காட்டில் இரத்தினசபை என்றும் திருநெல்வேலியில் தாமரசபை என்றும், திருக்குற்றாலத்தில் சித்திரசபை என்றும் நடராச சபைகள் பெயர் பெறுகின்றன.



நிருத்தத்தில் ஒன்பது வகைகள் தொடக்கத்திலே சுட்டப்பட்டன. இவற்றுள் மிகப் பிரசித்திபெற்ற முதல்வகை இதுவரை கூறப்பட்டது. ஏனைய நிலைகளிலும் அமைந்து காணப்படும் விக்கிரகங்கள் ஆங்காங்குள்ளன. இவற்றுள் இரண்டாம் மூன்றாம் நான்காம் வகைகள் முதற்கூறிய வகையினின்றும் பெரிதும் வேறுபட்டவை அல்ல. இரண்டாம் வகை நாட்டியத்தில் கங்கையின் உயரம் பதினாறு அங்குலம் உயர்ந்து இருத்தல் வேண்டும். இங்கு கங்கை சிவனின் வலப்பக்கச் சடையில் கூப்பிய கையினளாக இருத்தல் வேண்டும்.

மூன்றாம் வகை நடனத்தில் முயலகன்மீது இடது காலை ஊன்றியே இறைவன் நடனமாடுவர். இங்கு தூக்கிய திருவடி வலது திருவடியேயாகும். நான்காவது வகை நடனத்தில் சடை வட்டவடிவினதாக விரிதல் வேண்டும்.

ஐந்தாவது வகை நடனம் இதுவரை கூறப்பட்ட நடனங்களினின்றும் வேறுபட்டது. வலதுகால் தலைவரை தூக்கப்படும். இடதுகால் சிறிது வளைந்து, அபஸ்மார புருஷன்மீது ஊன்றியவாறு இருக்கும். இங்கு சிவனுக்கு எட்டுக் கைகள் உண்டு. சூலம், பாசம், உடுக்கை வலக்கைகளில் விளங்கும். நான்காவது வலக்கை அபயமளிக்கும் கை. இடது கரங்களில் முன்னுள்ள கை கஜஹஸ்தமாக வளைந்து தொங்கும். ஏனைய மூன்று கரங்களில் கபாலம். நெருப்பு, மணி ஆகியவற்றை ஏந்தி நிற்பன்.

ஆறாவது வகை நிலை ஐந்தாவதைப் போன்றதே. ஆயின் இங்கு கைகள் வலப்பக்கத்து முன்கை அபயகரம். ஏனைய ஏழு கரங்களில் உடுக்கை, வஜ்ரம், சூலம், பாசம், பங்கம், தண்டம், பாம்பு என்பன உண்டு. இடப்பக்க முன்கை வழமைபோலத்

தொங்குங்கை. ஏனைய கரங்களில் அக்கினி, வஜ்ரம், சக்கிரம், மணி, கேடயம், கபாலம் என்பன உண்டு. இப்பதினாறு கரங்களை வேறு வகையாகவும் அமைக்கலாம். இவ்வகையில் வலக்கை அபயகரமாய் நிற்கும். ஏனைய ஏழு வலக்கரங்கள் சூலம், பாசம், கட்கம், டமரு, கொடி, சூசிஹஸ்தம் என்பவற்றைப் பொருந்தும். சூசிஹஸ்தம் என்பது, ஆள்காட்டும் விரலை மட்டும் நிமிர்த்தி நிற்க வைத்தல். முன் இடக்கரம் தொங்கும். ஏனைய கரங்கள் அக்கினி, கேடயம், விஸ்மயம், மணி, கபாலம், கத்தி, சூசிஹஸ்தம் என்பவற்றைப் பொருந்தி விளங்கும். விஸ்மயம் என்பது ஆச்சரியத்தைக் குறிக்கும் முத்திரை.

ஏழாவது வகை, நிருத்த நிலையில் எட்டுக்கைகள் விளங்கக் காண்கிறோம். இடது கால் முயலகன்மீது நிற்க, வலது காலைத் தலைவரை தூக்கி ஆடும் காட்சியையே இங்கும் காண்கிறோம். வலது கைகளுள் ஒன்று அபயமுத்திரை காட்டும். ஏனைய சூலம், பாசம், உடுக்கை ஆகிய மூன்றையும் தாங்குவன. இடது கைகளுள் ஒன்று தொங்கி நிற்கும். கஜகஸ்தம்; இன்னொன்று ஆச்சரியத்தை உணர்த்தும் விஸ்மயஹஸ்தம்; ஏனைய இரண்டும் கபாலத்தையும் அக்கினியையும் தாங்குவன.

எட்டாவது வகை நிருத்தியத்தில் ஆறு கைகள் மட்டுமே உண்டு. ஒரு வகை அபயகரம். ஏனைய இரண்டிலும் உடுக்கையும் சூலமும் விளங்குகின்றன. இடது கைகளில் ஒன்று வீசி நின்ற தொங்கு கை; இன்னொன்று ஆச்சரியத்தைச் சுட்டும் கை; மற்றக் கரத்தில் கபாலம் விளங்குகிறது. மேலே கூறிய எட்டு வகைகளுள் ஐந்தாம், ஆறாம் வகைகளுள் நிருத்த மூர்த்திக்குக் கண்கள் இரண்டே. ஏனைய நிலைகளில் கண்கள் மூன்று.

ஒன்பதாம் வகையில் நிருத்தமூர்த்தி நான்கு கைகளுடனும், மூன்று கண்களுடனும், சடாமகுடத்துடனும் காட்சியளிப்பர். இடதுகால் முயலகன்மீது பொருந்தாது; சிறிது வளைந்தவாறு பீடத்திலேயே வைக்கப்படும். வலதுகால் கட்டை விரலும் அவ்வாறே பீடத்தில் இடம்பெறும். திருச்செங்காட்டங்குடியில் இவ்வுருவத்தைப் பார்க்கலாம். இவ்வொன்பதுவகை நிருத்தங்களை விட கடிசமம், லலிதம், லவாட திலகம், சதுரம், தலசம்ஸ்போடதம் முதலிய பலவகை நடன நிலைகள் சிற்பங்களில் இடம்பெறக் காண்கிறோம். இவை விரிவான நூலில் விளக்கம் பெறுவன.

அழகுக்கலை சிறந்து பொலியக் கண்குளிரக் காட்சிநல்கும் நடராசத் திருவுருவம் கண்களுக்குப் பெருவிருந்தாய் அமைவது மட்டுமல்ல. உள்ளத்தைக் களிப்புறச் செய்வது; ஆனந்த அநுபவத்தை உண்டாக்குவது; மனச் சாந்தியை எழச் செய்வது; தீய எண்ணங்களை அகற்றி நல்லெண்ணங்களைத் தோற்றுவிப்பது; நானெனதென்னுஞ் செருக்கைக் கெட வைப்பது; பேரொளி வீசி இருளகற்றி நல்லறிவு புகட்டிப் பேரானந்தப் பெருவாழ்வாம் வீடுபேற்றை ஈற்றில் அடைவிப்பது. இத்திருவுருவம், இவ்வாறெல்லாம் நிகழ்த்துவிப்பதற்கு அவன் நிலையும், அவை உணர்த்துங் கருத்துக்களும் காரணமாவன. இந்த தத்துவக் கருத்துக்களைப் பின்னர் ஆராய்வோம்.

இதுகாறுங் கூறிய இலிங்கம், இலிங்கோற்பவ மூர்த்தி முதலிய திருவுருவங்கள், இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள தேவாலயங்களிற் காணப்படுவன. எனவே இவைபற்றிய இவ்விபரங்கள் இத்தேவாலயங்களிற் சென்று தரிசிப்பவர்களுக்குப் பெரும் பயன் பயப்பன. இவற்றைவிட இன்னும் சில திருவுருவங்களைப் பற்றியறிவதும் இன்றியமையாதது.

இத்திருவுருவங்கள் குறிப்பிட்ட சூழ்நிலைகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டன. எட்டுச் சந்தர்ப்பங்களில் இறைவன் தேவர்களதும் மக்களதும் துயர்களையவேண்டிப் பெருஞ்செயல்கள் நிகழ்த்தி இவர்க்குப் பெருநன்மை புரிந்த வரலாறு புராணங்களில் விரிவாக இடம்பெற்றுள்ளது. "பிரமன் தலை கொய்தது; அந்தகன் எனும் அரக்கனை அழித்து, அதனால் தேவர்கள் இடர்ப்படாதவாறு அருள்பாலித்தது; முப்புரங்களை எரித்தது; தக்கன் யாகத்தை அழித்தது; சலந்தனைச் சங்கரித்தது; கஜாசுரனை மாய்த்துக் கரியுரி போர்த்தது; காமனைக் காய்ந்தது; யமனைக் காலால் உதைத்தது" என்பன இவ்வரும்பெரும் நிகழ்ச்சிகள். இவை அட்டவீரட்டங்கள் எனப்படுவன. இப்பெரும் நிகழ்ச்சிகளில் இறைவன் கொண்ட இக்கோலங்களில் அவனைச் சித்தரிக்கும் உருவங்கள் முறையே பிரமசிரச்சேதக மூர்த்தி, அந்தகாசுரமூர்த்தி, திரிபுராந்தக மூர்த்தி, தக்ஷயாகதுவம்சமூர்த்தி, ஜலந்தராரி, கஜாரி, காமாரி, யமசம்ஹாரமூர்த்தி எனப் பெயர் பெறுவன. தென்னிந்தியாவில் எட்டுத் தலங்கள் இந்நிகழ்ச்சிகள் நடந்த இடங்களாகக் கொள்ளப்படுவன. இங்கு இம் மூர்த்திகள் சிறப்புற அமைந்து விளங்குவன.

அனுக்கிரகம் செய்தல் இறைவனின் ஐம்பெருந் தொழில்களில் ஒன்று. விநாயகப்பெருமானுக்கு அருளிய நிலையில் விக்கிநேசுவரானுக்கிரக மூர்த்தி எனவும் நந்திகேசருக்கு அருள்பாலித்த நிலையில் நந்திகேசுவரானுக்கிரக மூர்த்தி எனவும் எம்மண்ணில் பெயர் பெறுவன. சண்டேஸ்வர மூர்த்தி, சண்டேஸ்வர நாயனாருக்கு அருளிய நிலையைச் சித்தரிக்கிறது. தன்னிடத்தில் பெரும் அன்பூண்ட மாலுக்குச் சக்கரம் அருளிய நிலையை விஷ்ணுவநுக்கிரக மூர்த்தி காட்டும். இராவணனுக்கு அருளிய மூர்த்தியை இராவணானுக்கிரக மூர்த்தியாகவும், அருச்சுனனுக்குப் பாசுபதம் அளித்த இறைவனை கிராத மூர்த்தியாகவும் வழிபடும் வகையினையும் ஆகமங்கள் வகுத்துள்ளன.

இறைவனின் பல திருவுருவங்களில் அவன் தலையில் கங்கை விளங்கக் காண்கிறோம். இந்நிலையைச் சிறப்பாகச் சித்தரிக்கும் உருவம் கங்காதரமூர்த்தி. இறைவனின் பாதி உடல் உமையின் உருவம் பெறும் நிலையினைப் பல தோத்திரங்களிலும் தியானங்களிலும் காண்கிறோம். இந்நிலையைத் தெளிவாகக் காட்டுவது அர்த்தநாரீஸ்வரமூர்த்தி நிலை. இவ்வாறே இறைவனின் பாதி அரியின் அம்சமாக விளங்குவதை அரிஹரமூர்த்தி உணர்த்தும். இறைவன் பார்வதியை வதுவை செய்யும் மணக்கோலம் காட்டுவது கல்யாணசுந்தரமூர்த்தி. விடையையே தம் ஊர்தியாகக் கொண்டு, அதிலமர்ந்து விளங்கும் விடைப்பாகனை விருஷவாகனமூர்த்தி சித்தரித்துக் காட்டக் காண்கிறோம். நஞ்சுண்ட கண்டனாய் விளங்கிய இறைவன் திருக்கோலத்தை விஷாபஹரண மூர்த்தி சுட்டும். இத்திருவுருவங்கள் எல்லாத் தேவாலயங்களிலும் காணப்படுவதில்லை. இவற்றின் விரிவான விபரங்கள் பெருநூலில் விரித்துக் கூறப்படும்.

தேவாலயங்களில் திருவுருவங்கள் பலவாறு நிறுவப்பட்டிருப்பதைக் காண்கிறோம். சில கல்லால் அமைந்த உருவங்கள். இவற்றைச் சிலா விக்கிரகங்கள் என்பர். இவை அவற்றிற்குரிய கருவறையில் நிறுவப்பட்டு வழிபடப்படுவன. இவற்றிற்குத் தினந்தோறும் அபிஷேகம், பூசை முதலியன நிகழும். சில விக்கிரகங்கள் உலோகங்களில் வார்க்கப்படுகின்றன. இவற்றிற்குத் தினந்தோறும் அபிஷேகம் நடைபெறுவதில்லை. பூசை மட்டுமே நிகழும். சில சுதையில் அமைந்த விக்கிரகங்கள். இவையும் அப்படியே. மரத்திலோ

அல்லது ஓவியவடிவிலோ அமையுந் திருவுருவங்கள் குறுகிய கால எல்லைவரை நிறுவப்பட்டு வழிபாட்டுக்கு உரியனவாய் விளங்குவன. இத்திருவுருவங்கள் விமானங்களிலும் தூண்களிலும் சுண்ணாம்பினாலும் கல்லாலும் அமைக்கப்படுவன. சில சுவர்களிலும் கூரையின் கீழ்ப்புறத்திலும் சித்திரமாய்த் தீட்டப்பட்டுள்ளன. திருக்கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்ட திருவுருவங்களுக்கே நித்திய நைமித்திய வழிபாடுகள் நிகழ்வன.

இவ்வத்தியாயத்தில் சிறிது விரிவாகக் கூறப்பட்டுள்ள மூர்த்திகள் ஒன்பதினுள் இலிங்கம், பைரவர், வீரபத்திரர், தெட்சணாமூர்த்தி, இலிங்கோற்பவர் சிலா விக்கிரகங்களாகவே அமைவன. சோமஸ்கந்தமூர்த்தி உலோகத்தில் பெரும்பாலும் அமைக்கப்படினும் சிலை வடிவிலும் சில இடங்களில் நிறுவப்பட்டிருக்கின்றது. பிஷாடன ரூபமும் அப்படியே. சந்திரசேகர், நடராஜர் ஆகிய மூர்த்திகளும் பெரும்பாலும் உலோகத்தால் அமைவனவே. சிலை வடிவிலும் நடராஜர் திருவுருவம் சில இடங்களில் நிறுவப்பட்டு வழிபடுதலுக்காகப் பிரதிஷ்டை செய்யப்படுவன.

உருவங்களை அமைக்கும் சிற்பி அவற்றை பிரமாணங்களுக்கு அமைய உருவாக்குதல் வேண்டும். தவறு சிறிதளவேனும் நேரிடின், சிற்பியையும், கர்த்தாவையும், கிராமத்தையும், நாட்டையும், மக்களையும் அரசனையும் அவ்வவ் தவறுகளுக்கு ஏற்றவாறு பாதிக்கும் என ஆகமங்கள் கூறுகின்றன. சிற்பங்களின் அளவு ஆகமங்களிலும், சிற்ப நூல்களிலும், புராணங்களிலும் காணப்படுகிறது. (தொடரும்...



**ஆச்சிரமத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமூகப் பணிகளின் வரிசையில் இமையாணன் கலைமகள்முன்பள்ளி மாணவர்களுக்கான தண்ணீர்ப் போத்தல்கள் வழங்கப்பட்டபோது...**

# இந்துப் பண்புகள்

**திரு இரா. சாந்தன் அவர்கள்**

இந்து மதம் உலகப் பிரசித்தி பெற்ற மதம். பேரறிஞர்களின் சிந்தனையைக் கவரவல்ல உயரிய அம்சங்கள் வாய்ந்ததாய் விளங்குகின்றது. இம்மதத்தைச் சாராதவர் களான மேனாட்டவர்களும் இம்மதப் பண்பாட்டுச் சிறப்பம்சங்களால் கவரப்பட்டவர்களாய்த் தாமும் இந்துக்களாக வாழவிழைந்து, பாரதநாட்டிற்குப் பலர் பெருமை சேர்த்தனர்.

மனித அமைதியைப் பெரிதும் தரவல்ல மதமே தலைசிறந்த மதமெனப் போற்றற்குரியது. தேவையும் பயமுமே மனிதனை மாறி மாறி வாட்டி நிற்பன. இச்சிக்கல்களால் எழும் துன்பங்களை குறிப்பிடத்தக்க வகையில் தணிக்க உதவுவது இந்துமதம். தேவைகளை வழங்குவதும், பயத்தை நீக்குவதும் தெய்வங்களின் இயல்புகள். இந்து ஆலயங்களில் நிறுவப்படும் தெய்வங்கள் "பயப்பட வேண்டாம்", என உணர்த்தி நிற்கும் "அபயகரத்தையும்", தேவைகளைத் தருகிறேன் எனச் சுட்டி நிற்கும் "வரத கரத்தையும்" காட்டி நிற்கின்றன. இவ்வாறு உணர்த்தும் கையமைதி இந்துத் தெய்வங்களுக்கே உரிய தனிச்சிறப்பு ஆகும்.

இந்துநெறி நிற்போர் தெய்வத்தைச் சிந்தனையில் இருத்தித் தியானிக்கும் முறையே தனிப்பட்டது. இறைவன் எங்கும், என்றும் நிலைத்து நிற்பதனால் "சத்" எனப்படுபவன். இமைப்பொழுதும் நெஞ்சில் நின்றும் நீங்காதானாய், மனதில் அறிவு, சிந்தனை ஆகியவற்றை பெருக்கவல்ல ஞானவடிவினன். ஆதலால் "சித்" எனப்படுவன்: எப்பொழுதும் இன்ப மயமானவனாய், உள்ளத்தில் பேரின்பம் பெருக்கும் பெரும் இயல்பு படைத்தவனாதனால் "ஆனந்தம்" எனவும் குறிக்கப்படுபவன். இந்து சமயசாத்திரநூல்கள் மட்டுமே இறைவனைச் சச்சிதானந்த சொரூபியாக வருணிப்பன. இத்தகைய உயர்வுதந்து இறைவனைப் பரிபூரணநிலையில் உள்ளத்திலிருத்தித் தியானிக்கும் வாய்ப்பு இந்து நெறிநிற்பவர்க்கே உரியது.

இந்துமதம் தொடக்கத்தில் பெயரெதுவுமே இல்லாதிருந்தது. ஆதியில் உலகில் வேறுமதம் எதுவும் இல்லாது, இது மட்டுமே தனிமதமாக இருந்தது. இந்து மதம்போற்றும், இறைவன் தொடக்கமும் முடிவும் அற்றவன். இறைவன் போன்று இந்து மதமும் ஆதியும் அந்தமும் அற்றது. இவ்வாறு ஆதியும் அந்தமும் இல்லாததைச் "சநாதநம்" என்பர். புராதன நூல்களில் இந்து மதத்தை சநாதநதர்மம், சநாதநமதம் எனக் குறிப்பிடுகின்றன.

இந்து மதத்துக்குள்ள பல்வகைச் சிறப்புக்களுள் அதன் அகன்றகாலப்பரப்பு முக்கியமானதொன்றாகும். வேதங்கள் போன்று இதுவும் தொன்மைமிக்க பெருமைக்குப் பாத்திரமாகின்றது. காலப்பரப்பு முன்னோக்கியும், பின்நோக்கியும் அகன்று அமைவதனால் "சநாதநம்" என்ற பெயர் பெற்றுள்ளது. "சநா" என்பது முதுமைப் பொருளையும், "தந" என்பது புதுமைப் பொருளையும் உணர்த்துவதனால் இது சநாதந மதமாகி முதுமையும், புதுமையும் ஒருங்கிணைந்ததான, வேறெங்குங் காண்டற்கும், கற்பனையிலும் நினைத்தற்கும் அரியதானதொரு நிலையைக் குறிப்பிட்டு நிற்கும். தொடக்கமற்றவாறு தொன்மை

வாய்ந்ததாயும், முடிவற்றவாறு எல்லையற்ற எதிர்காலம்வரையும் நிலவ வல்லதாயும் குறிப்பிடப்படும். சமயம் சநாதநமான இந்துமதமொன்றே, சமயாநுபூதி மான்கள் இறைவனை ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ் சோதியாக எங்களுக்குக் காட்டியுள்ளார்கள். சமய நூல்களும், தத்துவ நூல்களும் இதையே அறைந்து கூறுகின்றன. “தெய்வம் அநாதி”; தெய்வம் பற்றிய சமய உண்மைகளை எடுத்தியம்பும் வேதமும் அநாதி; தெய்வ வழிபாட்டு முறையும் அநாதி. எனவே, “இந்து சமயமும் அநாதி”.

இந்து மதத்தின் மிகப்பரந்த காலப்பரப்பில் எழுந்த அநுபவப் பெருக்கு வேதங்களாக வும், அவற்றின் விரிவுரைகளாக எழுந்த விளக்கங்கள் ஆகமங்களாகவும், சாத்திரங்களாகவும், தோத்திரங்களாகவும் தத்துவ விரிவுகளாகவும், பல அருளாளர்களின் மொழிகளாகவும் சொல்லுருவில் வடிக்கப்பெற்று, விரிந்து விளங்கும் பெரும் இலக்கிய சமுத்திரமாகத் திகழ்கின்றது. சிந்தனைச் சிறப்புப் பொலிந்தும், அநுபவப் பெருக்குச்சுவறியும், உருவான சமய இலக்கிய வடிவம் பெற்று நிற்கின்றது. எல்லையற்ற எதிர்காலம் நின்று விளங்கும் இயல்பு இந்து மதத்திற்கு உரியதாகையால், இம்மதம் வற்றாத இளமையும், தளர்ச்சியுறாத வலிமையையும் உரியதாக்கிவிட்டது என்று கூறினால் மிகையாகாது.

இந்துமதம் பரந்தநோக்கு உடையதனால் பெரும் புகழ்பெற்றுத் திகழ்கின்றது. இயல்பாகப் பொருந்தியிருக்கும் இதன் உள்ளமைப்பே பரந்த நோக்கிற்குக் காரணம். “யாதொரு தெய்வங் கண்டீரத் தெய்வமாகி” என்ற பாடல் கூறுவதுபோன்று, எத்தெய்வத்தை வழிபடினும், அத்தெய்வமாகி ஆங்கே அருள் சுரப்பவர் மாதொருபாகன் என்ற கருத்தும், எத் தெய்வத்தை வழிபடினும் வழிபடுபவன் என்னையே வழிபடுகிறான் என்ற கருத்தும் புலனாகிறது. ஆனால் அவன் உரிய வழிபடு முறையினின்றும் விலகி நின்று வழிபடுகிறான். “வழிபாடு ஈற்றில் என்னையே சாரும்” எனப் பொருள் பொதிந்த “பகவத்கீதை” சுலோகம் தரும் கருத்தும் இந்து மதத்தில் சிறப்பாக அமைந்துள்ள பரந்த கண்ணோட்டத்தைப் புலனாக்குகின்றது.

இந்துமதம் என்றும் வாழும் மதமாகத் திகழ்கின்றது. காலை துயிலெழுதல் முதல், இரவு நித்திரைக்குப் போகும்வரை, எல்லா நிகழ்ச்சிகளிலும் சமயம் கலந்துள்ளது. ஒவ்வொருவனும் தான் செய்து முடிக்கும் செயல் முழுவதையும் இறைவனுக்கே அர்ப்பணிக்கும் பழக்கத்தைக் காணலாம். வாழ்க்கையில் அடிக்கடி விரதங்களைக் கடைப்பிடிப்பதனால் பகற்பொழுது முழுவதும் சிலவேளைகளில் பகல், இரவு இணைந்து முழுநாளுமே தெய்வ சிந்தனைக்கு உரியதாகிவிடுகின்றது. விவாகம் முதலிய சடங்குகள் தெய்வீகம் உடையனவாக அமைந்திருக்கின்றன. சிறுவர், சிறுமியர்க்குத் தெய்வங்களின் பெயர்சூட்டும் இந்துக்களின் வழக்கம். அவர்களை அடிக்கடி இறைவன் பெயரைச் சொல்லவைக்கின்றது. இந்துவாகப் பிறந்தவனின் வாழ்க்கையும், சமயமும் பின்னிப்பிணைந்து காணப்படுகின்றன. “மதத்தை வளர்த்தல் வேண்டும்” என முனைந்து ஒருவரும் செயற்படாமலே இந்துக்கள் வாழும்வரை இந்து மதமும் வாழ்ந்து வரும்.

வாழ்க்கையோடு நெருங்கி இணைந்த இந்துமதம் கோயில்களிலேயே பண்பாட்டைச் சிறக்க வைத்தது. வழிபட வருபவரின் மனதில் இறைஉணர்வைப் பதித்து, பக்தி பெருகும் சூழ்நிலை அமையவேண்டிய தேவையை நோக்காகக் கொண்டு, ஆலயங்கள் இயங்க

வேண்டிய விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. ஆகமங்கள் வகுத்த- விதித்த வழிகளுக் கமைய கிரியைமரபு உருவாகிக் கலைகளைத் தோற்றுவித்தது. வழிபாட்டிற்கு இன்றியமையாதது இறைவன் திருவுருவம். இதனால் திருவுருவம் அமைக்கும் விக்கிரகக்கலை தோன்றலாயிற்று. திருவுருவங்களைக் கல்லிற் சமைக்கவும், மரத்தில் செதுக்கவும், உலோகத்தில் வடிக்கவும், சுதையில் உருவாக்கவும் ஆற்றல் படைத்த சிற்பிகள் பரம்பரையாகத் தங்கள் கலையைப் பரப்பி வந்தார்கள். இறைவன் தியானமும், தூய சிந்தனைகளும் இவர்கள் உள்ளத்தில் நிறைந்திருந்ததனால், இவர்கள் ஆக்கிய உருவங்களும் தெய்வாம்சம் பொருந்தி விளங்கின. வழிபாட்டிற்காக உருவாக்கப்படும் விக்கிரகங்களை நிறுவுவதற்கு ஆலயம் தேவைப்பட்டது. இதையொட்டி வளர்ந்தது கட்டடக் கலை. இக்கலை வல்லுநரான ஸ்தபதிகளால் நிர்மாணிக்கப்பட்ட பெருங்கோயில்களும், தூண்களும், விமானங்களும் வானளாவிய கோபுரங்களும், மதிற் சுவர்களும் புராதன கோயில்களை அணிசெய்து இக்கலையிற் கைதேர்ந்தவர்களின் ஆற்றலைப் பறைசாற்று வதுடன், மேனாட்டவர்களின் பெருவியப்புக்கும் பாத்திரமாயும் நிற்கின்றன. ஆலய விமானங் களிலும் கோபுரங்களிலும், தூண்களிலும், தெய்வத் திருக்கோலங்கள் சிற்ப நூல்கள் கூறும் முறைக்கமையப் பலவகைக் கோலங்களில் தோற்றம் பெற்றுள்ளன. இறைவன் அமர்ந்து பவனி வருவதற்காக, வகை வகையாக வாகனங்கள் அமைக்கும் கலையும் வளர்ந்தது. இவற்றை எல்லாம் வனப்புற அழகுறுத்த, ஓவியக்கலையும் இதையொட்டி வளரலாயிற்று. ஆலய சுவர்களில் வீதியை வலம்வரும் அடியவர் மனதிற் படியக்கூடியவாறு இறைவன் பெருமையைச் சித்தரிக்கும் சித்திரங்களை தீட்டியும், ஆலயங்களில் ஓவியக்கலைஞர் தம் கலையை வளர்த்தனர். இந்துக்களின் இசைக்கலை வளரக் கோயில்களே நிலைக்களனாக விளங்கிவந்தன. ஏத்திப்புகழ்ந்து பாடுவதற்குரிய ஒருவனாக இறைவன்மீது பாடும் மரபும், இசைக்கலையில் புதுப்புது வளர்ச்சி நிலைகளைத் தோற்றுவித்தது. பண்ணிசை கோயில்களைக் காரணமாகக் கொண்டு வளர்ந்தது. இசைக்கருவிகளும் கோயிலில் இசைக்கலையை பெரிதும் வளர்த்தன. தெய்வங்களே இசைக் கருவிகளைக் கையிலேந்திய கோலத்தில் அமைவது. இசைக் கலைக்கு அதியுன்னதமான தெய்வீகப் பின்னணியைத் தருகின்றது. நாட்டியக்கலை கோயில்களே வளர்த்த கலைகளுள் முன்னணியில் நின்றதும், அங்கு பரம்பரையாக நெடுங்காலம் பேணிப்பாதுகாக்கப்பட்டு வந்ததுமான இக் கலை, சூழ்நிலை காரணமாக கோயில்களினின்றும் இன்று மறைந்துவிட்டது. இறைவனுக்கு நித்திய நைமித்திய வழிபாடுகளில் "நிருத்திய உபசாரம்" நிரந்தரமான இடம்பெற்றிருந்தது.

(தொடரும்...

## வித்தியாசாகரின் பண்பு

ஒரு பெரிய மனிதர் தம்மை அடிப்பதற்காக ஆட்கள் திரட்டியிருக்கிறார் என்ற தகவல் வித்தியாசாகருக்குக் கிடைத்தது. ஆதலால் அவர் திடீரென்று ஒருநாள் அந்த மனிதரின் வீட்டுக்குச் சென்று, "நீங்கள் என்னை அடிப்பதற்கு ஆட்களை ஏற்பாடு செய்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். உங்களுக்கு ஏன் சிரமம் என்று நானே வந்துவிட்டேன் என்னை என்ன செய்ய வேண்டுமோ செய்யுங்கள்" என்றார். அந்த மனிதர் வெட்கித் தலை குனிந்தார்.

~ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்~

நாவலர் பக்கம்: (தொடர்ச்சி...

# சைவ சமய வினா விடை

–ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்–

137. ஔத்திரி தீக்ஷையாவது யாது?

ஓமத்தோடு கூடச் செய்யப்படும் தீக்ஷை. (ஹோத்திரம்- ஓமம்- ஔத்திரி)

138. ஔத்திரி தீக்ஷை எத்தனை வகைப்படும்?

ஞானாவதி, கிரியாவதி என இரண்டு வகைப்படும்.

139. ஞானாவதி யாவது யாது?

குண்டம், மண்டலம், அக்கினி, நெய், சுருக்கு, சருவம் முதலியவைகளெல்லாம் மனத்தாற் கற்பித்துக்கொண்டு விதிப்படி அகத்தே ஆகுதி முதலிய கிரியை செய்து, சீடனது பாசத்தைக் கெடுக்கும் தீக்ஷையாம். இது சக்தி தீக்ஷை எனவும் பெயர் பெறும்.

140. கிரியாவதி யாவது யாது?

குண்ட மண்டலங்களைப் புறத்தே இட்டு விதியின்படி புறம்பே ஆகுதி முதலிய கிரியை செய்து, சீடனது பாசத்தைக் கெடுக்குந் தீக்ஷையாம். இது மாந்திரி தீக்ஷை எனவும் பெயர் பெறும்.

141. ஞானாவதி, கிரியாவதி என்னும் இரண்டும் தனித்தனி எத்தனை வகைப்படும்?

சமய தீக்ஷை, விஷேச தீக்ஷை, நிருவாண தீக்ஷை என மூன்று வகைப்படும்.

## 6. விபூதியியல்

142. சைவர்களால் அவசியமாகச் சரீரத்திலே தரிக்கற்பாலனவாகிய சிவசின்னங்கள் யாவை?

விபூதி, உருத்திராக்ஷம் என்னும் இரண்டுமாம்.

143. விபூதியாவது யாது?

பசுவின் சாணத்தை அக்கினியினாலே தகித்தலால் உண்டாகிய திருநீறு. விபூதியின் பெயர்: பசிதம், பசுமம், க்ஷாரம், இரக்ஷை.

144. எந்த நிற விபூதி தரிக்கத் தகும்?

வெண்ணிற விபூதியே தரிக்கத் தகும்; கருநிற விபூதியும், செந்நிற விபூதியும், புகைநிற விபூதியும், பொன்னிற விபூதியும் தரிக்கலாகாது.

145. விபூதியை எப்படி எடுத்து வைத்துக்கொள்ளல் வேண்டும்?

புது வஸ்திரத்தினாலே வடித்தெடுத்துப் புதுப் பாண்டத்தினுள்ளே இட்டு, மல்லிகை, முல்லை, பாதிரி, சிறுசண்பகம் முதலிய சுகந்த புஷ்பங்களை எடுத்து அதனுள்ளே போட்டு, புது வஸ்திரத்தினாலே அதன் வாயைக்கட்டி வைத்துக்கொள்ளல் வேண்டும்.

146. விபூதியை எதில் எடுத்து வைத்துக்கொண்டு தரித்தல் வேண்டும்?

பட்டுப் பையிலேனும், சம்புடத்திலேனும், வில்வக் குடுக்கையிலேனும், சுரைக் குடுக்கையிலேனும் எடுத்து வைத்துக்கொண்டு தரித்தல் வேண்டும். குடுக்கைகளின்றிப் பிறவற்றில் உள்ள விபூதியைத் தரிக்கலாகாது.

**147. விபூதியை எந்தத் திக்கு முகமாக இருந்துகொண்டு தரித்தல் வேண்டும்?**

வடக்கு முகமாகவேனும், கிழக்கு முகமாகவேனும் இருந்துகொண்டு தரித்தல் வேண்டும்.

**148. விபூதியை எப்படித் தரித்தல் வேண்டும்?**

நிலத்திலே சிந்தாவண்ணம் அண்ணாந்து "சிவ சிவ" என்று சொல்லி, வலக்கையின் நடுவிரல் மூன்றினாலும் தரித்தல் வேண்டும். இப்படியின்றி, நடுவிரல் ஆழி விரல்களினால் இடப்பக்கம் தொடுத்திழுத்துப் பெருவிரலினால் வலப்பக்கம் தொடுத்திழுத்துத் தரித்தலுமாம். வாய் அங்காந்து கொண்டும், தலை நடுங்கிக்கொண்டும், கவிழ்ந்து கொண்டும் தரிக்கலாகாது. ஒரு விரலாலேனும் ஒரு கையாலேனும் தரிக்கலாகாது.

**149. விபூதி நிலத்திலே சிந்தினால், யாது செய்தல் வேண்டும்?**

சிந்திய விபூதியை எடுத்துவிட்டு, அந்தத் தலத்தைச் சுத்தி செய்தல் வேண்டும்.

**150. எவ்வெவர் முன் எவ்வெப்பொழுது விபூதி தரிக்கலாகாது?**

சண்டாளர் முன்னும், பாவிகள் முன்னும், அசுத்த நிலத்தும், வழிநடக்கும் போதும், கிடக்கும்போதும் தரிக்கலாகாது.

**151. எவ்வெக் காலங்களிலே விபூதி அவசியமாகத் தரித்துக் கொள்ளல் வேண்டும்?**

சந்தியாகாலம் மூன்றிலும், சூரியோதயத்திலும், சூரியாஸ்தமனத்திலும், ஸ்நானஞ் செய்தவுடனும், பூசைக்கு முன்னும் பின்னும், போசனத்துக்கு முன்னும் பின்னும், நித்திரைக்கு முன்னும் பின்னும், மலசல மோசனஞ் செய்து சௌசம் பண்ணி ஆசமித்த பின்னும், தீக்ஷையில்லாதவர் தீண்டிய போதும், பூனை, கொக்கு, எலி முதலியன தீண்டிய போதும், விபூதி அவசியமாகத் தரித்தல் வேண்டும்.

**152. விபூதி தரியாதவருடைய முகம் எதற்குச் சமமாகும்?**

சுடுகாட்டுக்குச் சமமாகும்; ஆதலினால் விபூதி தரித்துக்கொண்டே புறத்தில் புறப்படல் வேண்டும்.

**153. ஆசாரியராயினும் சிவனடியாராயினும் விபூதி தந்தால், எப்படி வாங்கித் தரித்தல் வேண்டும்?**

மூன்று தரமாயினும், ஐந்து தரமாயினும் நமஸ்கரித்து, எழுந்து கும்பிட்டு, இரண்டு கைகளையும் நீட்டி வாங்கித் தரித்துக்கொண்டு முன்போல மீண்டும் நமஸ்கரித்தல் வேண்டும்.

**154. எப்படிப்பட்ட விபூதி தரிக்கலாகாது?**

ஒரு கையால் வாங்கிய விபூதியும், விலைக்குக் கொண்ட விபூதியும் சிவதீக்ஷை இல்லாதார் தந்த விபூதியும் தரிக்கலாகாது.

**155. சுவாமி முன்னும், சிவாக்கினி முன்னும், குரு முன்னும், சிவனடியார் முன்னும் எப்படி நின்று விபூதி தரித்தல் வேண்டும்?**

கொண்டு வந்தவர் தீக்ஷை முதலியவற்றினாலே தம்மின் உயர்ந்தவராயின், அவரை நமஸ்கரித்து வாங்கித் தரித்தல் வேண்டும்; அப்படிப்பட்டவரல்லர் ஆயின், அவ்விபூதிப் பிரசாதத்தை ஒரு பாத்திரத்தில் வைப்பித்து, அதனைப் பத்திர புஷ்பங்களால் அருச்சித்து நமஸ்கரித்து எடுத்துத் தரித்தல் வேண்டும்.

**156. விபூதி தாரணம் எத்தனை வகைப்படும்?**

உத்தூளனம், திரிபுண்டரம் என இரண்டு வகைப்படும்.

(உத்தூளனம்- திருநீறு பூசுதல்)

(தொடரும்...




## மரணத்தை வென்றவன்

காவிரி ஆற்றின் தென்கரையில் ஒரு தபோவனம் இருந்தது. அந்தத் தபோவனத்தில் ஓர் தவசியும் அவரின் துணைவியாரும் வாழ்ந்து வந்தனர்.

இருவரும் உலகம் நன்மை அடைய வேள்விகளும் சிவபூஜையும் செய்து வருவதை தன் கடமையாகக் கொண்டு செயல்பட்டு வந்தனர்.

தனக்குப் பின்பு இந்தப் புனிதத் தொண்டினை செய்வதற்கு நமக்கு ஒரு புதல்வன் இல்லையே என்று ஏங்கினர்.

ஒருநாள் நாரத முனிவர் அந்த தபோவனத்திற்கு வர, தவசி தனது மனக்குறையை அவரிடம் கூறினார்.

உடனே நாரதர், "உலக மேன்மைக்குத் தவம் மேற்கொள்ளும் நீங்கள் ஏன் இறைவனிடம் உங்களுக்காக வேண்டிக்கொள்ளக் கூடாது? தற்பொழுதே தாங்களும் தங்கள் பத்தினியும் தொடர்ந்து சிவனைப் புத்திர பாக்கியம் கேட்டு வணங்குங்கள்" என்று கூறிச் சென்றார்.

நாரதரின் யோசனையைக் கேட்டு தவசியும் முனிபத்தினியும் சிவனை இடைவிடாமல் பிள்ளைப் பேற்றுக்காக வழிபட்டனர்.

இறைவன் மனம் குளிர்ந்து "தவசியே! உமது வேண்டுதலுக்கு இணங்க புத்திர பாக்கியம் அளிக்கிறோம். ஆனால் உனது எண்ணப்படி நீண்டநாள் வாழ்வு உடைய புதல்வன் பிறந்தால் அவன் அறிவு வளம் குன்றி இருப்பான்.

"நல்ல அறிவுள்ள மகனோ தங்களுக்குப் பதினாறு வயதுவரை மட்டுமே உதவுவான். பின்பு விதியின் கணக்கு அவன் வாழ்வில் முடிவு பெற்றுவிடும்.

"எனவே தவசியே! தங்களின் உள்ளக் கருத்துக்கு ஒப்ப ஓர் வரம் அளிக்கக் காத்து நிற்கிறேன்" என்று சிவபெருமான் காட்சி அளித்துக் கூறினார்.

"எம்பெருமானே! இது என்ன சோதனை? நீண்ட நாட்கள் வாழ்ந்தும் அறிவற்ற பிள்ளையால் என்ன நன்மை இருக்கிறது? குறைவான ஆயுளுடன் இருப்பினும் அறிவுடைய

பிள்ளையைத் தானே உலகம் விரும்பும்" என்று வருத்தத்துடன் தவசியும் அவரது மனைவியும் கூறினர்.

அவ்வாறே நிகழட்டும் என்று கூறி சிவபெருமான் மறைந்து சென்றார்.

இறைவனின் வரத்தால் மகன் பிறக்க அவனுக்கு மார்க்கண்டேயன் என்னும் பெயர் இட்டு வளர்த்து வந்தனர்.

மார்க்கண்டேயன் வளர்ந்து சிவபூஜை நடத்துவதில் மிகுந்த ஆர்வம் கொண்டு நந்தவனத்தில் பூ பறித்தல், பூச்செடிகளுக்கு நீர் இட்டுப் பாதுகாத்தல் போன்ற கடமைகளைப் புரிந்து வந்தான்.

மேலும், தனது தந்தையிடமே வேதங்களையும் மற்ற கல்விகளையும் கற்று மேன்மை பெற்றான்.

மார்க்கண்டேயன் இவ்வாறு தனது பணிகளைச் சிறப்போடு செய்து வர, காலங்கள் கடந்து அவனுக்குப் பதினைந்துவயது முடியும் தறுவாய் வந்தது.

அதை அறிந்ததும் தவசியும் அவரது மனைவியும் கவலை கொண்டு வாடிய முகத்துடன் இருந்தனர்.

அதனைத் தெரிந்துகொண்ட மார்க்கண்டேயன் "தங்கள் வருத்தத்திற்குக் காரணம் என்ன?" என்று கேட்டான்.

உடனே, "உனக்கு பதினாறு வயதுவரை தான் இறைவன் ஆயுள்காலம் வழங்கியுள்ளார்; இப்பொழுது பதினைந்து வயது நிறைவுபெறப்போகிறது" என்று துயரத்துடன் கூறினார்கள்.

அறிவில் சிறந்த மார்க்கண்டேயன் இதனைக் கேட்டதும் துன்பம் கொள்ளாமல், "இந்த மண்ணில் பிறந்த அனைவருக்கும் பிறப்பினைப் போலவே இறப்பும் இருக்கும். அதில் கவலை கொள்ள என்ன இருக்கிறது. இது இயற்கையான நிகழ்வுதானே" என்று கேட்டான்.



"பிள்ளையின் பிரிவிற்காக மட்டும் நாங்கள் வருந்தவில்லை. எங்களுக்குப் பிறகு இவ்வுலகம் நெறியோடு இருக்க நீ சேவை புரிவாய் என்று எண்ணியே சிவனிடம் பிள்ளைவரம் கேட்டோம்" என்றார்கள் அன்பு பெற்றோர்கள்.

அப்பொழுது எதிர்பாராத விதமாக நாரத முனிவர் அங்கு வந்தார்.

"தவசியே! கேட்டவர்களுக்கு கேட்ட வரம் தருபவர் சிவபெருமான். நீங்கள் பிள்ளைவரம் கேட்டீர்கள். பிள்ளை வரம் தந்தார்.

"மார்க்கண்டேயன் நீண்ட வாழ்வுபெற மார்க்கண்டேயனையே சிவனிடம் வேண்டிக்கொள்ள கூறிப்பாருங்கள். பிரார்த்தனை பலன் அளிக்கும் அல்லவா?" என்று கூறி விடைபெற்றுச் சென்றார். அன்றுமுதல் ஆயுள் காலத்திற்காக சிவனை நோக்கி தவம் புரிந்தான் மார்க்கண்டேயன்.

நாட்கள் நகர நகர எமதர்மன் தனது தூதர்களை அனுப்பி மார்க்கண்டேயன் உயிரைக் கவர்ந்து வருமாறு கூறினான்.


எமதூதர்கள் தனது தலைவனின் ஆணைப்படி மார்க்கண்டேயனை வந்து அடைந்தனர்.

மார்க்கண்டேயனோ தவம்புரிந்த வண்ணம் சிவமந்திரங்களை உரைத்து சிவனை வழிபாடு செய்துகொண்டு இருந்தமையால், எம தூதர்கள் நெருங்கியதும் மார்க்கண்டேயனின் தவவலிமையால் தர்மநெறியின் தீ பெரும் நெருப்பாய் எழுந்து தூதர்களைத் தடுக்க தூதர்கள் பயந்து எமலோகம் திரும்பி எமதர்ம ராஜாவிடம் நிலைமையைக் கூறினர்.

தூதுவர்களால் மார்க்கண்டேயன் உயிரைக் கவர்ந்துவர இயலவில்லை என்பதை அறிந்த எமதர்மன் தானே தனது எருமை வாகனத்தில் ஏறி பூலோகம் வந்தான்.

எமதர்மனைக் கண்ட மார்க்கண்டேயன் அவனது பயங்கரமான அலைவீசும் கண்களையும் கரிய உடம்பினையும் கண்டு அச்சம் அடைந்து, "இறைவா, உனது திருவடியே என்னைப் பாதுகாக்க வேண்டும்" என்று கூறி தான் வழிபட்டுக்கொண்டிருந்த சிவலிங்கத்தைத் தனது இரு கரத்தாலும் இறுக கட்டிக்கொண்டான்.

எமதர்மன் அதை உணராதவனாய் தனது கொடுமையான பாசக்கயிற்றை மார்க்கண்டேயனை நோக்கி வீசினான்.



பாசக்கயிறு மார்க்கண்டேயனோடு அவன் அணைத்துக் கட்டியபடி இருந்த சிவலிங்கத் திருமேனியிலும் பட்டு நின்றது.

சென்ற உடனே எவர் உயிரையும் எடுத்துக்கொண்டு வரும் அந்தப் பலமிக்க கயிறு செயல்படாமல் போனது.

சிவபெருமான் லிங்கத்திலிருந்து வெளிப்பட்டு எமனைத் தன் காலால் உதைத்து மூர்ச்சையடைந்து விழச்செய்தார்.

"மார்க்கண்டேயா! என்மீது கொண்ட உனது அளவிலா அன்பால் என்றும் மரணமில்லாமல் பதினாறு வயது இளமையுடனே வாழ்வாய்" என்று வரம் அளித்தார்.

எமதர்மன் செயலற்றுப் போனால், தான் துன்புற நேரும் என அறிந்த பூமாதேவி சிவனை வேண்டிக்கொள்ள எமதர்மனை செயல்பட மீண்டும் எழுப்பித் தந்தார்.

எமதர்மன் தனது தவறை உணர்ந்து இனி சிவனடியார்களை துன்பமடையச் செய்ய மாட்டேன் என்று கூறி வணங்கினான்.

**இறைவன் நம்பிக்கையில்லாதவர்களுக்கு கோயிலில் உள்ள சிலை கல்லாகத் தெரியும். இறைவனை நம்பிக்கையுடன் வழிபடும் பக்தர்களுக்கு அது கல்லாகவும் தெரியாது. சிலையாகவும் தெரியாது. அதுவே இறைவனின் திருவுருவம் என்று நினைத்துப் போற்றிப் புகழ்ந்து வரம்பெற்று நல்வாழ்வு வாழ்வார்கள்.**

# ஈசா வாஸ்ய உபநிஷதம்

சமஸ்கிருதத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்துப் பாடலாக்கம் செய்தவர்:- திரு பூ. சோதிநாதன்.

## மந்திரம் 6

தன்னுடை ஆத்ம னில்தான்
தரணியின் உயிர்கள் யாவும்
என்றெவன் காண்கி றானோ
எவ்வுயிர் களிலும் ஆங்கே
தன்னுடை ஆத்ம னைத்தான்
தடையறக் காண்கின் றானோ
அன்னவன் எவரை வேறாய்
அறிந்துபின் வெறுத்தல் கூடும்

## மந்திரம் 7

அனைத்துயி ராயும் ஆகி
அமையுமவ் வான்மா தன்னை
நினைக்குமவ் வொருமை உள்ளம்
நிலைபெறப் பெற்ற மாந்தன்
தனையொரு மயக்கம் தானோ
தகர்த்திடல் கூடும்? பின்னர்
நினைக்கவும் ஒண்ண மாட்டா
நிகரிலாக் கவலை உண்டோ.

## மந்திரம் 8

அனைத்தினதும் உட்பொருளை அறிந்தவனே தன் மனத்தை
நினைத்தபடி வசமாக நிறுத்துகின்றான் அன்னவனே
அனைத்தறிவும் தன்னிடத்தே அடக்கியவன் ஆகின்றான்
பினையவனோ என்றென்றும் பிறர்தனிலே சாரானாம்.

அன்னவனே பொருள்களதும் அகஇயல்பை என்றென்றும்
தன்னளவில் உள்ளபடி சரியாக அறிகின்றான்
அன்னவனே ஒளிமயமாம் அருவினதாம் முழுமையுமாம்
என்புதசை பாவமிலா எழில்தூய இறை அடைவான்.

### மந்திரம் 9

காரிருள் மூழ்கு கின்றார்
　　　　காணுயர் நோக்கம் இன்றிப்
பாரினில் செயல்கள் செய்யும்
　　　　பாங்குடை மனிதர் எல்லாம்
யாரினித் தகுதி இன்றி
　　　　இருப்பினும் தியானம் செய்யின்
பேரிருள் அதிலும் மேலாய்
　　　　பெற்றிட உழல்வார் போலாம்.

### மந்திரம் 10

பெருமைசேர் மகான்கள் சொன்ன
　　　　பெரியதாம் விளக்கம் இ:.தே
கருதிய செயலி னாலும்
　　　　கடுந்தவத் தியானத் தாலும்
வருபலன் வேறு வேறாம்
　　　　மனதினில் இருத்திக் கொள்வாய்
இருநில மீதில் இந்த
　　　　இயல்பினை உணர்ந்து கொண்டே.

### மந்திரம் 11

எவனொரு மாந்தன் இங்கே
　　　　இயல்பினால் தியானம் செய்கை
இவற்றினில் இரண்டை யும்தான்
　　　　இணைத்துமே அறிகின் றானோ
அவன்செயல் களினால் சாவை
　　　　அரிதிலே கடத்த லோடு
தவமெனும் தியானத் தாலே
　　　　தான்இறா நிலையே சேர்வான்

(தொடரும்...

## குருபூஜை தினங்கள்

| | | | |
|---|---|---|---|
| யூலை | 01 | ஆனி 17 திங்கள் | கலிக்காமர் |
| யூலை | 12 | ஆனி 28 வெள்ளி | மாணிக்கவாசகர் |
| யூலை | 13 | ஆனி 29 சனி | அமர்நீதிநாயனார் |
| யூலை | 22 | ஆடி 06 திங்கள் | பட்டினத்தார் |
| ஆகஸ்ட் | 13 | ஆடி 28 செவ்வாய் | சுந்தரமூர்த்திநாயனார் |
| | | | சேரமான் பெருமாள் நாயனார் |

தமிழகத் திருக்கோயில் வரிசை:

# திருப்பட்டூர் ஸ்ரீ பிரம்மபுரீஸ்வரர் திருக்கோவில்

-வல்வையூர் அப்பாண்ணா-

தமிழ்நாட்டின் நடுநாயகமாக இருக்கின்ற திருச்சி மாநகரின் காவிரியின் வடகரையில் திருச்சி - சென்னை நெடுஞ்சாலையில் சமயபுரம் தாண்டி (திருச்சியிலிருந்து சமயபுரம் 12 கி.மீ) இன்னமும் 13 கி.மீ தூரம் பயணித்து இடது புறமாக "பட்டூர் 5 கி.மீ" எனும் அம்புக்குறியிட்ட பெயர்ப்பலகை உள்ள இடத்தில் திரும்பினால் வீதி திருப்பட்டூர் கிராமத்தையடைகிறது. இங்குதான் பழமையும் பெருமையும் வாய்ந்த "ஸ்ரீ பிரம்மபுரீஸ்வரர்" ஆலயம் உள்ளது. திருக்கோவிலுக்கு முன்பாக சிறிய நான்கு கால் மண்டபம் உள்ளது. இம் மண்டபத்தின் இடது புறமாக புதிய திருமண மண்டபம் ஒன்றும், கோவில் அலுவலகமும் காணப்படுகிறது. அத்துடன் கோவில் சார்பான அர்ச்சனைப் பொருட்கள் விற்பனை செய்யப்படும் இரண்டு கடைகளும், அருகே இரண்டு வீடுகளும் உண்டு. இந்த இரு அக்கிரகார வீடுகளும் குருக்கள் மனைகளாக இருக்கலாம். வலதுபுறம், பரந்த- பழமையான ஒரு மண்டபமும் முகப்பும் காணப் படுகிறது. மண்டபத்தின் உட்புறம் பாவனைக்கு ஏற்றதாக இல்லாமல் சிதைவடைந்து உள்ளது. இதன் அமைப்பும் முறையும் இம்மண்டபம் கோவிலின் "வசந்த மண்டபமாக" நீண்டகால பயன்பாட்டில் இருந்திருக்கும் என ஊகிக்க முடிகிறது.



அகன்ற முகப்பு மண்டபத்தின் மேற்பகுதியின் நடுவே இடபாருடராக சிவனும் பார்வதியும் வலது பக்கம் கணபதியும் இடது பக்கம் வள்ளி- தெய்வானை சமேத முருகப்பெருமானும் சுதைச் சிற்பங்களாக உள்ளனர். கிழக்கு நோக்கி கம்பீரமாகக் காட்சியளிக்கும் ஐந்து நிலைகள் கொண்ட ராஜகோபுரம் தாண்டி உள்ளே நுழைகிறோம். கொடிமரத்தினை அடுத்து ஒரு நான்கு கால்கள் உள்ள உருத்திராட்சப் பந்தலின் கீழே நந்தியெம்பெருமான் வீற்றிருக்கிறார். நந்திக்கு மேற்பகுதி முழுவதும் மாலை தோரணங்கள் போன்று முற்றுமுழுதாக உருத்திராட்ச விதைகளினால் அலங்கரித்திருந்தமை எங்கும் காணாத ஒரு அம்சமாகத் தெரிந்தது. இந்த நந்தி மண்டபத்தை "வேதமண்டபம்" என்கிறார்கள். நடு மண்டபத்தோடு இணைந்தபடி தெற்கும் வடக்குமாக புறவீதி தொடர்கிறது. மண்டபத்தின் நடுவே காணப்படும் நான்கு அற்புதமான சிற்ப வேலைப்பாடமைந்த தூண்கள், திருவானைக்காவில் நடு நான்கு தூண்களையும் நினைவுபடுத்தி நிற்கிறது. தூண்கள்

நான்கும் மெலிவானது. ஆனால் நெடுத்தவை. வெவ்வேறு சிற்ப அழகு கொண்டவை. தூண்களின் அரைவாசிக்குக் கீழ்ப்பட்ட பகுதிகளில் காணப்படுகின்ற யாழிகள், இரண்யனைக் கொல்லும் நரசிம்மர், பிரகலாதனுக்கு அருளுதல், நரசிம்மரின் தோற்றம் எனக் கல்லில் வடிக்கப்பட்டிருந்த சிற்பங்களின் அழகு நம்மைக் கட்டிப்போடுகிறது. பார்த்தது பார்த்தபடி அப்பால் நகரமுடியாமல் மெய்மறந்து நிற்கிறோம். இந்த அளவுக்கு இல்லையாயினும் சிறப்பான சிற்பங்கள் கொண்ட இன்னமும் 10சோடித் தூண்கள் தெற்கு வீதியில் தெற்கு வாசல்வரை தொடர்கிறது.

நரசிம்மச் சிற்பங்களின் பின்புறமுள்ள உள் மண்டப வாயிற் சுவரில் அப்பர், சுந்தரர் இருவரும் திருப்பட்டூர் மீது பாடிய வைப்புப் பாடல்கள் (திருப்பட்டூர் மூவர் பாடல்பெற்ற ஸ்தலமல்ல) எழுதப்பட்டுள்ளது. இந்த இரு பாடல்களுடன், திருக்கைலையில் சேரமான் பெருமாள் நாயனாரால் பாடப்பெற்ற "திருக்கைலாய ஞான உலா"வைக் கேட்ட மாசாத்தனார் (ஐயனார்) இங்கே பட்டூரில் அதனை வெளிப்படுத்தி உலகறிய வைத்தார் எனும் குறிப்பும் சலவைக் கல்லில் பொறிக்கப்பட்டுள்ளது.

உட்பிரகாரம் செல்லும் வாயிற்கதவு பழமையைப் பறைசாற்றி நிற்கிறது. மகாமண்டபத்தில் இன்னொரு வாசல். வாசலருகே இரண்டு பெரிய துவார பாலகர்களை வணங்கி உள்ளே பார்த்தால் அர்த்த மண்டபத்தை அடுத்து கருணைக் கடலான ஈசன் லிங்கவடிவில் வீற்றிருப்பது தெரிகின்றது. பிரம்மனுக்கு அருள்புரிந்த ஈசனாதலால் அவரது பெயர் (1) "பிரம்மபுரீஸ்வரர்" என்றாயது. அளவான அலங்காரத்துடன் பிரம்மபுரீஸ்வரர் அருள் பாலிக்கிறார். மூலவரைத் தரிசனம் செய்துகொண்டிருந்த எம்மைப் பார்த்து, கருவறையின் உள்ளேயிருந்து வெளியே வந்த ஆலய அர்ச்சகர், "பிரம்மா தரிசனம் முடிந்ததா? முதல்லை பிரம்மாவைத் தரிசித்துவிட்டு வாங்க" எனக் கூறினார். நமக்கு இது ஆச்சரியமாக இருந்தது. உள்மண்டப வாயில் தாண்டி உள்ளே வரும் அனைவருமே கருவறையின் லிங்கமூர்த்தியினைக் கண்டுகொள்ளாமல், கருவறையின் வலப்புறமாக கோயில் கொண்டிருக்கும் "பிரம்மா" சந்நிதியை நோக்கியே செல்கின்றனர். நாமும் மகாமண்டபத்தை விட்டிறங்கி வலமாக வருகிறோம்.

பிரம்மபுரீஸ்வரர் அமர்ந்துள்ள சந்நிதியின் வலப்புறத்தே கிழக்குப் பார்த்தபடி பிரம்மாவுக்கான பெரிய சந்நிதி காணப்படுகிறது. பிரம்மனுக்குத் தனிக்கோவில்கள் இல்லை என்பது பொதுவான கருத்து. ஆனால் பிரம்மா இல்லாத சிவ ஆலயங்களே இல்லை என்பதுவே உண்மை. எல்லாச் சிவன் கோவில்களிலும், ஈசனின் இடப்புறத்தில் அபிஷேகத் தீர்த்தம் வரும் கோமயத்தின் மேலாக கோஷ்ட மூர்த்தமாக பிரம்மா வீற்றிருப்பதை நாம் பார்க்கிறோம். ஆனால் திருப்பட்டூரில் மட்டுமே பெரிய தனிச் சந்நிதியுடன் தலையெழுத்தை மங்களகரமாக மாற்றும் சக்தியுடன் பிரம்மா வீற்றிருக்கிறார். "ஈசனுக்கும் ஐந்து தலை, எனக்கும் ஐந்து தலை, உலகத்தைப் படைக்கும் சக்தி என்னிடமே உள்ளது" என பிரம்மாவுக்கு உண்டான அகம்பாவத்தினால் ஈசனை மதிக்காத போக்குடன் செயற்பட்டார்.

பிரம்மனுடைய அகங்காரத்தை அழித்து அவரின் நிலையை உணரவைக்க எண்ணிய ஈசன், "ஐந்து தலை என்பதால் அஞ்சுதல் இல்லாமல் இருக்கிறாய்" என்று அவருடைய ஒரு தலையைக் கொய்துவிட்டதுடன் "உன்னுடைய மதிப்பையும் இழக்கக் கடவாய்" எனவும் சாபமிட்டார். பிரம்மன் தனக்குரிய மதிப்பையுமிழந்ததுடன் படைப்பாற்றலையும்

இழந்தார். தன் நிலைமை உணர்ந்த பிரம்மன் திருப்பட்டூரில் பன்னிரண்டு சிவலிங்கங்களை பிரதிஷ்டை செய்து வழிபாடு செய்து வந்தார். பிரம்மனின் வழிபாட்டினில் மகிழ்ந்த ஈசன் கூடுதலாக ஒரு வரமும் வழங்கினார். "எல்லோருடைய தலையெழுத்தை நிர்ணயிக்கும் உன்னுடைய தலையெழுத்தை யாம் மாற்றியதுபோல் இங்கு வந்து உன்னை வழிபாடு செய்பவர்களுக்கு மீண்டும் ஒருமுறை அவர்களுடைய தலையெழுத்தை மாற்றுவாயாக" என்று ஈசன் கொடுத்த வரத்தினால் பிரம்மன் மீண்டும் படைத்தற் தொழிலைத் தொடங்கினார்.

பிரகாரப் பாதையிலிருந்து மூன்று படியேறிச் செல்லும் இடத்திலிருந்து, தென்பிரகாரச் சுற்றில் இறங்கும்வரை மாபிள் கற்கள் பதிக்கப்பட்டு அழகுபடுத்தியுள்ளார்கள். அந்த மண்டபமும் தூண்களும், வர்ணங்கள் பூசப்பட்டு சிறந்த பராமரிப்பில் இருப்பது தெரிகிறது. அர்ச்சனைத் தட்டு, மற்றும் நேர்த்திகளுக்காக வந்திருப்பவர்கள் ஒரு வரிசையிலும், பிரம்மாவைத் தரிசிக்கச் செல்பவர்கள் ஒரு வரிசையிலுமாக மாபிள் தரையில் கால்பதித்து மக்கள் இரு வரிசைகளில் செல்கின்றனர். நாமும் தரிசன வரிசையில் இணைந்து கொள்கிறோம். சந்நிதானத்தில் தாமரைப்பீடத்தின்மேல் சம்மணம்கட்டி அமர்ந்த நிலையில், முன்கைகள் இரண்டும் கால்களின் மேல் பதிந்த நிலையிலும், பின் கைகள் இரண்டும் மேலேயுமாக பிரம்மா அமர்ந்திருக்கிறார். புன்னகை தவழும் பொலிவான முகம், நெற்றியில் நிறைந்த திருநீற்றுப் பூச்சு, புருவ மத்தியில் பெரிய சந்தனப் பொட்டு, மத்தியில் குங்குமத் திலகம், அளவான மாலை அலங்காரம், தோளிலிருந்து பாதங்களுக்குக் கீழேயும் தொங்குகின்ற சால்வை என நிறைந்த பொலிவுடன் பிரம்மா அமர்ந்திருக்கிறார். பிரம்மாவின் நான்கு முகங்களில் ஒன்று நேராகவே தெரிகிறது. இருபுறமும் இரு முகங்கள் பக்கவாட்டில் தெரிகின்றன. பின்புறமுள்ள நான்காவது முகம் நன்கு தெரியும்படியாக பின்பக்கச் சுவரில் நிலைக்கண்ணாடி ஒன்றினைப் பொருத்தியுள்ளனர். பொதுவாகச் சிவன் கோவில்கள் அனைத்திலும், கருவறையின் தீர்த்தம் வெளியேறும் கோமுகையின் மேலே கருவறையின் மாடச்சுவரில் கோஷ்ட மூர்த்தமாக பிரம்மா அமர்ந்திருப்பதையே பார்த்து வணங்கிப் பழக்கப்பட்ட எமக்கு திருப்பட்டூரில் பிரம்மாவின் தனிக்கோவிலும், உருவப் பொலிவும், பிரம்மா சந்நிதானத்தின் முக்கியத்துவமும் பிரமிக்க வைக்கிறது.

இது உட்பிரகாரத்தின் தென் பகுதி. மூலவர் சந்நிதானம், பிரம்மா சந்நிதி இரண்டுமே பிரகாரத்தைவிட 3அடி உயர்ந்திருக்கிறது. அதேபோல தென் பிரகாரத்தின் இடது பக்கமாக ஒரு மண்டபம் 3அடி உயர்ந்தேயிருக்கிறது. தூண்களுள்ள இம்மண்டபம் தெற்கு, மேற்கு, வடக்குப் பிரகாரங்கள் வரை நீண்டு செல்கிறது. ஆகவே பிரகாரங்களின் இரு மருங்கும் உயர்ந்துள்ளதால் நடுவே ஒரு நடைபாதை மாதிரி உட்சுற்றுப்பிரகாரம் அமைந்திருக்கிறது. பிரம்மாவின் தரிசனத்தை முடித்துக்கொண்டு தென்பிரகார நடுப்பகுதியில் கால் வைத்தால் எதிரே ஒரு கண்ணாடி அடைப்பினுள்ளே நுழையும் கதவு காணப்படுகிறது. "ஸ்ரீ பதஞ்சலி முனிவர் சந்நிதி" எனவும், "இது தியானம் செய்யுமிடம்" எனவும் கதவு வாசலின் இரு பக்கமும் பெரிய எழுத்தில் ஒட்டப்பட்டிருக்கிறது. உள்ளே, ஓரிருவர் பத்மாசன நிலையில் அமர்ந்தபடி தியானத்தில் இருப்பதையும் பார்க்க முடிந்தது. கிழக்கு மேற்காக உள்ள அம்மண்டபத்தின் ஒரு முனையிலிருந்து மறுமுனைவரை நடக்கிறேன். கொங்கணர், பதஞ்சலி, சட்டைநாதர், பச்சமுனிவர், சிவவாக்கியர், யோகர், பாம்பாட்டிச் சித்தர், இராமதேவர், சுந்தரானந்தர், இடைக்காடர், திருமூலர், அருணகிரிநாதர் என அனைத்துச் சித்தர்களின்

திருவுருவங்களும் சித்திரமாக வரையப்பட்டுள்ளன. மண்டப நடுவே ஒரு சிறிய லிங்கம் காணப்படுகிறது. இதுவே **"பதஞ்சலி முனிவர் யோக சமாதியடைந்த இடம்"** என எழுதப்பட்டுள்ளது. லிங்கத்தின் பின்புறம் தவக்கோலத்தில் பதஞ்சலி முனிவரின் இறுதிவேளைத் தோற்றம் - எலும்பிலே ஒட்டிய தோலுடன் - நீண்ட தாடி மடிமீது தவழ்ந்தபடி- பார்க்கக் கண்களில் கண்ணீரை வரவழைக் கிறது. மண்டபத்தின் வடக்குப் பாதியில் ஆதிசங்கரர், தெட்சணாமூர்த்தி, பட்டினத்தார், நால்வர், சப்த மாதர்கள் ஆகியோரின் படங்கள் அழகுற வரையப்பட்டுள்ளன.



இப்போது நாம் உட்பிரகாரத்தின் மேற்குச் சுற்றுக்கு வருகிறோம். தென்மேற்கு மூலையில் பெரியது, நடுத்தரம், சிறியது என மூன்று பருமனில் கணபதியின் விக்கிரகங்கள் அந்தச் சிறிய சந்நிதியின் உள்ளே காணப் படுகின்றன. அடுத்து (2) ஸ்ரீ பழமலைநாதர் லிங்க வடிவில் அருள் பாலிக்கிறார். கருவறைக்குச் சரி பின்னே கிழக்கு நோக்கி இடப்பாக மயிலில் அமர்ந்தபடி **ஸ்ரீ கந்தபுரீஸ்வரர்** (முருகன்) வள்ளி தேவசேனா சகிதம் மிகப்பெரிய உருவமாக உள்ளார். அடுத்துள்ளது ஸ்ரீ கஜலெட்சுமியின் சந்நிதி. அருகாமையிலேயே சுதையினாலான இன்னுமொரு ஸ்ரீ கஜலெட்சுமியின் பெரிய திருவுருவமும் - உருவத்தின் பருமனுக்கு ஏற்ற படி இருபுறமும் உள்ள யானைகளும் பெரியவையாகவே இருந்தன.

வடக்குச் சுற்று மண்டபத்தின் தரைப்பகுதி பெரும்பாலும் சேதமடைந்தே காணப்படுகிறது. மண்டபத்தின் நடுப்பகுதியில் பள்ளியறை புதிதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆனாலும் பள்ளியறைப் பிரவேசம் இன்னமும் நடைபெறவில்லை என்பது தெரிகிறது. பள்ளியறையை ஒட்டியபடி (3) ஸ்ரீ பாதனேஸ்வரர் எனப்படுகின்ற பாதாள ஈஸ்வரர் கிழக்குப் பார்த்தபடி நந்தி பலிபீடத்துடன் காணப்படுகிறார். வடகிழக்கு மூலையில் தெற்கு நோக்கியபடி அகன்ற வசந்த மண்டபம் காணப்படுகிறது. தரைப்பகுதி முழுவதும் மாபிள் பதிக்கப்பட்டு அண்மையில் புதுப்பித்துள்ளமை தெரிகிறது. உட்பிரகார கிழக்குச் சுற்றின் இடது புறத்தில் காலபைரவர், சூரியன், ஸ்ரீ பத்தநந்தி, (4) ஸ்ரீ சுத்தரத்தினேஸ்வரர் ஆகிய சந்நிதிகள் மேற்குப் பார்த்தபடி காணப்படுகின்றன. இந்த வரிசைக்கு முன்பாக நவக்கிரகங்கள் உள்ளன.

கருவறையின் கோஷ்டத்தில் ஸ்ரீ நிருத்த கணபதியும், தனிச்சந்நிதியில் தெட்சணாமூர்த்தியும் கருவறையின் சரி பின்புற மாடத்தில் லிங்கேஸ்வரர் அமர வேண்டிய இடத்தில் ஸ்ரீ மகா விஷ்ணுவும், கோமயத்துக்கு மேல் மாடத்தில் பிரம்மாவும் (சிறிய உருவில்), அருகே துர்க்கையும் உள்ளனர். வழமையான இடத்தில் ஸ்ரீ சண்டேஸ்வரர் அமர்ந்துள்ளார். கோபுர நுழைவு வாசலினூடாக வெளியே வந்து கொடிமரம், நந்தியெம் பெருமானுக்கு இடது பக்கமாக உள்ள பெரிய வாசலூடாக உள்ளே போகிறோம். நிமிர்ந்து

மேற்காகப் பார்த்தால் வடமேற்கு மூலையில் அம்பாள் கருவறையும் - கருவறைக்கு முன்பாக உள்ள மகாமண்டபமும் தெரிகிறது. நமக்கு இடது கைப்புறமாக சிறிய சந்நிதியில் வடக்குப் பார்த்தபடி லிங்கவடிவில் அமர்ந்துள்ள (5) தாயுமானவரை வணங்கி விடைபெற்று அம்பாளின் மகாமண்டபத்து மேடையில் கால் பதிக்கிறோம். அழகிய சிற்ப வேலைப்பாடமைந்த தூண்களுடன் கூடிய மகாமண்டபம் அது. உள்ளே நின்ற திருக்கோலத்தில் மலர்ந்த முகத்தோடும் - அளவான அலங்காரத்தோடும் காணப்படும் அம்பிகை "பிரம்மநாயகி" என அழைக்கப்படுகிறாள். பிரம்மாவுக்கு அருளி "பிரம்மபுரீஸ்வரர்" எனப் பெயர் கொண்ட நாயகனின் நாயகியாக இருத்தலினால் அம்பாளுக்கு "பிரம்மநாயகி" எனும் பெயர் மிகப்பொருத்தமே. அம்பாள் கருவறையின் கோஷ்டத்தின் 5 மாடங்களிலும் பிராமி, மாகேஸ்வரி, சரஸ்வதி, கௌமாரி, வைஷ்ணவி ஆகியோர் வீற்றிருக்கின்றனர். தாயுமானவர் சந்நிதிக்கு எதிரே ஒரு சிறிய கதவு வழியாக உள்ளே போகிறோம்.

கால் ஏக்கர் நிலப்பரப்புள்ள பரந்த பகுதி. நமது இடது கைப்பக்கமாக "பிரம்ம தீர்த்தம்" எனும் நான்கு பக்கமும் குத்துப் படிக்கட்டுக்கள் கொண்ட மிக ஆழமான ஒரு குளம், அடியில் தெளிவான சுத்தமான நீருடன் காணப்படுகிறது. இந்த பிரம்ம தீர்த்தத்தை விட இன்னமும் பகுள தீர்த்தம், சண்முக நதி என இரு தீர்த்தங்கள் உள்ளதாகவும், பகுள தீர்த்தம் ஆலயத்திலிருந்து வடகிழக்கு மூலையில் சுமார் 150 மீற்றர் தொலைவிலும், சண்முகநதி ஆலயத்திலிருந்து கிழக்குப் பகுதியில் 500 மீற்றர் தொலைவில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கிப் பாய்வதாகவும் அங்குள்ளவர்கள் தகவல் தந்தனர். பிரம்ம தீர்த்தத்தின் பின்புறம் குளத்தைப் பார்த்தபடி (6) ஸ்ரீ மண்டுகநாதர், (7) ஸ்ரீ ஏகம்பேஸ்வரர் (8) ஸ்ரீ அருணாசலேஸ்வரர் (9) ஸ்ரீ கைலாசநாதர் என நான்கு. கிழக்கு நோக்கிய சந்நிதிகளும் (10) ஸ்ரீ ஜம்புகேஸ்வரர் (11) ஸ்ரீ காளத்தீஸ்வரர் (12) ஸ்ரீ சப்தரிசீஸ்வரர் என மூவரின் சந்நிதிகளும் மேற்குப் பார்த்தபடியும் உள்ளன. ஸ்ரீ கைலாசநாதர் சந்நிதி தவிர ஏனையவை அனைத்தும் ஏறக்குறைய ஒரே அளவான சிறிய சந்நிதிகளாகும். அனைத்திலும் லிங்கவடிவிலேயே இறைவன் வீற்றிருக்கிறான்.

இந்த ஏழு லிங்க மூர்த்தங்களும் கால் ஏக்கர் அளவு கொண்ட நிலப்பரப்பில் தள்ளித் தள்ளிக் காணப்படுகின்றது. இந்தச் சந்நிதிகள் அனைத்தையும் 5அடி அகலம் கொண்ட அழகிய நடைபாதையால் இணைத்துள்ளனர். நடைபாதை தவிர்ந்த ஏனைய பகுதிகள் முழுவதும் பூ மரங்கள் நாட்டப்பட்டு இப்பொழுதுதான் வளர்ந்து வருகிறது. சொற்ப மாதங்களில் அந்த மரங்கள் அனைத்தும் வளர்ந்து பூத்துக் குலுங்கி அழகிய நந்தவனமாகி இடையிடையே உள்ள சந்நிதானங்களுடன், சுத்தமான பிரதேசமாக இருக்கப்போகும் அழகைச் சிந்திக்க ஆனந்தமாக இருக்கிறது. இந்த ஏழு சந்நிதிகளும் நடுவே ஸ்தல விருட்சமான மகிழமரம் கிளைபரப்பி பெரிதாக வளர்ந்து நிற்கிறது.

இந்த ஏழு சந்நிதிகளில் வடமேற்கு மூலையில் உள்ள (9) ஸ்ரீ கைலாசநாதர் சந்நிதி பற்றித் தனியாகக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டியுள்ளது. கருவறை - மண்டபங்கள் - நந்தியும் பலிபீடமும் - உட்பிரகாரம் - வெளிப்பிரகாரம் கொண்ட ஒரு கோவிலின் அமைப்பினை நினைவுபடுத்துங்கள். உங்கள் மனக்கண்ணில் வருகின்ற கோவிலின் மிகச்சிறியதொரு மாதிரியினைக் கற்பனையில் கொண்டு வாருங்கள். மேலே சொன்ன அத்தனையும் உண்டு இந்தக் குட்டிக் கோவிலில். ஸ்ரீ கைலாசநாதர் லிங்கவடிவில் ஆவுடையார் பகுதி இல்லாமல், உயர்ந்த லிங்கபாணமாக, 3" அளவிலான பட்டைகள் தீட்டப்பட்ட லிங்க வடிவாகக் காணப்படுவது வித்தியாசமான அம்சமாக இருந்தது.

எட்டித்தொடும் தூரத்தில் மென்மையான வேலைப்பாடுகள் கொண்ட மேல் விதானங்கள். விதானங்களைத் தாங்கி நிற்கும் உயரம் குறைந்த குட்டித் தூண்களில் காணப்படும் நெளிவு சுளிவுகளும், சேதமடைந்துள்ள குட்டிப்படி வரிசைகளும், சுண்ணாம்புக்காறை அகன்ற நிலையில் உட்புறம் தெரியும் செங்கற்களும், உடம்பினை ஒடுக்கித் தலையைத் தாழ்த்திக் (நிமிர்ந்து நடந்தால் தலை போய்விடும்) குனிந்து நடக்கவேண்டிய வாசல்களும் - பிரகாரங்களும் - சுவரும் கால ஓட்டத்தினால் சிந்திக்கிடக்கும் சுண்ணாம்புப் படிவமும். (ஒரு வகை பெருமணலும் அந்தப் படிவத்தில் காணப்படுகிறது.) இவையெல்லாம் அச்சந்நிதியின் அழகைக் கூட்டி நெஞ்சைவிட்டகலாத நிழல் ஓவியமாக மனதில் படிந்துள்ளன. எதிரே 50 மீற்றர் தூரத்தில், இந்தக் குட்டிக் கோவிலுக்குச் சற்றேனும் பொருத்தமில்லாதபடி, மிகப்பெரிய நந்தியொன்று ஸ்ரீ கைலாசநாதரைப் பார்த்தபடி உள்ளது.

பிரம்மா பன்னிரண்டு லிங்கங்களைப் பட்டுரில் அமைத்து வழிபட்ட விபரத்தை முன்னரே பார்த்தோம். (1) என இலக்கமிட்ட கருவறையின் ஸ்ரீ பிரம்மபுரீஸ்வரர் தொடக்கம் வரிசையாக (12) வரை இலக்கமிடப்பட்ட லிங்கங்களே பிரம்மா வழிபட்டுப் பேறடைந்த லிங்க மூர்த்தங்களாகும்.

## "சித்தத்துள கிட்ட அருள்வான்"

சந்நிதிக் கந்தன்
கழற்கோர் கலிமாலை - 4

கர்ச்சித் தலை சப்தித் திடுமொலி
கொட்டும் முர சொத்துத் திசைதர
மெத்தப் புக முற்றுற் றொளிர்பதி - கல்லோடை
வைக்கப் பனி கொட்டக் கிரிதரு
சக்திச் சரம் நட்டுத் தொழுதெழச்
சித்தத் துள கிட்டத் திருவருள் - புரிவேலா
இச்சைப் படு மிச்சந் நிதியதில்
மக்கட் கிடர் தந்திட் டலைபவர்
பற்றிக் குறை யுற்றுத் திரிதரு - கதிர்காமர்
இட்டப் படி யற்பர் உலவிட
பத்துத் தினம் விட்டிட் டவரது
துட்டத் தலை வெட்டித் தரையெறி - வடிவேலா
பட்சத் தொடு ரட்சித் திருமரு
தர்க்குக் கழ லர்ச்சித் திடவளி
சொத்தைப் பகு தற்குக் கொருமுறை - யுரைகோவே
பற்றுக் கொடி ழைத்துப் புகழதை
பித்துக் கொடு முத்துத் தமிழினில்
தித்தித் திடச் சுற்றித் தருமெனைக் - காவாயோ?
மெச்சத் தக வுற்றுற் றுலகினில்
மிக்கத் தன முற்றுற் றுனதருள்
சித்தித் தடி யுற்றுக் கிடவென - அருளாயோ?
மெட்டுப் பறை கொட்டத் திருவுரு
வைத்துத் தொழு சித்ரக் கதவடை
செட்டிக் குலம் விட்டிட் டகலருள் - முருகோனே!

-இராஜையா குகதாசன்-

# ஆடிமாத வாராந்த நிகழ்வுகள்

**05.07.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "திருத்தொண்டின் நெறி"

வழங்குபவர் :- திரு ஆ. விநாயகமூர்த்தி அவர்கள்

[இளை. சிரேஷ்ட விரிவுரையாளர்]

---

**12.07.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

"பக்திமாலை"

வழங்குபவர் :- திரு S.G. சாந்தன் அவர்கள்

(பக்கவாத்திய சகிதம்)

---

**19.07.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "தேவி ப[illegible]வதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. [illegible]ாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரி[illegible]ரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

**26.07.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்**

## ஞானச்சுடர் ஆடிமாத வெளியீ[illegible]

வெளியீட்டுரை :- சைவப்புலவர் திருமதி சசிலேகா ஜெயராஜன் அவர்[illegible]

மதிப்பீட்டுரை :- திருமதி கௌரி சுரேசன் அவர்கள்

[ஆசிரியர்]

187ஆவது மல[illegible]

பதிவு இல. QD/25/NEWS/2013

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

